https://www.facebook.com/uthayan.print https://twitter.com/uthayanprint | விலை : ரூபா.20 | பக்கங்கள் : 24

காலநிலை
மழையுடன் கூடிய காலநிலை காணப்படும். காற்று மணிக்கு 70 கி.மீ. வேகத்தில் வீசும்.

# உதயன்

Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 006 வள்ளுவர் ஆண்டு: 2045 கார்த்திகை 16, செவ்வாய்க்கிழமை 02.12.2014

## பொது எதிரணி ஒப்பந்தம் கைச்சாத்தானது

கொழும்பு, டிசெ.2
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்கும் கட்சிகள் நேற்று புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டன. ஐந்து அரசியல் கட்சிகள் மற்றும் இருபதுக்கும்மேற்பட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் நேற்றுக் காலை சுபநேரமான 10.31 மணிக்கு விஹாரமாதேவி பூங்காவின் திறந்தவெளி அரங்கில் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.
ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, சரத் பொன்சேகா, அர்ஜுன ரணதுங்க, ராஜித சேனாரத்ன, எம்.கே.எஸ்.குணவர்த்தன, சோபிததேரர் ஆகியோர் கைச்சாத்திட்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். எதிரணியில் இருந்த போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளின் தலைவர்கள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை. (ற-5)

ஒப்பந்தத்தில் இருப்பவை என்ன? 2ஆம் பக்கத்தில் விரிவாக...

## புலிகளை தோற்கடித்ததற்கு அஜித் டோவல் பாராட்டு மழை

கொழும்பு, டிசெ.2
தமிழீழ விடுதலைப் புலிகளை தோற்கடித்தமைக்காக இலங்கை அரசுக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளார் இந்தியத் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல்.
நேற்றுக் காலை, காலியில் ஆரம்பமான கடல்சார் பாதுகாப்புக் கருத்தரங்கில் உரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு பாராட்டுகளை அள்ளி வீசியுள்ளார்.
"சில விடயங்களில் சிறிய சிறிய பிரச்சினைகள் இருந்தாலும், இந்தியா தனது அயல் நாடுகளுடன் சிறந்த இருதரப்பு உறவுகளைப் பேணி வருகின்றது"– என்று அங்கு அவர் குறிப்பிட்டார்.
கடல்சார் பாதுகாப்புக் கருத்தரங்கில், இந்தியாவின் நரேந்திர மோடி தலைமையிலான அரசு பிரதிநிதிகள் இம்முறையே முதன்முறையாகப் பங்கேற்றுள்ளனர்.(ற-5)

# கொலைகார ஆட்சிக்கு முடிவு கட்டுவோம்

**நாட்டு மக்களுக்கு சந்திரிகா நேற்று அறைகூவல்.**
**9 வருடங்கள் பொறுத்த பின்னர் புறப்பட்டு வந்திருக்கிறார் எனவும் தெரிவிப்பு.**

கொழும்பு, டிசெம்பர் 2
மனிதர்களைக் கொலை செய்யும் கொடூரமான அரசின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து நாட்டை மீட்டெடுக்கத் தாம் ஆரம்பித்துள்ள போராட்டத்துக்கு நாட்டு மக்கள் அனைவரும் ஆதரவளிக்க வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று அறைகூவல் விடுத்தார்.
பொதுவேட்பாளராகக் களமிறங்கியுள்ள மைத்திரிபால சிறிசேன நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்து ஜனநாயகத்தை நிலைநாட்டுவார் எனத் தான் உறுதியளிக்கிறார் என்றும் அவர் தெரிவித்தார்.
கொழும்பு – 07 விகார மஹாதேவி பூங்காவில் நேற்று இடம்பெற்ற பொது எதிரணியில் இடம்பெற்றுள்ள கட்சிகள், பொது அமைப்புகள் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடும் நிகழ்வில் உரையாற்றினார் சந்திரிகா. அவர் அங்கு தெரிவித்ததாவது:
பொது வேட்பாளரைக் களமிறக்கி நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம். பக்.22

> **நான் ஆட்சிக்கு வந்து 2 மாதத்திலேயே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்து, புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்காக எனது உயிரைப் பணயம் வைத்து முயன்றேன். ஆனால் எமது அரசிடம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதிகாரம் இல்லாததால், அதைச் செய்ய முடியாமல் போனது.**
> *– சந்திரிகா குமாரதுங்க*







## மாவீரர் தினத்தன்று விம்மியழுதது வானம்

யாழ்.குடாநாட்டில் தற்போது மழையுடன் கூடிய காலநிலை காணப்படும் நிலையில், கடந்த மாதம் மழைவீழ்ச்சி கூடிய நாளாகப் பதிவாகியுள்ளது உலகத் தமிழர்களால் மாவீரர் தினம் கடைப்பிடிக்கப்படும் நவம்பர் 27ஆம் திகதி.
கடந்த மாதம் யாழ்.மாவட்டத்தில் 496.4 மில்லிலீற்றர் மழைவீழ்ச்சி கிடைக்கப்பெற்றுள்ளது. அதிகபட்சமாக 27 ஆம் திகதி 120.3 மில்லிலீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது என்று திருநெல்வேலி வானிலை அவதான நிலையம் கூறுகின்றது. பக்.02

## மைத்திரியை ஆதரித்தால் குண்டு வைப்போம்

யாழ்ப்பாணம், டிச 2
பொது ஜனாதிபதி வேட்பாளரான மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்கினால் எல்லோருக்கும் குண்டு வைப்போம் என்று மைத்திரியின் ஆதரவாளர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளதோடு அடித்துத் துன்புறுத்தப்பட்டும் உள்ளனர் என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே தெரிவித்துள்ளது.
எதிரணித் தலைவர்கள் கொழும்பில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் நேற்று கைச்சாத்திடுவதற்காக விகாரமாதேவி பூங்காவில் முன்னாயத்த ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்த மைத்திரியின் ஆதரவாளர்கள் மீது நேற்றுமுன்தினம் இரவு 11.30 அளவில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்கிறது கபே.
உடுநுவர ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் உட்படப் பலர் இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். (உ-4)

## மாகாண சபை உதவவில்லை

கடந்த சில நாள்களாக வடபகுதியில் பெய்து வரும் கனமழையால் பாதிக்கப்பட்ட பலர் தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள போதும், வடக்கு மாகாண சபை உதவவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் எம்.தியாகராசா இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். பக்.20

## ஐ.ம.சு.மு. கட்டுப்பணம் செலுத்தியது நேற்று

யாழ்ப்பாணம், டிசெ. 2
ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் நேற்றுக் கட்டுப் பணம் செலுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போட்டியிடுவதற்காக, கட்சியின் செயலாளர் சுசில்பிரேமஜயந்தவால் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.
ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு பக்.22



## ஈழத் தமிழருக்கு வேண்டும் சமஉரிமை

*–வெங்கையா நாயுடு* பக்.12

## அக்கறையற்று இருந்தால் வடகரையோரமும் சீனா வசம்

### இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகரிடம் எடுத்துரைத்தது தமிழ்க் கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 02
இலங்கையின் பெரும் பகுதி சீனாவுக்கு தாரை வார்க்கப்பட்டுள்ளது. நீங்கள் அக்கறை கொள்ளாவிடின், வடக்கு கரையோரமும் சீனாவிடம் சென்று விடும். – இவ்வாறு இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலிடம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.
இலங்கைக்குப்பயணம்மேற்கொண்டுள்ள இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையில் நேற்று இரவு அரை மணி நேரம் கொழும்பில் சந்திப்பு இடம்பெற்றது. பக்.22

## நேரமும், பணமும் ஐ.நாவில் விரயம்

### ஜி.எல்.பீரிஸ் பெரும் கவலை

யாழ்ப்பாணம், டிசெ. 2
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் வீணாகப் பணத்தையும், நேரத்தையும் 6 மாதத்துக்கு ஒரு தடவை செலவு செய்ய வேண்டி ஏற்படுகின்றது. இலங்கை தன்னை நியாயப்படுத்திக் கொள்வதற்கு இதனைச் செய்ய வேண்டி இருக்கின்றது.
இவ்வாறு கவலையுடன் தெரிவித்தார் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்.
காலியில் நேற்று ஆரம்பமான பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், பக்.22



# செய்திகள்

## ஜனாதிபதி ஆட்சி ஒழிப்பு

# 18ஆவது திருத்தம் நீக்கம்

## புதிய தேர்தல் முறைமை

### பொது எதிரணியின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் முக்கிய விடயங்கள் இவையே

பக்க விரிவு 1

எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஏனைய கட்சிகளின் தலைவர்கள், சிவில் அமைப்புகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்றுக்காலை கைச்சாத்திடப்பட்டது. ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பது, 18ஆவது திருத்தத்தை நீக்குவது, விகிதாசாரத் தேர்தல் முறைக்குப் பதிலாகப் புதிய தேர்தல் முறையொன்றை ஏற்படுத்துவது ஆகியன உள்ளடங்கியதாக இந்த ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டுள்ளது.

நீதியான – ஜனநாயகரீதியான – மக்கள் சார்பான ஆட்சிக்கான பொதுமக்களின் நிகழ்ச்சி நிரல் என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முழு விவரம் வருமாறு:

இலங்கையர்கள் என்ற வகையில் நாம் பாரதூரமான சவால்களை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம். பல தசாப்தங்களுக்கு முன்னர் உலகத்தின் சிறந்த முன்னுதாரண ஜனநாயக நாடாக இலங்கை ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ஆனால், இன்று – மிகத் துரிதமாக – இலங்கையில் வாழும் மக்கள் கௌரவமாகவும், பாதுகாப்பாகவும் வாழமுடியாத ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது.

இத்துன்பியல் நிலைமை பின்வரும் காரணங்களால் ஏற்பட்டுள்ளது.

– சட்டத்தின் ஆட்சி முழுமையாக வீழ்ச்சி கண்டுள்ளமை.

– ஆட்சிக்கு அத்தியாவசியமான ஜனநாயக நிறுவனங்கள் சீரழிக்கப்பட்டுள்ளமை.

– சமூக சமத்துவமின்மை முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிகரித்து, சமூக அநீதி, சமூக முறைமையின் அடிப்படைக்குணாம்சமாக மாறியுள்ளமை.

– பல்வகை இனத்துவ மத குழுக்களிடையே சகவாழ்வு வீழ்ச்சியடைந்து ஒற்றுமையீனமும், நம்பிக்கையீனமும் வியாபித்துள்ளமை.

இந்த நிலைமையை கவனத்திலெடுத்து நாட்டில் மீண்டும் நல்லாட்சியையும், சமூக நீதியையும், சட்டத்தின் ஆட்சியையும், ஜனநாயகத்தையும் உறுதிப்படுத்துவதற்கு பின்வரும் நிகழ்ச்சித் திட்டம் முன்வைக்கப்படுகிறது. அதற்கமைய தற்போதைய ஜனநாயக விரோத, ஏகபோக, ஊழல் மிகுந்த ஆட்சி இயந்திரத்தைத் தோல்வியுறச்செய்து மேற்கூறிய நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எல்லோரும் இணங்கக்கூடிய பொது வேட்பாளரைத் தேர்தலில் நிறுத்தி வெற்றியீட்டுவதற்கும் அதன் பின்னர் 100 நாள்களுக்குள் குறுகியகால வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்து நாடாளுமன்றஆட்சியை அமைத்து புதிய நாடாளுமன்றத்தின் கீழ் ஏனைய குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கும் இதன் மூலம் முன்மொழியப்படுகிறது.

அதேசமயம், பின்வரும் உடனடி நடவடிக்கைகளையும் இலக்குகளையும் வெற்றிகொள்வதற்கு இரு ஆண்டுகளுக்குள் சர்வ கட்சி அரசு ஒன்று அமைக்கப்படும்.

**உடனடிக் குறிக்கோள்கள்:**

1. தற்போது நடைமுறையிலுள்ள நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை 100 நாள்களுக்குள் முழுமையாக இல்லாதொழித்து மக்களுக்குப் பொறுப்புக்கூறும் நாடாளுமன்ற முறைமையை உருவாக்குதல்.
புதிதாக உருவாக்கப்படும் நாடாளுமன்ற ஆட்சியில் ஜனாதிபதி, அரசின் தலைவராகச் செயற்படுவதோடு, ஜனாதிபதிப் பதவிக்கு அதற்கேற்ற வகையில் பொறுப்பும், அதிகாரங்களும் வழங்கப்படும். ஜனரதிபதிப் பதவியை நாட்டின் தேசிய ஐக்கிய சின்னமாக உருவாக்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2. அரசமைப்புக்கான 18ஆவது திருத்தம் இல்லாது ஒழிக்கப்படும்.
ஜனநாயக ஆட்சிமுறைக்கு அத்தியாவசியமானநீதித்துறை, பொலிஸ் சேவை, அரச சேவை, தேர்தல் அதிகாரிகள், சட்டமா அதிபர், கணக்காய்வாளர்நாயகம்போன்ற பதவிகள் சுயாதீனமாகச் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஆணைக்குழுக்களின் சுயாதிபத்தியம் மீண்டும் ஏற்படுத்தப்பட்டு வலுப்படுத்தப்படும்.

3. விகிதாசாரத் தேர்தல் முறை முழுமையாக இல்லாதொழிக்கப்பட்டு சகல தேர்தல் தொகுதிகளிலும் தமக்கொரு நாடாளுமன்ற உறுப்பினர் கிடைக்கும் வகையில் – சகல மக்கள் பிரிவினரது, அரசியல் கருத்துகளுக்கும் உரிய பிரதிநிதித்துவம் கிடைக்கும் வகையில் பழைய நாடாளுமன்றத் தேர்தல் முறையினதும், விகிதாசார முறையினதும் கலவையாகப் புதிய தேர்தல் முறைமை உருவாக்கப்படும்.

4. மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள பெரும் வாழ்க்கைச் சுமையை இலகுபடுத்துவதற்கு வாழ்க்கைச் செலவுப்படிக்கு ஏற்ப அரச மற்றும் தனியார் துறையில் விவரமான சம்பளத் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். பொருளாதாரத்தின் கைத்தொழில், விவசாயம், பெருந்தோட்டம், மீன்பிடி, சிறு கைத்தொழில்கள் போன்ற துறைகள் வலுவூட்டப்படும். உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலையை உறுதிப்படுத்துதல், சமூகத் திலிருந்து ஓரங்கட்டப்பட்டுள்ள வறிய மக்களை – குறிப்பாக, பெண்கள், பிள்ளைகள், மூத்தோர், ஓய்வூதியம் பெறுவோர், ஊனமுற்றோர் ஆகிய அனைத்துப் பகுதியினரையும் இலக்காகக்கொண்டு விசேட வலுமிகுந்த சமூகப் பாதுகாப்பு வலையமைப்பொன்று உருவாக்கப்படும்.

100 நாள் திட்டம்

இதற்கு மேலதிகமாக உத்தேச 100 நாள்களுக்குள் பின்வரும் இலக்குகளை வெற்றிகொள்வதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று ஆரம்பித்துவைக்கப்படும்.

– முன்னெப்போதும் இல்லாத வகையில் நிகழும் பெரும் அளவிலான மோசடிகள், ஊழல்கள், இலஞ்ச நடவடிக்கைகள், கொமிஷன் வாங்குதல் என்பவற்றை ஒழிக்கவும், பொதுமக்களின் பணம் வீண்விரயமாக்கப்படும் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கும் இறுக்கமான அதேநேரம் வெளிப்படைத் தன்மையும், பொறுப்புக்கூறலும் கொண்ட ஒரு வழிமுறையை உருவாக்குதல். அதேசமயம், ஏற்கனவே நடைமுறையிலுள்ள துஷ்பிரயோகங்களையிட்டு சட்டபூர்வமாக நடவடிக்கை எடுத்தல்.

– சட்டத்தின் ஆட்சிக்கு முன்னுரிமை வழங்குதல். நல்லாட்சியின் கீழ் நிலைபேறான அடிப்படையில் ஜனநாயகத்தை மீள உருவாக்குதல், அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாத்து மேம்படுத்துதல். ஊடகச் சுதந்திரம் மற்றும் தகவல்களைப் பெறும் உரிமை உட்பட கருத்துகளை வெளியிடும் உரிமையை உறுதிசெய்தல். மனித கௌரவத்துடன் வாழ்வதற்கான உரிமையை உறுதிசெய்தல்.

– எல்லோரும் மனித கௌரவத்துடன்வாழக்கூடிய உரிமையை மேலும் வலுவூட்டுவதற்காக நலன்புரி அரசை மீண்டும் உருவாக்குதல். விசேடமாக உயர்மட்டத்தில் இலவசக் கல்விக்கும், இலவச சுகாதாரச் சேவைக்கும், சகல மக்களுக்கும் உள்ள உரிமையை உறுதிப்படுத்துதல்.

– துரிதமாக மாற்றமடையும் உலகச் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளக்கூடிய வகையில் இளம் பரம்பரைக்கு வலுவூட்டுதல். குறிப்பாக, உயர் மட்ட தொழில்வாய்ப்புகளுக்கு இளைஞர் சமுதாயத்தைத் தயார்படுத்த அவசியமான தொழில்நுட்ப அறிவையும் ஏனைய திறன்களையும், பயிற்சியையும் வழங்குதல்.

– சமூக, கலாசார, பொருளாதார மற்றும் அரசியல்துறைகளில் நாட்டின் அனைத்துப் மக்களும் கௌரவத்துடனும், சமசந்தர்ப்பத்துடனும் வாழ்வதை உறுதிசெய்தல்.

– நாகரிகமான / நெறிமுறை சார்ந்த ஒரு சமூகத்தை உருவாக்குதல். விசேடமாக அறிவு துரித வீழ்ச்சியை அடைந்துள்ள எமது நாட்டில் சிறந்த அரசியல் கலாசாரத்தை மேம்படுத்துதல்.

மேற்கூறிய பொதுமக்கள் நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்துவதற்கு எம்மை அர்ப்பணிப்பேரம் என கீழே கையொப்பமிடும் அரசியல் கட்சிகள், அரசியல் குழுக்கள் மற்றும் பொது அமைப்புகளுடன் இணைந்து திடசங்கற்பத்துடன் சபதம் செய்கிறோம். (உ–சி)



குடாநாட்டில் கடந்த சில நாள்களாக கன மழையுடனான கால நிலை காணப்படுகின்றது. அதன் காரணமாக ஜோன் பொஸ்கோ ஆரம்பப் பாடசாலைக்குமுன்பாக அமைந்திருக்கும் குளக்கரையில் நின்றிருந்த பெரு மரம் ஒன்று பாறி விழுந்துள்ளது. (ந–20,17)

## மாவீரர் தினத்தன்று விம்மியழுதது வானம்

### கடந்த மாதத்தில் அன்றைய தினமே அதிக மழைவீழ்ச்சி

பக்க விரிவு 1

யாழ்ப்பாணம், டிசெ.2

கடந்த மாதம் யாழ்.மாவட்டத்தில் பெய்த மழைவீழ்ச்சியின் அளவு 496.4 மில்லி மீற்றராகப் பதிவாகியுள்ளது. இதுவரையான காலப்பகுதியில் மாவீரர் தினமான – கடந்த 27ஆம் திகதியே அதிகளவாக 120.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

"நேற்றுமுன்தினம் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 38.6 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், 29 ஆம் திகதி 11.7 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும், 28 ஆம்திகதி 1.2 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும், 27 ஆம் திகதி 120.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், 26 ஆம் திகதி 17.1 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளது.

ஓக்ரோபர் மாதம் 262.1 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், செப்ரெம்பர் மாதம் 35.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், ஓகஸ்ட்டில் 108.5 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், ஜூலை மாதம் 1.6 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளது." – என்று யாழ். திருநெல்வேலியிலுள்ள வானிலை அவதான நிலைய பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.

"கடந்த மாதம் 496.4 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளபோதும் கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இது சாதாரண மழை வீழ்ச்சியே. கடந்த வருடம் நவம்பர் மாதம் மழைவீழ்ச்சி 19.1 மில்லிமீற்றரே பதிவாகியது. அது என்றுமில்லாதவாறு குறைந்திருந்தது. 2012 ஆம் ஆண்டில் 80.6 மில்லிமீற்றராகப் பதிவாகியது. ஆனால் சாதாரணமாக ஏனைய வருடங்களில் நவம்பர் மாதங்களில் 400 இற்கும் 500 இற்கும் இடைப்பட்ட மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது."– என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்த வருடத்தின் நேற்றுமுன்தினம் நவம்பர் 30 ஆம் திகதிவரையான காலப்பகுதியில் யாழ்.குடாநாட்டில் ஆயிரத்து 117 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. கடந்த வருடம் ஆயிரத்து 33.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. 2012 ஆம் ஆண்டு 943.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. பல வருடங்களுடன் ஒப்பிடுகையில் 2008 ஆம் ஆண்டு ஆயிரத்து 627.3 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், அதே வருடம் நவம்பரில் 830.8 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளது. அந்த வருடமே நிஷா புயல் வீசிப் பாதிப்பை ஏற்படுத்தியது"– என்று அவர் தெரிவித்தார்.(ந–4)

## யாழ்.பல்கலை மாணவருக்கு 'மகாபொல' கொழும்பில்

யாழ்ப்பாணம், டிச 2

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முதலாம்வருடமாணவர்களுக்கு கொழும்பில் வைத்தே இம்முறை மகாபொல கொடுப்பனவுவழங்கப் டவுள்ளது. அதற்காக மாணவர்கள் நேற்றுக் கொழும்புக்குப் பயணமாகியுள் ளனர்.

இதுவரை யாழ்.பல்கலைக் கழக மாணவர்கள் மாத்திர மன்றி ஏனைய பல்கலைக்கழக மாணவர்களுக்கும் அவரவரது பல்கலைக்கழகங்களில் வைத்தே மகாபொல வழங்கப்பட்டு வருகின்றது. யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள ஏதாவது ஒரு இடத்தில் வைத்து வழங்கப்படும். ஆனால் இம்முறை அனைத்துப் பல்கலைக்கழகங்களையும் சேர்ந்த மாணவர்களும் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

அதையடுத்து யாழ்.பல்கலைக் கழகத்தில் பயிலும் மாணவர்கள் நேற்றுப் பிற்பகல் பஸ்ஸில் கொழும்புக்குப் புறப்பட்டனர். மகாபொல கொடுப்பனவு 2 ஆயிரத்து 500 ரூபாவிலிருந்து 4 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (ந–4)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: தடைப்பட்டிருந்த திருமண ஏற்பாடுகள் இனிதே நிறைவேறும். பிள்ளைகள் வழியில் சின்னச் சின்ன செலவுகள் நேரிடலாம். குடும்பத்தில் விட்டுக்கொடுத்துச் செல்லுங்கள்.

**இடபம்**: உங்கள் மேல் போட்டி மற்றும் பொறாமை கொண்டவர்கள் ஒதுங்கிவிடுவார்கள். உத்தியோகத்தர்களுக்கு காத்திருந்த இடமாற்றம், பதவி உயர்வு தேடி வரும். மேன்மைகளை அடைவீர்கள்.

**மிதுனம்**: புதிய பணியில் சேர்ந்தவர்களுக்கு அமைதியான முறையில் மனச்சஞ்சலங்கள் விலகும். வெளிநாட்டு வேலை எதிர்பார்ப்பவர்களுக்கு அழைப்புகள் வந்து சேரும் காலமிது. எதிர்பாராத செலவுகள் நேரிடலாம்.

**கடகம்**: தொழிற்சாலைகளில் பணி செய்வோருக்கு கடுமையான உழைக்க வேண்டிய நாளிது. கலைத்துறையில் உள்ளவர்களுக்கு நன்மை பயக்கும் . எதிர்பார்த்த வாய்ப்புகள் வந்து சேரும்.

**சிங்கம்**: சிலருக்கு நீண்ட நாளைய ஆசைகள் நிறைவேறும். இலட்சியங்கள் கைகூடும். ஆன்மிக விடயங்களில் நாட்டம் அதிகரிக்கும். புதிய நட்புகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**கன்னி**: சுமுகமான அணுகுமுறைகளை வகுத்துக் கொள்வீர்கள். நீண்ட காலமாக மனதில் தேங்கிக் கிடந்த திட்டங்களை நிறை வேற்றிக் கொள்ள வேண்டிய வாய்ப்புகளைப் பெறுவீர்கள்.

**துலாம்**: தடைப்பட்டிருந்த சுபகாரியங்கள் அனைத்தும் நடப்பதற்குண்டான வாய்ப்புகளைப் பெறுவீர்கள். உறவுகள், நண்பர்கள் மத்தியில் இருந்த கருத்து வேற்றுமை அகலும்.

**விருச்சிகம்**: குடும்பத்தில் விட்டுக்கொடுத்துச் செல்ல வேண்டும். உடல்நலத்தில் கவனம் செலுத்த வேண்டும். ஆடை ஆபரணச் சேர்க்கை அதிகரிக்கும்.

**தனுசு**: சொத்து விடயங்களில் ஒரு நல்ல முடிவுகள் வந்து சேரும். உத்தியோகத்தர்களுக்கு பார்த்துக் கொண்டிருக்கும் வேலையில் இடமாறுதல்கள் ஏற்படலாம்.

**மகரம்**: புதிய பொறுப்புகள் வந்து சேரும். கிடப்பில் போட்டிருந்த வேலைகளைச் செய்வீர்கள். வியாபாரிகளுக்கு இலாபம் ஈட்டும் காலம். பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**கும்பம்**: இலக்கியம், கதை, கவிதைத் துறைகளில் உள்ளவர்களுக்கு புகழ் கிடைக்கும். பங்குதாரர்கள் மூலம் சில தொந்தரவுகள் நேரிடலாம். கலைத்துறையினருக்கு ஓரளவு முன்னேற்றம் கிடைக்கும்.

**மீனம்**: தாங்கள் மேன்மையடைந்திட புதிய வாய்ப்புகள் வந்து சேரும். சிலருக்கு வெளிநாடு வாய்ப்புகள் வரலாம். சிறந்த நட்பு வட்டாரம் கிடைக்கும்.

மெடிசின் படிச்சிட்டு ஏழைகளுக்கு சேவை செய்யிறேன்னு சொல்லுறவங்களையும்



மேரேஜ் முடிச்சிட்டு மாமியாரைகூட இருந்து பார்த்துக்குவேன்னு செல்லுறவங்களையும் நம்பவே முடியாது!

## வீசி முடிகின்றது



# தென்றல்

விகடன் நிறுவனம் தயாரித்த தென்றல் சின்னத் திரை தொடர் இறுதிப் பகுதியை எட்டியுள்ளது. கடந்த 5 வருடங்களாக சன் தொலைக்காட்சியில் தென்றல் தொடர் ஒளிபரப்பானது. இந்தத் தொடரை எதிர்வரும் ஜனவரி மாதம் தைப்பொங்கலுக்கு முன்னராக நிறைவுறுத்தவுள்ளார்கள்.

மிகப் பிரபலமான இந்தத் தொடர் தெலுங்கு, கன்னடத்திலும் ரீமேக் செய்யப்பட்டு ஒளிபரப்புச் செய்யப்படுகின்றது.

தீபக், ஸ்ருதிராஜ், சுபலேகா, சுதாகர், ஹேமலதா முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருந்தார்கள். தென்றல் கதையை முத்துச் செல்வம், குருசம்பத் குமார் ஆகியோர் எழுதியிருந்தனர். மார்க்ஸ் ஒளிப்பதிவு செய்திருந்தார். தென்றல் தொடரின் நாயகனாக நடித்த தீபக் இப்போது சினிமாவில் நடிக்க ஆரம்பித்துள்ளார். அத்துடன் தொடரை இயக்கிய குமரன் இப்போது தெய்வமகள் தொடரை இயக்கத் தொடங்கி விட்டார்.


தென்றல் தொடர் பல அனுபவங்களைக் கொடுத்தது. எல்லோரும் ஒரே குடும்பமாக இருந்து 5 வருடங்கள் எடுத்துச் சென்றோம். தென்றல் நாள்கள் ஒரு கல்லூரியின் நாள்களைப் போலவே சென்றது. வலி நிறைந்த அனுபவங்களையும் தந்தது. சின்னத்திரையுலகில் தென்றல் முக்கியமான தொடராக இருக்கும்' என்கின்றார் இயக்குநர் குமரன்.

## ரிலாக்ஸா வாசியுங்க...



நாராயணசாமி தன் மனைவியிடம்,
"நீ சாப்பிட்ட தட்டிலேயே, நானும் சாப்பிடுகின்றேன். நீ தேநீர் குடிச்ச டம்ளர்லேயே நானும் தேநீர் குடிக்கின்றேன்" என்றார்.
"அவ்வளவு பாசமா இல்லை அவ்வளவு காதலா என் மேல்' என்று அவர் மனைவி கேட்டார்.
"இல்லை. இரண்டு பாத்திரங்களைக் கழுவுவதற்கு எனக்கு ரொம்ப கஷ்டமாக இருக்கின்றது. ஒரு பாத்திரமாக இருந்தால் கொஞ்சம் பரவாயில்லை. அதனால்தான் சொன்னேன்" என்றார்.
இதுக்குப் பிறகு என்ன நடந்திருக்கும் என்று சொல்லவா வேண்டும் ?

என்ன சார்... பொம்பளைங்க மாதிரி டி.வி.சீரியல பார்த்து அழுதுட்டு இருக்கீங்க???



அட..... இது சீரியல் இல்லிங்க என் கல்யாண சீடி!!!...

எப்பிடி இருந்தவன இப்பிடி ஆக்கி,




கடைசில கக்கூஸ் கழுவ விட்டுட்டாய்ங்க....

# செய்திகள்

# ஆளும் தரப்பில் அனைவரும் பதவி நீக்கம்

## பூநகரி பிரதேச சபைக்கு கட்சித் தலைமை அதிரடி

யாழ்ப்பாணம், டிசெ. 2
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்கு உட்பட்ட பூநகரி பிரதேச சபையின் ஆளுங் கட்சி உறுப்பினர்கள் 6 பேரையும் கட்சித் தலைமை நீக்கியுள்ளது.

இதனை எதிர்த்து உறுப்பினர்கள் வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு உட்பட்ட பூநகரி பிரதேச சபையைக் கடந்த 2011 ஆம் ஆண்டு நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியது. 10 உறுப்பினர்களைக் கொண்ட சபையில், 6 உறுப்பினர்கள் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள்.

இருப்பினும் குறித்த சபைக்கான தேர்தல் வேட்புமனுவின் போது இடம்பெற்ற பிரச்சினைகள் காரணமாக, ஏனைய பிரதேச சபைகளைப் போன்று அல்லாமல் இங்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கடந்த 3 வருடங்களாகச் சபை இயங்கி வந்தது. இந்த நிலையில் சபையின் தவிசாளர் உள்ளிட்ட ஆளுங் கட்சியின் 6 உறுப்பினர்களையும், தனது கட்சியின் உறுப்புரிமையிலிருந்து நீக்கியுள்ளதாக உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்கு, கட்சியின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் சபை உறுப்பினர்களின் பதவி வெறிதாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தும், இது தொடர்பில் 21நாள்களுக்குள் ஆட்சேபனை இருப்பின் தெரிவிக்குமாறும் உதவித் தேர்தல்கள் ஆணையாளரினால் உறுப்பினர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பதவி நீக்கத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

# கால்நடைகளின் உறைவிடமாக ஐயன்கன்குளம் பொதுச் சந்தை



முல்லைத்தீவு, டிசெ. 2
முல்லைத்தீவு ஐயன்கன்குளம் பொதுச் சந்தை 23 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுத் திறக்கப்பட்டபோதும் உரிய முறையில் பயன்படுத்தாமல் கால்நடைகளின் உறைவிடமாகவும் பற்றைக்காடுகள் வளர்ந்தும் காணப்படுகின்றது.

துணுக்காய் பிரதேச சபையின் கீழ் உள்ள முல்லைத்தீவு ஐயன்கன்குளம் பொதுச் சந்தை 2012ஆம் ஆண்டு நெல்சிப் திட்டத்தின் கீழ் 23 லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்டு கடந்த 2013 ஆம் ஆண்டு முற்பகுதில் திறந்து வைக்கப்பட்டது. ஆயினும் அது உரிய முறையில் பயன்படுத்தாமல் கால்நடைகளின் உறைவிடமாகவும், பற்றைக் காடுகள் மண்டியும் காணப்படுகின்றது.

இது குறித்து அப்பகுதியில் உள்ள பலரும் அதிருப்தி தெரிவித்துள்ளனர். (த-55)




புதுக்குடியிருப்பு பஸ் நிலையம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளபோதும் பயன்படுத்தப்படாமல் காணப்படுகின்றது. கடந்த ஆண்டு குறித்தொதுக்கப்பட்ட மற்றும் பிரதேச சபை நிதியில் இருந்து 20 இலட்சம் ரூபா செலவில் ஏ-35 வீதியில் சகல வசதிகளையும் கொண்டதாக அமைக்கப்பட்ட இந்த பஸ் நிலையம் பயன்படுத்தப்படாமல் உள்ளமை குறித்துப் பொதுமக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (த)

# குளம் வான் பாயும் பகுதியில் உயிராபத்துடன் 7 குடும்பங்கள்

## உடன் நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை



கிளிநொச்சி, டிசெ. 2
கிளிநொச்சிக் குளம் வான் பாயும் பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள 7 குடும்பங்கள் உயிராபத்தை எதிர்நோக்கும் நிலையில் உள்ளனர்.

வான் பாயும் பகுதியில் உயர்வான இடத்தில் இந்தக் குடும்ப்ங்கள் வாழ்ந்து வருகின்றன.

குளம் வான்பாய்கின்றபோது இந்தக் குடும்பங்கள் உள்ள பகுதியைச் சுற்றி பெருமளவில் வெள்ளம் பாயும். இந்தக் குடும்பங்களின் வீடுகளுக்குள் மழை வெள்ளத்துடன் முதலைகள், பாம்புகள் கூட கடந்த காலங்களில் புகுந்துள்ளன. இந்த அபாயகரமான நிலை குறித்து அவர்களிடம் கேட்டபோது,

கிளிநொச்சி நகரத்தில் எங்களுக்கு நிரந்தரக் காணிகள் இல்லை. யூனியன்குளத்தில் தான் காணி வழங்குவோம். அங்குசெல்லுங்கள் என்று கரைச்சிப் பிரதேச செயலர் எங்களுக்குக் கூறியுள்ளார். எங்களுடைய வாழ்க்கைக்குரிய வாழ்வாதாரம், தொழில் முயற்சிகள், பிள்ளைகளுடைய கல்வி எல்லாம் கிளிநொச்சி நகரில் தான் உள்ளன. யூனியன்குளம் சென்று எங்களால் வாழமுடியாது.

அதிகாரிகள் எங்களுக்குக் கிளிநொச்சி நகரை அண்டிய பகுதியில் காணி வழங்கி நிரந்தர வீடுகள் அமைத்துத் தரவேண்டும். எங்களுடைய வாழ்க்கை குளத்தின் வான் வெள்ளம் பாய்கின்றபோது ஆபத்தானதாக உள்ளது எனத் தெரிவித்தனர். ஓராண்டுக்கு முன்னர் மேற்படி குடும்பங்களின் நிலை தொடர்பாகக் கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கும்போது, மேற்படி குடும்பங்களுக்குக் கிளிநொச்சி நகரை அண்டிய பகுதியில் வழங்குவதற்குக் காணியில்லை. எமது பிரதேச செயலர் பிரிவிலேயே கோணாவில் கிராமத்தின் யூனியன்குளம் கிராமத்தில் தான் காணியுள்ளது எனத் தெரிவித்திருந்தார். மேற்படி குடும்பங்களின் அபாயகரமான வாழ்க்கைக் கருத்தில்கொண்டு காணி வழங்கி நிரந்தர வீடுகள் அமைத்து வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-18)

# திருட முற்பட்டோரை மடக்கிய அயலவர்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 2
வீட்டில் இருந்தவர்கள் திருகோணமலைக்குச் சென்றிருந்தவேளை கதவு உடைத்துத் திருட முற்பட்ட இரண்டு பேர் அயலவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கோப்பாய், கல்வியங்காடு பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீட்டுக்காரர்கள் திருகோணமலைக்குச் சென்றிருந்தபோது அதனை அவதானித்தே திருட்டு இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

கல்வியங்காடு, இராசவீதி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இரண்டு பேரே அவ்வாறு அயலவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். கதவுப் பூட்டை உடைத்து அவர்கள் திருட முற்பட்டுள்ளனர். அதனை அவதானித்த அயலவர் திருடர்களைப் பிடித்துத் தம்மிடம் ஒப்படைத்தனர் என்று பொலிஸ்சார் மேலும் தெரிவித்தனர். (த-4)

# தபாலகக் கட்டடம் இடிந்தது மழையால்

வலி. வடக்கு, டிசெ.2
கடந்த சில நாள்களாக யாழ். மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையை அடுத்து நேற்று முன்தினம் இரவு மானிப்பாய் தபாலகக் கட்டடத்தின் ஒரு பகுதி இடிந்து வீழ்ந்துள்ளது.

பழமை வாய்ந்த தனியார் கட்டடத்தில் மானிப்பாய் தபாலகம் கடந்த பல வருடங்களாக இயங்கி வருகின்றது. குறிப்பிட்ட கட்டடம் மழை பெய்தால் ஒழுகும் நிலையில் காணப்படுவதாகவும், இது குறித்து உரிய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டபோதிலும் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையெனவும் தபாலக ஊழியர்கள் கவலை தெரிவித்தனர். இதனையடுத்து கட்டடத்தின் ஒரு பகுதி இடிந்து வீழ்துள்ளதாக ஊழியர்களால் தெரிவிக்கப்பட்டது. (த-86)

# டெங்கு பரவும் சூழல்; 12 பேருக்கு வழக்கு

கரணவாய்,டிசெ. 2
பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்ட பகுதிகளில் டெங்கு நுளம்பு பெருகுவதற்கு ஏதுவான சூழல் காணப்பட்ட 12 குடியிருப்பாளர்களுக்கு எதிராகச் சுகாதாரப் பிரிவினால் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட அல்வாய் புலோலி வடக்கு, தும்பளை கிழக்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் கடந்த வாரம் மூன்று தினங்கள் டெங்கு நுளம்பு ஒழிப்புத்தொடர்பான விழிப் புணர்வு நடவடிக்கைகளும் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.செந்தூரன் தலைமையில் பருத்தித்துறை பொலிஸார் சுகாதாரப் பரிசோதகர், கிராம, சேவகர்கள் மற்றும் தொண்டர்கள் எனப் பலரும் இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதன்போது டெங்கு நுளம்பு பெருகக்கூடிய சூழ்நிலை காணப்பட்ட 12 இடங்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு எதிராகப் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதாகச் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார். (த-108)

# இன, மத நல்லுறவுக்காக ஆராதனை நாளை யாழில்

இந்துக் குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம்.டிசெ.2

இலங்கையில் இன,மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும், தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்கவும் வேண்டியும் மாபெரும் ஆராதனை நிகழ்வு யாழில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நாளை 3 ஆம் திகதி புதன்கிழமை சித்தன்கேணி ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் இந்த ஆராதனை நடைபெறவுள்ளது.

சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த ஆராதனை நிகழ்வில் காலை 8 மணிக்கு வேதபாராயணம் இடம்பெறுவதைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு திருமுறைப் பாராயணம் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து நாதஸ்வர தவில் இசை, சங்கீதம், மிருதங்க தாள வாத்தியம், நாட்டியாஞ்சலி, ஓம்நமசிவாய மந்திர பாராயணம், தியானம் என்பன இடம்பெறும்.

நிகழ்வில் ஓம் நமசிவாய மந்திர லிகிதஜப லிங்க திருவுருவப் பத்திரம் வெளியிட்டுவைக்கப்படும்.

இந்தப் பக்தி பூர்வமான பிரார்த்தனையில் சிவாச்சாரியர்கள், திருமுறை ஓதுவார்மூர்த்திகள், நாதஸ்வர தவில் வித்துவான்கள், இசை ஆசிரியர்கள், மாணவர்கள், பேராசிரியர்கள், பல்கலைக்கழகமாணவர்கள்கலைத்துறையினர்கள், ஆலயப் பரிபாலன சபையினர், அறங்காவலர்கள், இந்து மன்றங்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் சிவனடியார்கள் அனைவரும் கலந்து கொண்டு பிரார்த்தனைக்கு வலுச் சேர்க்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

கடந்த வருடம் நடைபெற்ற ஓம் நமசிவாயப் பிரார்த்தனை மூலமாக ஏறக்குறைய மூன்று கோடிக்கு மேற்பட்ட ஓம் நமசிவாய மந்திரங்கள் எழுதப்பட்டு நமசிவாய ஆன்மிக வங்கியில் சேர்க்கப்பட்டன. இதன் மூல மாக மக்கள் பல நன்மைகளையும் உயர்வுகளையும்மனஅமைதியையும் ஆன்மிக ஈடேற்றத்தையும் பெற்றுக்கொண்டுள்ளார்கள்.

இதனடிப்படையில் இந்தவருடம் 5 கோடி ஓம் நமசிவாய மந்திரங்களைச் சேர்ப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (த–14)



## வவுனியா குளத்தை அழகாக்கும் திட்டத்தைத் தொடர்ந்து நடத்துக

பொதுமக்கள் கோரிக்கை

வவுனியா, டிசெ.2

வவுனியா குளத்தை அழகுபடுத்தும் திட்டம் கிடப்பில் போடப்பட்டு, குப்பை கூளங்களால் குளம் நிறைந்து காணப்படுகின்றது என்று விசனம் தெரிவித்துள்ளனர் மக்கள்.

2011ஆம்ஆண்டுஇந்தக்குளத்தை அழகுபடுத்தும் திட்டம் முன்மொழியப்பட்டது. 2012ஆம் ஆண்டு வவுனியா நீர்ப்பாசனத் திணைக்களம், நகர சபை மற்றும் வவுனியாமாவட்டச்செயலகம் ஆகியவற்றின் பங்களிப்புடன் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. குளத்தின் முற்பகுதி துப்புரவு செய்யப்பட்டது. அதன்பின்னர் உல்லாசப் பயணிகளைக் கவரும் விதத்தில் இருக்கைகளை அமைத்து அழகுபடுத்தப்படும் என்று கூறப்பட்டது. ஆயினும் இரண்டு ஆண்டுகள் கழிந்துள்ள நிலையில் அவை இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை.

தற்போது அந்தப் பகுதி எங்கும் பாதீனியம் வளர்ந்துள்ளது. அங்கிருந்தபெயர்ப்பலகையும்பிடுங்கி எறியப்பட்டு, குப்பைகளால் அந்தப் பகுதி நிறைந்துள்ளது. இந்தக் குளத்தை அழகுபடுத்தும் திட்டத்தை குறித்த தரப்பினர் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற–402)

## பிரேதப் பெட்டித் தரகர்களாக வைத்தியசாலை ஊழியர்கள்

யாழ்ப்பாணம், டிசெ.2

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரேதப் பெட்டிக் கடைகளின் தரகர்களாகச் செயற்படும் யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்கள் சிலரால் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழப்பவர்களின் சடலங்களைப் பொறுப்பேற்பதற்காகப் பிரேத அறை முன்பாகக் காத்திருக்கும் உறவினர்களிடம் வைத்தியசாலை ஊழியர்கள் சிலர் அநாகரிகமாக நடந்து கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமக்குத் தெரிந்த பிரதேப் பெட்டி கடை இருப்பதாகக் கூறும் ஊழியர்கள் அவர்களை அங்கு பெட்டியை எடுக்குமாறு வற்புறுத்தி வருவதாகவும், வேறுகடையில் எடுக்கப் போவதாகக் கூறினால் சண்டித்தனமுறையில் தரமற்ற வார்த்தைகளால் திட்டுவதாகவும் சடலங்களைப் பொறுப்பேற்க வருவோர் கூறுகின்றனர்.

போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர்கள் சிலர் சீருடையைக் களைந்து விட்டுச் சிவில் உடையில் வந்து இந்த தரகு வேலையில் ஈடுபடுவதாகக் கூறப்பட்டது.

உறவுகளை இழந்த சோகத்தில் நிற்பவர்களிடம் சண்டித்தனமானமுறையில் ஊழியர்கள் செயற்படுவதை உயர் அதிகாரிகள் உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த–9)

## காற்றினால் வீடுகள் சேதம்

யாழ்ப்பாணம், டிசெ.2

கடந்த வியாழக்கிழமை இரவு வீசிய பலத்த காற்றினால் நெடுந்தீவுப் பகுதியில் தென்னிந்திய திருச்சபை தேவாலயம் உட்பட வீடுகள் பல சேதமுற்றன. தென்னிந்திய திருச்சபை தேவாலயத்தின் கூரை முற்றாகத் தூக்கி வீசப்பட்டதுடன் பல வீடுகளின் கூரை ஓடுகளும் தூக்கி வீசப்பட்டன.

சுவிஸ் ஒன்றியத்தின்கல்விநிலையக்கொட்டகைசேதமுற்றுள்ளது. தென்னை மரங்கள் பல முறிந்து விழுந்துள்ளன.

பலத்த மழை காரணமாக அநேக பகுதிகள் அங்கு வெள்ளக் காடாகக் காட்சியளிக்கின்றன.

பிரதான வீதியில் வெள்ளம் பாய்ந்தபடி உள்ளதால் உள்ளூர் போக்குவரத்துபாதிக்கப்பட்டுள்ளதாகவும், கடும் காற்று தொடர்ந்தும் வீசிக்கொண்டிருப்பதால் கடல் போக்குவரத்துச் சேவைகள் தடைப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

மின்சாரக் கம்பங்கள் சரிந்து விழுந்ததில் நெடுந்தீவு மேற்குப் பகுதியில் மின்சாரம் முற்றாக தடைப்பட்டுள்ளது. (த–7)

## மஹிந்த வழங்கிய மோ. சைக்கிளுக்கு காப்புறுதி கட்டாயம்

யாழ்ப்பாணம், டிசெ.2

அரசினால் வரி விலக்குடன் வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களது உரிமையாளர்கள் அனைவரும் தமது வாகனங்களுக்கான காப்புறுதிகளை செய்திருக்க வேண்டும். இல்லையென்றால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தி.விமலசேன தெரிவித்தார்.

யாழ்.பொது நூலகக் கேட்போர் கூடத்தில்கடந்தவெள்ளிக்கிழமை போக்குவரத்து பொலிஸாருக்கும் திணைக்களத் தலைவர்களுக்கும் இடையே நடந்த சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் அரசினால் வரி விலக்குடன் வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள் உரிமையாளர்களில் பலர் இன்னமும் காப்புறுதிப் பத்திரங்கள் இல்லாமல் பயணம் செய்வதைக் காண முடிகின்றது. கொழும்பில் உள்ள ஒரு காப்புறுதி நிறுவனத்தில் மட்டும் தான் இதற்குக் காப்புறுதிகள் செய்ய முடியும் என்பதை நான் அறிவேன். அதற்காக காப்புறுதி இல்லாமல் வாகனங்களைச் செலுத்த அனுமதிக்க முடியாது.

எனவே டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் சம்பந்தப்பட்டவர்கள் தமது வாகனங்களுக்கான காப்புறுதிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள். அவர்களின் நிலைமையைக் கவனத்தில் கொண்டே இந்தக் கால அவகாசத்தை வழங்குகின்றோம். குறித்த திகதிக்குப் பின்னரும் காப்புறுதிகள் செய்யப்படவில்லையென்றால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்–என்றார். (த–ரி)

## நச்சுத் திரவம் அருந்திய இருவரில் ஒருவர் சாவு

தென்மராட்சியில் சம்பவம்

ஆலய மண்டபத்தில் நச்சுத் திரவம் அருந்திய நிலையில் காணப்பட்ட இருவரைக் கொடிகாமம் பொலிஸார்மீட்டுசாவகச்சேரிமருத்துவமனையில் சேர்த்தனர்.

அவர்களில் 23 வயது இளம் யுவதி சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார். 45 வயது 5 பிள்ளைகளின் தந்தை ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

பாலாவி தெற்கைச் சேர்ந்த அழகரத்தினம் நித்திய மலர் (வயது – 23)என்னும் யுவதியே உயிரிழந்தவராவார். கெற்பேலியை சேர்ந்த செல்லையா தெய்வேந்திரன் (வயது – 45) என்பவரே யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டவராவார்.

கொடிகாமம் பொலிஸார் சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (த–9)

## ரயில் சேவைகளின் மூலம் விரைவான பொதிச் சேவை

யாழ்.தபாலக அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.டிசெ.2

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கான ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் தபால் சேவைகள் அனைத்தும் வடக்கு மாகாணத்துக்கு விரைவுபடுத்தப்பட்டுள்ளன. அத்துடன் பொதிகள் சேவைகளில் பொதுமக்கள் நன்மையடைந்து வருகின்றனர் என்று யாழ்.தபாலகஅதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆரம்ப காலங்களில் வடக்குக்கான ரயில் சேவை இருந்தபோது அதிமான பொதிகள் சேவைகள் இடம்பெற்று வந்தன. எனினும் 24 வருடங்களாக யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவை நிறுத்தப்பட்டிருந்ததால், பொதிகள் வாகனங்கள் மூலம் வடக்கில் பரிமாறப்பட்டு வந்தன. அதனால் காலதாமதம் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்கள்இருந்தன.

தற்போது யாழ்ப்பாணத்துக்கு ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் இரவுத் தபால் ரயில் சேவையில் பொதிகள் பரிமாறப்படுகின்றன. அதனால் பொதுமக்கள் தங்களது தபால்கள் மற்றும் பொதிகளை வெகுவிரைவில் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. தபால் திணைக்களத்தால் நவீனத்துவ ரீதியில் பொதி பரிமாற்றல் சேவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும் அந்த அதிகாரி கூறினார். (ற–14)

# கட்டுரை

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழர்களின் பலம் ஆயுதங்கள் மட்டுமே

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள மைத்திரிபால சிறிசேனவுக்கும் அவரை ஆதரிக்கும் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று நேற்றுக் கைச்சாத்திடப்பட்டது. அதன் விவரங்களும் நேற்றே வெளியிடப்பட்டு விட்டன.

கவனமாகத் தயாரிக்கப்பட்டுள்ள அந்த ஆவணமே பெரும்பாலும் பொது எதிரணியின் தேர்தல் அறிக்கையாகவும் (தேர்தல் விஞ்ஞாபனம்) இருக்கும் என்பதை ஊகிப்பது கடினமல்ல. இந்த ஒப்பந்தத்தில் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உள்ளிட்ட 35 தலைவர்கள் கையொப்பமிட்டுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை.

அந்த ஆவணம் - புரிந்துணர்வு உடன்படிக்கை - தமிழர்களுக்குக் கடும் அதிர்ச்சியைக் கொடுக்கிறது. மிக முக்கியமான காலகட்டத்தில், இனப் பிரச்சினைத் தீர்வு குறித்தோ, தமிழர்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வது குறித்தோ அந்த ஆவணத்தில் எதுவுமே இல்லை. மிகக் கவனமாகத் தெரிந்தெடுத்து, தமிழர்கள், இனப் பிரச்சினை, அரசியல் தீர்வு, அதிகாரப் பகிர்வு என்கிற சொற்களைத் தவிர்த்திருக்கிறார்கள். ஒரு பேச்சுக்குக்கூட இவை குறித்து அந்த ஒப்பந்தம் பேசவேயில்லை.

அதிலும் குறிப்பாக, இந்த நாட்டில் இனப் பிரச்சினை என்று ஒன்று இருக்கிறது என்பதையும் தமிழர்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்துகொண்டு அரசியல் தீர்வு ஒன்றைக் காணவேண்டும் என்பதையும் கடந்த காலங்களில் முழுமையாக ஏற்றுக்கொண்டு, அதற்காக ஓரளவுக்கேனும் முயற்சி செய்த இரு தலைவர்கள் இருக்கத்தக்கதாக தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து ஒரேயொரு வரிகூட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இல்லை என்பது தமிழர்களை அரசியல் படுகுழியில் தள்ளும் செயல் மட்டுமே. 1994இல் அரசியலுக்குள் நுழையும்போது சந்திரிகா, அரசியல் தீர்வைத் தரும் சமாதானத் தேவதை என்ற கோசத்துடனேயே நுழைந்தார்; வென்றார். 2001ஆம் ஆண்டு மீண்டும் ரணில் விக்கிரமசிங்க அதே சமாதானக் கோசத்தைத் தூக்கிக்கொண்டே தேர்தலில் குதித்தார்; பெரு வெற்றி பெற்றார். அப்போதெல்லாம் தமிழர்கள் பக்கம் விடுதலைப் புலிகள் இருந்தார்கள். ஆயுத பலம் இருந்தது.

ஆனால் இன்றோ நிலைமை தலைகீழாகி விட்டது. அதே சந்திரிகாவும், ரணில் விக்கிரமசிங்கவும் இன்று அரசியல் தீர்வு குறித்து வாய் திறக்கவே பயப்படுகிறார்கள். ஒரு காலத்தில் அவர்களின் வெற்றிக்கான கோசமாக இருந்த, அதிகாரப் பகிர்வு மற்றும் அரசியல் தீர்வு என்ற சொற்கள் இன்று தோல்விக்கான கோசங்களாக அந்தத் தலைவர்களாலேயே கருதப்படும் ஒரு காலத்துக்குள் தமிழர்கள் தள்ளப்பட்டிருப்பது வரலாற்றுச் சோகம். தமிழர்களின் பலம் என்பது ஆயுதங்களில் மட்டுமே தங்கியிருந்தது என்பதை இவர்கள் நிரூபித்திருக்கிறார்கள். இப்போது எந்த முகத்துடன் தமிழர்களிடம் இவர்கள் வாக்குக்கேட்டு வரப்போகிறார்கள் என்று தெரியவில்லை. இந்தத் தேர்தல் வெறும் சிங்களத் தேர்தலாக மட்டுமே இருக்கப்போகிறது. ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதும் 18ஆவது திருத்தத்தை நீக்குவதும் மட்டுமே தமிழர்களின் பிரச்சினையை ஒருபோதும் தீர்க்கப்போவதில்லை. அவை எல்லாம் சிங்கள மக்களுக்கு மட்டுமே நிவாரணங்களைப் பெற்றுத் தரும், தமிழர்களுக்கு அல்ல. எனவே இந்தத் தேர்தலில் தமிழர்கள் பங்கெடுத்துத்தானாக வேண்டுமா என்ற கேள்வி பெரிதாகத் தொக்கி நிற்கிறது.

# ஜனாதிபதி மஹிந்த அவர்களே

## உங்கள் பற்றிய கோப்புகள் எம்மிடமும் உள்ளன

இந்த நாட்டில் நடந்த உண்மைகளைப் பொய்கள் மறைத்திருக்கலாம். ஆனால் இது நீண்ட காலம் நிலைத்திருக்காது. சிறிலங்காவின் பெரும்பாலான அரசியல்வாதிகள் நாட்டின் அழிவுக்கும் பொதுச் சொத்துக்களுக்கு ஊறுவிளைவித்தமைக்கும் காரணமாக இருக்கின்றனர் என்பதை மக்கள் அறிந்துகொள்வார்கள்.

இவ்வாறு அமெரிக்காவை தளமாகக் கொண்ட கவுண்டபஞ் (Counterpunch) ஊடகத்தில் ஸ்ரீலங்கா கார்டியன் (Sri Lanka Guardian) என்னும் இணையத்தள ஊடகத்தின் ஆசிரியரான நிலாந்த இலங்கமுவ எழுதியுள்ள கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

அன்புக்குரிய அதிபர் அவர்கட்கு, அமெரிக்காவில் நிலவிய அநீதி முறைமைக்கு எதிராகக் குரல் கொடுத்த, அந்நாட்டைச் சேர்ந்த விலைமதிக்க முடியாத ஒருவரான எட்வேர்ட் அபே கூறியது போன்று, தனிப்பட்ட ஒருவரின் நலனை நோக்காகக் கொண்டு நாட்டை வளர்ச்சியுறச் செய்வதானது புற்றுநோய் போன்று எல்லாவற்றையும் அழித்துவிடும் என்கின்ற கருத்தியலின் அடிப்படையில் நிர்வகிக்கப்படும் ஒரு தேசமானது நீண்ட காலம் நிலைத்திருக்காது.

நீங்கள் உட்பட பெரும்பாலான அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரத்துவவாதிகள் இந்த நாட்டைத் தீக்கோழிகளைக் கொண்ட நாடாக மாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறீர்கள் என்பதும் தங்களின் இத்தகைய நடவடிக்கைகளால் மக்கள் அநீதிகளுக்கு முகங்கொடுக்கும் போது தமது தலைகளை நிலத்துக்குள் புதைக்க முற்படுகின்றமையும் உண்மையே.

ஆனால் தற்போது காலம் மாறிவருகிறது. தற்போது சிறிலங்காவானது சாதகமான மாற்றங்களை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறது. மீண்டும் ஒரு தடவை, சிறிலங்காவின் அரசியல் சித்தாந்தங்களில் வன்முறையற்ற கோட்பாடுகள் தொடர்பாக அதிகம் பேசப்படுகின்றன.

வன்முறை சாரா அரசியல் நெறிமுறைகளை முதன்மைப்படுத்தி சிறிலங்காவின் எதிரணி ஜனாதிபதி வேட்பாளரும் ஆளுங்கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளருமான மைத்திரிபால சிறிசேனவின் உரையானது கேட்பதற்கு மிகவும் மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது.

எதுஎவ்வாறிருப்பினும், இந்தப் பயணம் இப்பொழுது தான் ஆரம்பித்துள்ளது. இதனை அடைவதற்கு இன்னமும் நீண்ட தூரம் உள்ளது. உண்மையான சவால்கள், தடைகள், சுமைகள் மற்றும் தோல்விகள் போன்றவற்றைச் சந்திக்க வேண்டி ஏற்படும்.

இந்த நாட்டின் ஒழுக்க விழுமியத்தைச் சீர்குலைத்த கொடுங்கோலனை முற்றாக அழிப்பதென்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. இதுவே தற்போது கொழும்பிலிருந்து வெளிவரும் ஊடகங்களில் அதிகம் பேசப்படுகின்றது. தனது கட்சியிலிருந்து வெளியேறியுள்ள மற்றும் வரும் நாள்களில் தனது கட்சியிலிருந்து விலகி எதிர்க்கட்சியில் கூட்டுச்சேரத் திட்டமிடுபவர்களுடன் ஜனாதிபதி ராஜபக்ஷ வெளிப்படையாகச் சவால் விடுத்துள்ளார்.

தனக்கு ஆதரவாகச் செயற்படும் அமைச்சர்கள் மற்றும் அரசியல்வாதிகளின் கோப்புகள் தன்னிடமுள்ளதாக சிறிலங்கா அதிபர் கூறுகிறார். இவர்களுக்கு சிறிலங்கா அதிபரின் உதவி தேவைப்படுவதாலேயே இவர்கள் தொடர்ந்தும் சிறிலங்கா அதிபரின் காலைச் சுற்றிவலம் வருகிறார்கள் என்பது உண்மையாகும். குறிப்பாக இந்த அரசியல்வாதிகளால் இழைக்கப்பட்ட தவறுகளை சிறிலங்கா அதிபர் நன்கறிவார். இதுவரை காலமும் இவர்களை சிறிலங்கா அதிபரே காப்பாற்றி வருகிறார்.

இந்த நாட்டில் நடந்த உண்மைகளைப் பொய்கள் மறைத்திருக்கலாம். ஆனால் இது நீண்ட காலம் நிலைத்திருக்காது. சிறிலங்காவின் பெரும்பாலான அரசியல்வாதிகள் நாட்டின் அழிவுக்கும் பொதுச் சொத்துக்களுக்கு ஊறுவிளைவித்தமைக்கும் காரணமாக இருக்கின்றனர் என்பதை மக்கள் அறிந்துகொண்டுள்ளனர்.

எதுஎவ்வாறிருப்பினும், இந்த அரசியல்வாதிகள் எவ்வாறான மீறல்களைப் புரிந்துள்ளனர் என்பதும் இவர்களது கோப்புகளில் என்ன உள்ளன என்பதும் எவருக்கும்தெரியாது. ஆனால் அரசியல் என்கின்ற பெயரில் இவர்களால் செய்யப்பட்ட மீறல்கள் மற்றும் தவறுகள் நாட்டின் உறுதிப்பாடு, ஒற்றுமை மற்றும் கண்ணியத்துக்கு அழிவை உண்டுபண்ணியுள்ளன என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கட்சிக்குத் துரோகம் இழைத்து, கட்சியிலிருந்து எதிர்க்கட்சிக்குத் தாவியவர்களுக்கு எதிராக அவர்கள் தொடர்பாக என்னிடமுள்ள கோப்புகளைப் பயன்படுத்தமாட்டேன். ஆனால் கண்ணாடி வீடுகளுக்குள் இருந்தவாறு கற்களை வீசவேண்டாம் என அவர்களை நான் எச்சரிக்கிறேன் என சிறிலங்கா அதிபர் கண்ணியமாகத் தெரிவித்துள்ளார். இதன்மூலம் அவர் தனது அரசியல் தந்திரோபாயத்தை பொதுக் கூட்டம் ஒன்றில் நாசூக்காக வலியுறுத்தியுள்ளார்.

சிறிலங்கா அதிபரின் இத்தகைய எச்சரிக்கையானது அரசியல் சந்தர்ப்பவாதத்தின் அப்பட்டமான கடும்போக்கான நிலைப்பாட்டையும், இவர் முன்னர் கொண்டிருந்த அரசியல் அதிகாரத்தை இழந்து வருகிறார் என்பதையும் பிரதிபலித்ததே தவிர வேறொன்றுமல்ல.

மற்றையவர்கள் தொடர்பாக சிறிலங்கா அதிபர் கொண்டுள்ள கோப்புகள் தொடர்பான கருத்தியலானது இரண்டு வெவ்வேறு முகங்களைக் கொண்டுள்ளது. முதலாவதாக, கடந்த பத்தாண்டில் சிறிலங்கா அதிபர் பின்பற்றிய தலைமைத்துவ ஒழுக்கநெறி. இரண்டாவது, இவரது அரசியல் நடத்தை மற்றும் அவரும் அவரது சகபாடிகளும் ஆட்சியைச் சீர்குலைத்தமை.

சிறிலங்கா அரசும் அரச திணைக்களங்களும் சுயாதீன அதிகாரத்தைக் கொண்டிருந்தால், சிறிலங்கா அதிபர் நிச்சயமாகத் தன்னிடமுள்ள கோப்புகளை சட்டமா அதிபரிடம் கையளிக்க வேண்டும். இதன்பின்னர் சட்டமா அதிபர் இந்தக் கோப்புகளை ஆராய்ந்து பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். ஆனால் சிறிலங்கா அதிபர் இத்தகைய நடவடிக்கையை எடுக்க முன்வராதது ஏன்?

அதிபரால் இதனைச் செய்ய முடியவில்லை என்பதால் இந்தக் கோப்புக்களை இன்னமும் கையளிக்காமல் வைத்திருக்கிறார் எனக் கருதக் கூடாது. இவரால் முடியும். ஆனால் இவர் தன்னைத் தானே பாதுகாப்பதற்காகவே இவற்றைக் கையளிக்காது தன்னிடம் வைத்துள்ளார். இவரது அரசியலானது சுய அழிவுக்கான ஒட்டுண்ணியாக மாறிவிட்டது.

மற்றைய அரசியல்வாதிகளின் தவறுகளை உள்ளடக்கிய கோப்புக்களைத் தான் வைத்திருப்பதாக சிறிலங்கா அதிபர் கூறுவதானது நாட்டின் மீது திட்டமிட்ட முறையில் அழிவை ஏற்படுத்துகின்ற ஒரு நடவடிக்கையே அன்றி வேறொன்றுமல்ல. இது நாட்டின் ஒருமைப்பாட்டின் அடிப்படை விழுமியங்களை இழிந்த முறையில் கையாள்வதையே சுட்டிக்காட்டுகிறது.

சிறிலங்கா அரசமைப்பின் 18வது திருத்தச் சட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட நிறைவேற்று அதிகார முறைமையை தவறாகப் பயன்படுத்துவதையே சிறிலங்கா அதிபரின் நடவடிக்கைகள் மேலும் சுட்டி நிற்கின்றன. தன்னைத்தானே பாதுகாப்பதற்காக திருடர்களைப் பாதுகாக்கும் தலைவர் ஒருவர் எமக்கு ஏன் தேவை?


இது நாட்டின் ஒழுக்கநெறி மற்றும் விழுமியத்தை மேலும் சீர்குலைக்கிறது. சட்டத்தின் மூலம் நீதியை நிலைநாட்டுவதற்குப் பதிலாக, சிறிலங்கா அதிபர் தன்னிடமுள்ள கோப்புகளை நிறைவேற்று அதிகார முறைமையையும் தன்னையும் பாதுகாப்பதற்காகத் திருடர்களை அச்சுறுத்துவதற்காகப் பயன்படுத்துகிறார்.

ராஜபக்ஷவின் அதிகாரம் மேலும் உயர்வடைந்தமைக்கு இதுவே காரணமாகும். இது மஹிந்த சிந்தனையின் உண்மையான பின்னடைவாகும்.

*நன்றி–ஸ்ரீலங்கா கார்டியன் இணையத்தளம்.*

# மாற்றங்கள் நிறைந்த ஜனாதிபதித் தேர்தல்கள்

சிங்களமூலம் (லங்காதீப)
உபுல் விக்கிரமசிங்க
தமிழில் வீ.எஸ்.ரி.



எதிர்வரும் ஜனவரி மாதம் எட்டாம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் நாட்டில் இடம்பெறவுள்ள எட்டாவது ஜனாதிபதித் தேர்தலாகும். அத்துடன் இந்த நாட்டின் ஏழாவது நிறைவேற்று ஜனாதிபதித் தேர்தல் என்பதும் விசேடமானதொரு அம்சமாகும்.

அதுவரையில் நடைமுறையில் இருந்து வந்த 1972 ஆம் ஆண்டின் அரசமைப்பில் 1978 ஆம் ஆண்டில் அரசமைப்புக்கான இரண்டாவது திருத்தத்தை மேற்கொண்டதன் மூலம் ஜே.ஆர். ஜெயவர்த்தனா தலைமையிலான ஐ.தே.கட்சி அரசு ஜனாதிபதி பதவிக்கான அதிகாரங்களை கட்டுப்பாடற்ற விதத்தில் அதிகரித்து நிறைவேற்று ஜனாதிபதி நடைமுறையாக அறிமுகப்படுத்தியது.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையின் கீழான முதலாவது தேர்தல் 1982 ஆம் ஆண்டில் இடம்பெற்றது. அந்த வேளையில் எதிரணி அரசியல் தரப்புக்கள் கடும் அடக்கு முறைக்கு உட்பட நேர்ந்தது. அந்த வேளையில் எதிர்க்கட்சித் தலைவியாகவிருந்த சிறிமாவோ தனது சிவில் உரிமை கள் பறிக்கப்பட்ட நிலையில் வெறும் எட்டே எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட சுதந்திரக் கட்சியின் தலைவி என்ற வகையில் எதிர்க்கட்சித் தலைவி என்ற பதவியையும் வகிக்க இயலாத கையறு நிலையில் இருந்தார். 1982 ஒக்ரோபர் மாதத்தில் இடம்பெற்ற அந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சி சார்பில் ஜே.ஆரும், சுதந்திரக் கட்சி சார்பில் ஹெக்டர்கொப்பேகடுவவும், ஜே.வி.பி.சார்பில் அதன் தலைவர் ரோஹண விஜேவீரவும், தமிழ்க் காங்கிரஸ் சார்பில் குமார் பொன்னம்பலமும், சமசமாஜக் கட்சி சார்பில் கொல்வின் ஆர்.டி.சில்வாவும், நவசமசமாஜக் கட்சி சார்பில் வாசுதேவ நாணயக்காரவும் போட்டியிட்டனர்.

குறிப்பிட்ட அந்த ஜனாதிபதித் தேர்தலில் மொத்தமாக அளிக்கப்பட்ட வாக்குகளில் 52.91 வீத வாக்குகளைப் பெற்று ஜே. ஆர். ஜனாதிபதியாகத் தெரிவானார். முக்கிய எதிரணி வேட்பாளரான கொப்பேகடுவ 39.07 வீத வாக்குக்ளைப் பெற்றது டன் ஏனைய வேட்பாளர்கள் அனைவரும் மிகக் குறைந்த வாக்கு வீதங்களையே பெற்றனர்.

1988 ஆம் ஆண்டு டிசெம்பரில் இடம்பெற்ற இரண்டாவது நிறைவேற்று ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சி சார்பில் பிரேமதாஸ போட்டியிட்ட அதே வேளை அவரை எதிர்த்து சுதந்திரக்கட்சியின் தலைவியான சிறிமாவோ களமிறக்கப்பட்டார். ஐக்கிய சமதர்ம முன்னணி சார்பில் ஒசி அபேகுணசேகர அந்தத் தேர்தலில் போட்டியிட்டார். அந்தத் தேர்தலில் 50.43 வீத வாக்குகள் பெற்று பிரேமதாஸ வெற்றிபெற, அவரை எதிர்த்துப் போட்டியிட்ட சிறிமாவோவால் 44.95 வீத வாக்குகளை மட்டுமே பெறமுடிந்தது. ஒசி அபேகுணசேகரவுக்கு வெறும் 4.63 வீத வாக்குகளே கிட்டின.

1994 ஆம் ஆண்டின் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் ஐ.தே.கட்சி பெரும் தோல்வியைச் சந்தித்ததுடன், ஐ.தே.கட்சி ஆட்சியைத் தோற்கடிக்கும் நோக்கில் சுதந்திரக்கட்சியின் தலைமையில் உருவாக்கப்பட்ட பொதுசன ஐக்கிய முன்னணி வெற்றியடைந்ததன் மூலம் சந்திரிகா நாட்டின் பிரதமராகப் பொறுப் பேற்றார்.

1994 ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்தில் இடம்பெற்ற மூன்றாவது நிறைவேற்று ஜனாதிபதித் தேர்தலில் பொ.ஐ.முன்னணி சார்பில் சந்திரிகா போட்டியிட்ட அதேவேளை ஐ.தே.கட்சி தனது வேட்பாளராக கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான காமினி திஸநாயக்காவை நிறுத்தியது. ஆயினும் தேர்தல் இடம்பெறுவதற்கு முன்னான பரப்புரை நடவடிக்கைகளின் போது காமினி திஸநாயக்க குண்டுத் தாக்குதல் ஒன் றின் மூலம் படுகொலை யுற நேர்ந்தது. அதனால் குறிப்பிட்ட அந்தத் தேர்தலில் ஐ.தே. கட்சி தனது சார்பாக, காமினி திஸநாயக்காவின் மனைவி ஸ்ரீமா திஸநாயக்காவை போட்டியிட வைக்க நேர்ந்தது.

பிரேமதாஸ, லலித் அதுலத்முதலி, காமினி திஸநாயக ஆகிய ஐ.தே.கட்சியின் முக்கிய தலைவர்களை விடுதலைப் புலிகள் ஒருவர் பின் ஒருவராகப் படுகொலை செய்ததன் காரணமாக ஐ.தே.கட்சி மீதான சிங்கள வாக்காளர்களின் அனுதாப அலை ஸ்ரீமா திஸநாயக்காவின் வெற்றிக்கு வழி வகுக்குமெனப் பரவலாக நம்பப்பட்ட போதிலும், தொடர்ச் சியான 14 ஆண்டுகால ஐ.தே.கட்சி அரசின் நிர்வாகத்தில் வெறுப்படைந்திருந்த சிங்கள வாக்காளர்கள் சந்திரிகாவுக்கே பெருமளவில் வாக்களித்து வெற்றி பெற வைத்தனர். அந்தத் தேர்தலில் 62.28 வீத வாக்குகளைப் பெற்று சந்திரிகா வெற்றியடைந்த அதேவேளை ஸ்ரீமா திஸநாயக்காவால் 35.91 சத வீத வாக்குகளையே பெறமுடிந்தது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 2000 ஆம் ஆண்டிலேயே நடத்தப்பட வேண்டியிருந்தபோதிலும்,சந்திரிகாஅதனைஓராண்டுக்கு முன்னர் 1999 ஆம் ஆண்டிலேயே நடத்துவதாகப் பிரகடனப்படுத்தினார்.

தேர்தலில் சந்திரிகாவை எதிர்த்து ஐ.தே.கட்சியின் வேட் பாளராக ரணில் போட்டியிட்டார். சந்திரிகாவின் தலைமையிலான அரசின் நிர்வாகம் தொடர்பாக நாட்டுமக்கள் அதிருப்தி அடைந்திருந்த போதிலும், தேர்தல் பரப்புரை வேளையில் சந்திரி காவை இலக்கு வைத்து விடுதலைப் புலிகள் மேற்கொண்ட குண்டுத்தாக்குதலில் சந்திரிகா ஒரு கண்ணின் பார்வையை இழந்தமை, அவர் மீதான பொது மக்களின் பச்சாதாபம் பெருமளவில் அதிகரிக்கக் காரணமானது.

அந்தத் தேர்தலில் 51.12 வீத வாக்குகள் பெற்று சந்திரிகா இரண்டாவது தடவையும் ஜனாதிபதிப் பதவியைக் கைப்பற்றிக் கொண்டார்.

> 1982 ஒக்ரோபர் மாதத்தில் இடம்பெற்ற அந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சி சார்பில் ஜே.ஆரும் சுதந்திரக் கட்சி சார்பில் ஹெக்டர் கொப்பே கடுவவும் ஜே.வி.பி. சார்பில் அதன் தலைவர் ரோஹண விஜேவீரவும், தமிழ்க் காங்கிரஸ் சார்பில் குமார் பொன்னம் பலமும், சமசமாஜக் கட்சி சார்பில் கொல் வின் ஆர்.டி.சில்வாவும், நவசமசமாஜக் கட்சி சார்பில் வாசுதேவ நாணயக்காரவும் போட்டியிட்டனர்.

ஐந்தாவது ஜனாதிபதித் தேர்தல் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி 2005 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டதுடன் அதில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு வேட்பாளராகஅப்போது அரசின் பிரதமராக இருந்த மஹிந்த ராஜபக்ஷ போட்டியிட, அவரை எதிர்த்து ஐ.தே.கட்சி சார்பில் மீண்டும் ரணில்விக்கிரமசிங்கவே போட்டி யிட்டார்.

அந்தத் தேர்தலைப் புறக்கணிக்குமாறு விடுதலைப் புலிகள் அமைப்பு தமிழ் மக்களைக் கேட்டுக்கொண்டதை அடுத்து தமிழ் மக்கள் அந்தத் தேர்தலில் வாக்களிப்பதை முற்றாகவே தவிர்த்துக் கொண்டனர். குறிப்பிட்ட அந்தத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ 50.29 வீத வாக்குகள் பெற்று ஜனாதிபதியாக வெற்றியீட்டியதுடன் , அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்கவால் 48.43 வீத வாக்குகளையே பெற முடிந்தது.

2010 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஆறாவது நிறைவேற்று ஜனாதிபதித் தேர்தலில் இரண்டாவது தடவையாக மீண்டும் போட்டியிட்ட மஹிந்த ராஜபக்ஷ அந்தத் தேர்தலில் தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட எதிரணி பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவைத் தோற்கடித்து இரண்டாவது தடவையும் ஜனாதிபதியாகப் பதவியைக் கைப்பற்றிக் கொண்டார். அந்தத் தேர்தலில் மஹிந்தவுக்கு 57.88 வீத வாக்குகளும், சரத் பொன்சேகவுக்கு 40.15 வீத வாக்குகளும் கிட்டின.

தற்போது எதிர்வரும் ஜனவரி 8 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஏழாவது நிறைவேற்று ஜனாதிபதித் தேர்தலில் அரசமைப்பு விதிகளில் திருத்தம் மேற்கொண்டதன் மூலம் மூன்றாவது தடவையும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் மஹிந்த ராஜபக்ஷவே வேட்பாளராகக் களம் இறங்குகின்றார். அவரை எதிர்த்துப் போட்டியிடவுள்ள மைத்திரிபால சிறிசேன கடந்த வாரம் வரை மஹிந்தவின் தலைமையிலான அரசில் சிரேஷ்ட அமைச்சராகப் பதவி வகித்தவர்.

எதிரணியின் பொது வேட்பாளராகக் களம் இறங்கியுள்ள அவருக்கும், மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் இடம்பெறப் போகும் தேர்தலில் கடும் போட்டி இருக்குமென்பது அரசியல் விமர்சகர்களது கணிப்பீடாகும்.

# வாசகர் திருமுகம்

## நிரந்தரமான தீர்வு வேண்டும்

சுன்னாகம் பகுதியிலுள்ள நிலத்தடி நீரில் எண்ணெய் கலந்துள்ளதால் அதை அருந்துபவர்களுக்கு புற்றுநோய், சிறுநீரகப் பாதிப்பு முதலிய நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளதாக வெளிவந்த செய்திகள் ஏற்கனவே பாதிக்கப்பட்ட நிலையில் உள்ள மக்களைக் கலக்கத்தில் ஆழ்த்தியுள்ளன.

எவரோ செய்த தவறுக்காக ஒன்றுமறியாத மக்களை அவலத்தினுள் தள்ளுவது எந்த வகையில் நியாயமானது என்பதும் புரியவில்லை.

ஆரம்பத்தில் இந்த அவலநிலை தொடர்பாக எவருமே அலட்டிக் கொள்ளாமல் இருந்துவிட்டுத் தற்போது விழித்து நிற்கின்றனர்.

இந்த அவல நிலைக்கு யார் காரணம் என்பதை மக்கள் நன்கறிவார்கள். ஆனால் இப்போது விடயத்தைத் திசை திருப்பும் பொருட்டு புதுக்கதைகள் காணப்படுகின்றன.

இலங்கை மின்சார சபையின் அயலில் உள்ள மக்கள் விழிப்புடன் இருந்து செயற்பட்டிருந்தால் இந்த மோசமான பாதிப்பு ஏற்பட்டிருக்கவே மாட்டாது. நிலத்தடி நீரில் எண்ணெய் கலந்து பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதால் ஒட்டுமொத்த சமுதாயமுமே சீர்குலைந்து நிற்கப் போகின்றது.

தற்போது வேறு வழியில்லாததால் இந்தப் பகுதியைச் சேர்ந்த பெரும்பாலான மக்கள் எண்ணெய் கலந்த நீரையே அருந்தி வருகின்றனர். இதனால் ஏற்படப் போகும் பாதிப்பு மோசமானதாக இருக்கப்போகின்றது. இந்தப் பகுதிக்கு வருகின்ற அரச அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் வெறுமனே பார்வையிடுவதும், சமாதானம் கூறுவதும் இந்த மக்களின் துயரத்தைத் தணித்துவிட மாட்டாது. மாறாக நிரந்தரமானதொரு தீர்வை வழங்க வேண்டும்.

ஆரம்பத்தில் சுன்னாகத்தில் பரவிய எண்ணெய் தற்போது கட்டுவன் வரை சென்றுள்ளதாகக் கூறுகிறார்கள். அவ்வாறெனின் ஆயிரக்கணக்கானகுடும்பங்கள்பாதிப்பை எதிர்கொண்டு வருவதை ஒத்துக் கொள்ள வேண்டும்.

இந்த மனிதப் பேரவலத்தை சிறுவிடயமாகக்கருதாது இதனை நீக்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்பதே பாதிக்கப்பட்ட மக்களின் வேண்டுதல் ஆகும்.

*க.சபாலிங்கம், சுன்னாகம்.*

## கடவுள்தான் காக்க வேண்டும்

கடந்த 27 ஆம் திகதி வியாழன் காலை 7.15 மணிக்கு கொழும்பு கோட்டையில் இருந்து யாழ்தேவி ரயில் யாழ்ப்பாணம் நோக்கி புறப்பட்டது. அந்த ரயிலில் நானும் பயணம் செய்தேன். பிற்பகல் 2 மணியளவில் ஓமந்தை ரயில் நிலையத்தில் ரயில் நிறுத்தப் பட்டது. அப்போது அங்கு வந்த படையினர் அடையாள அட்டைகளைச் சோதித்தார்கள். சுமார் 20 நிமிடம் யாழ்தேவி அங்கு தரித்து நின்றது. அதில் பயணம் செய்த இலங்கையைச் சேர்ந்த வெளிநாட்டுக்காரர் ஒருவர் இறக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

அவரிடம் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி (M.O.D.) இல்லாத காரணத்தினால் மேற்கொண்டு பயணம் செய்ய முடியாது எனக் கூறப்பட்டது. அவரின் பெட் டிகள் மழையின் மத்தியிலும் இறக்கப்பட்டன. இதை அந்த ரயிலில் வந்த பெரும்பான்மையின மக்கள் பார்த்து ரசித்தார் கள். யாழ்தேவி புறப்பட்டது. ஆனால் குறித்த நபர் பயணிக்கஅனுமதிக்கப்படவில்லை.

இந்தச் சோதனை நடவடிக்கையைக் கொழும்பு கோட்டையில் மேற்கொண்டால் வீண் அலைச்சல், பணச் செலவு, கவலை எல்லாம் இருக்காது.

ஓமந்தை இப்போது ரயில் நிலையம் அல்ல, இராணுவச் சாவடி என்றே கூறலாம். ஓமந்தையை ஓ....மந்தைகள் தமிழர் எனக் கூறலாம். இவர்களைக் கடவுள் தான் காக்க வேண்டும்.

*ஏ.ராம், யாழ்ப்பாணம்.*

### கருத்துச் சித்திரம்




## அஜித் டோவாலின் இலங்கை வருகை

ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பையடுத்து இலங்கை அரசியலில் ஏற்பட்டுள்ள பரபரப்பான நிலைமைகளுக்கு மத்தியில், இந்திய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் குமார் டோவாலின் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

காலியில் நேற்று ஆரம்பமான கடலோர கடல்சார் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு சம்பந்தமான மாநாட்டில் கலந்துகொள்வதற்காக கொழும்பு வந்துள்ளார் அஜித் டோவால். தமது இலங்கைப் பயணத்தின் போது இவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எதிரணிக் கட்சிகளின் பொதுவேட்பாளர் மைத்திரி பால சிறிசேன, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரைச் சந்திக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. எதிரணியின் பொதுவேட்பாளர் மீதான எதிர்பார்ப்புகள் வலுத்து வரும் நிலையில் இந்திய பாதுகாப்பு ஆலோசகர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவையும் மட்டுமன்றி எதிரணியின் பொது வேட்பாளரையும் சந்திப்பது முக்கியத்துவம் மிக்க விடயம் என்று அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் தலைவர்களையும் இந்திய பாதுகாப்பு ஆலோசகர் சந்திப்பார் என்று இந்திய ஊடகச் செய்திகள் குறிப்பிடுகின்றன. இலங்கையின் சமகால அரசியலை அறிந்து கொள்ள இந்தச் சந்திப்புகள் உதவியாக இருக்கும்.

இந்திய மாநிலங்களில் ஒன்றான கேரளாவைச் சேர்ந்தவர் அஜித் டோவால். 1967இல் இந்திய பொலிஸ் சேவையில் சாதாரண பதவியில் இணைந்துகொண்ட இவர் இந்தியாவின் உளவுத் துறையில் ஆற்றிய மகத்தான சேவை காரணமாக 2004இல் ஐக்கிய முற்போக்கு முன்னணி ஆட்சியின்போது இந்திய உளவுத்துறையின் தலைவராக நியமனம் பெற்றார். கடந்த மே மாதம் பிரதமர் நரேந்திரமோடியால் பாதுகாப்பு ஆலோசகர் பதவிக்கு உயர்த்தப்பட்டார். இவரது இலங்கைப் பயணமும் இலங்கையின் அரசியல் தலைவர்களை இவர் சந்திக்க இருப்பதும் எதிர்காலத்தில் இலங்கை விவகாரங்களில் இந்தியாவின் கரிசனைகள் அதிகரிப்பதற்கான சாத்தியங்களை ஏற்படுத்தியுள்ளன.

அஜித் டோவால் இந்தியாவின் ஐந்தாவது பாதுகாப்பு ஆலோசகர். முன்னர் பதவி வகித்த பாதுகாப்பு ஆலோசகர்களுடன் ஒப்பிட முடியாத அளவுக்கு உளவுத்துறையில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றியுள்ளார். 1986இல் மிஸோரம் கிளர்ச்சியை முடிவுக்குக் கொண்டு வருவதிலும் 1988இல் பஞ்சாப்பிலுள்ள சீக்கியரின் பொற்கோயில் மீதான வெற்றிகரமான தாக்குதலுக்கும் இவர் அளித்த பங்களிப்புகளே இவரை இந்தியாவின் உயர் பதவிகளில் ஒன்றான பாதுகாப்பு ஆலோசகர் பதவிக்கு உயர்த்தின என்பதில் சந்தேகம் இல்லை.

பர்மா எல்லையிலிருந்த மிஸோரம் தேசிய முன்னணியின் முகாமுக்குள் துணிச்சலுடன் சென்று அதன் தலைவர் லால் டென்காவுடனும் அவரது கிளர்ச்சிப் படைகளின் தளபதிகளுடனும் நடத்திய சந்திப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. அந்தச் சந்திப்பின் பின்னர் தமது ஏழு தளபதிகளில் அறுவர் சமாதான ஒப்பந்தத்துக்கு இணங்கியது தமக்கு ஆச்சரியம் அளித்ததாக லால் டென்கா பின்பு ஒரு சமயம் தெரிவித்திருந்தார்.

1988இல் பாகிஸ்தான் உளவாளி வேடத்தில் சீக்கியர்களின் பொற் கோயிலுக்குள் சென்று காலிஸ்தான் தீவிரவாதிகளின் பாதுகாப்பு ஏற்பாடுகளை உளவறிந்தமை, கறுப்பு முழக்கம் – 11 என்று பெயரிட்டு பொற்கோயிலுக்குள் புகுந்து இந்தியப் படைகள் நடத்திய தாக்குதல் வெற்றிபெற முக்கிய காரணமாக இருந்தது.


அதேசமயம் 2002இல் பொலிஸாருக்கு விரிவான அதிகாரங்களை வழங்கும் பயங்கரவாத தடுப்புச் சட்டம் கொண்டுவரப்படுவதற்கும் முழு ஆதரவு வழங்கினார் அஜித் டோவால். 2004இல் ஐக்கிய முற்போக்கு முன்னணி அரசால் இது நீக்கப்பட்டுவிட்டது. இலங்கையில் நீர்மூழ்கிகளின் பிரசன்னம் உட்பட அதிகரிக்கும் சீனாவின் இராணுவப் பிரசன்னத்தால் முன்னெப்போதுமில்லாத அளவுக்கு இந்தியா கரிசனை கொண்டுள்ள நிலையில் இங்கு வருகை தந்துள்ள டோவலுக்கு அவர் திறமைக்கு சவால் விடும் பணிகளும் இருக்கின்றதை சொல்லியேயாகவேண்டும். நேற்று காலியில் நடந்த கடலோர கடல்சார் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு மாநாட்டிலும் அஜித் டோவால் பயங்கர வாதம் குறித்துப் பேசியுள்ளார். பயங்கரவாதத்தை இலங்கை வெற்றிகரமாக முறியடித்த தைப் பாராட்டியுள்ளார்.

இலங்கை தொடர்பான கொள்கையில் இந்தியாவின் பன்முக ராஜதந்திர நடவடிக்கைகளில் இதுவும் ஒன்றாக இருக்கலாம். அதற்காக இலங்கை அரசு அஜித் டோவாலின் கருத்தை முதன்மைப்படுத்திக்கொண்டு தமிழர் பிரச்சினை தொடர்பான இந்தியாவின் ஏனைய கரிசனைகளைத் தட்டிக் கழிக்க முடியாது. இலங்கையில் தமிழ் மக்கள் கௌரவத்துடனும் சம உரிமைகளுடனும் வாழ இந்திய அரசின் செயற்பாடுகள் அமைய வேண்டும். இதற்கு அஜித் டோவாலின் பங்களிப்பும் முக்கியமானது.

பத்தி எழுத்து

# சிறுவர்






## உதவி செய்ய மறுக்கலாமா?



அந்தக்காட்டில் வசித்த சிறிய முயல் ஒன்று தனது பெற்றோர் துணையின்றி இரை தேடுவதற்காகத் தன்னிருப்பிடத்தை விட்டு வெளியே வந்தது. அது ஓர் இடத்தில் மண்ணில் புதைந்திருந்த கிழங்கைக் கண்டது. அந்த முயல் சிறியதாக இருந்ததால், அந்தக் கிழங்கைத் தோண்டி எடுக்க முடியவில்லை. அந்தக் கிழங்கைத் தோண்டி எடுக்க என்ன செய்யலாம்? என்று யோசித்தது. அருகில் இரண்டு மான்கள் அங்கிருந்த பசும்புற்களை மேய்ந்து கொண்டிருந்தன.

சிறிய முயல் அந்த மான்களிடம்சென்று,தான்சிறுவயதாகவனாக இருப்பதால் தனக்கான கிழங்கைத் தோண்டி எடுக்க இயல வில்லை என்றும், அந்தக் கிழங்கை எடுத்துத் தந்து உதவும்படியும் கேட்டது. அங்கிருந்த மான்களில் ஒன்று, 'உனக்குக் கிழங்கை எடுத்துத் தருவதால் எனக்கு என்ன லாபம்? என்னால் உனக்குக் கிழங்கை எடுத்துத் தர முடியாது...' என்று மறுத்து விட்டது. இதைக் கேட்ட முயல் என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் நின்றது.

முயலின் கவலையைக் கண்ட அதனருகிலிருந்த மற்றொரு மான் முயலை அழைத்துக் கொண்டு அது விரும்பிய கிழங்கு புதைந்திருந்த இடத்தில் தனது கொம்பைக் கொண்டு நிலத்தை இலேசாகக் கீறி விட்டது. தற்போது முயல் எளிதாக அந்தக் கிழங்கை எடுத்துச் சாப்பிட்டது.

அந்த மானுக்கு நன்றி சொன்னது. இரண்டும் மகிழ்ச்சியுடன் திரும்பின. இந்தச்சமயத்தில் முயலுக்கு உதவ விரும்பாத மான், வேடன் ஒருவன் விரித்து வைத்த வலையில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தது. இதைக் கண்ட முயலுக்கு உதவிய மான் கவலையடைந்தது. என்ன செய்வதென்று தெரியாமல் தவித்து நின்றது. இதைப் பார்த்த முயல், மான் சிக்கியிருந்த வலையில் சில இடங்களைத் தனது கூர்மையான பற்களால் கடித்து வலையைத் துண்டித்து மானை விடுவித்தது. வலையிலிருந்து விடுவிக்கப்பட்ட மான் அந்தக் குட்டி முயலுக்குத் தான் உதவ முன் வராததுக்கு வருத்தம் தெரிவித்ததுடன், தன் நன்றியையும் தெரிவித்தது.

ஒருவருக்கொருவர் தங்களால் இயன்ற உதவிகளை மற்றவர்களுக்குச் செய்திட வேண்டும்.

## புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு.

# மீள்கேள்வி அறிவித்தல் – 2015

கீழே அட்டவணையில் விவரிக்கப்பட்ட நிலையங்களை 01.01.2015 இலிருந்து 31.12.2015 வரையான காலப்பகுதிக்கு நடத்துவதற்காக குத்தகைக்கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் :- 03.12.2014 முற்பகல் 9.00 மணி தொடக்கம் 11.12.2014 நண்பகல் 12.00 மணிவரை(அலுவலக நாள்களில் மட்டும்)
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி :- 11.12.2014 பிற்பகல் 01.00 மணிவரை
கேள்வி திறக்கப்படும் திகதி :- 27.12.2014 பி.ப 01.30 மணி

| இல | குத்தகை வகை | மீளளிக்க முடியாத கேள்விப்படிவ கட்டணம் (NBT,VAT நீங்கலாக) | மீளளிக்ககூடிய கேள்வி வைப்புப்பணம் (NBT,VAT நீங்கலாக) | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (NBT,VAT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | புதுக்குடியிருப்பு உப அலுவலகம் | | | |
| 01. | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தையும் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையமும் (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 1,000.00 | 20,000.00 | 4,805,665.00 |
| 02. | உடையார்கட்டு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 1,000.00 | 5,000.00 | 511,000.00 |
| 03. | விசுவமடு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 1,000.00 | 15,000.00 | 1,250,000.00 |
| 04. | விசுவமடு பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 6,000.00 | 330,196.00 |
| | ஒட்டுசுட்டான் உப அலுவலகம். | | | |
| 01. | கற்சிலைமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 10,000.00 | 182,000.00 |
| 02. | முத்துஐயன்கட்டு இடதுகரை பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 10,000.00 | 182,000.00 |
| | ஒலுமடு உப அலுவலகம் | | | |
| 01. | திருமுறிகண்டி கட்டண கழிப்பறை | 1,000.00 | 5,000.00 | 255,500.00 |

நிபந்தனைகள்.

- கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதிகளை செயலாளர், பிரதேசசபை, புதுக்குடியிருப்பு என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
- எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் மூன்றிலொரு பகுதியை 15.12.2014ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றைச் செய்து கொள்ள வேண்டும். மேலதிக விவரத்தை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
- கேள்விப்பத்திரத்தினைப் பெற விரும்புவோர் விண்ணப்பத்துடன் தேசிய அடையாள அட்டையின் பிரதியுடன் தரம் வதியும் வதிவிடத்தின் வதிவிட சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
- வியாபாரம் நடைபெறும்போது பொதுமக்கள் இருபக்கமும் நிறையினை அவதானிக்கக்கூடிய தராசினை பயன்படுத்தல் வேண்டும்.
- மரக்கறிச்சந்தையை அண்மித்துள்ள இடங்களில் (1km சுற்றுவட்டாரத்துள்) நடைபாதை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோரிடம் கட்டணம் அறவிடுவதன் மூலம் வியாபார நடவடிக்கையை ஊக்குவித்தல் கூடாது. அத்துடன் வியாபாரம் செய்வதற்கு அனுமதியளித்தல் கூடாது.
- சந்தையை குத்தகைக்கு பெறுபவர் சந்தைக்கு வரும் சந்தைப் பொருள்களின் மொத்தப் பெறுமதியின் 4% கட்டணம் அறவிடலாம். மீன், மரக்கறிச்சந்தை வியாபாரிகளிடம் இடத்திற்கு (4'X4') ரூபா 40.00இற்கு மேற்படாமலும் கட்டணம் (இடவாடகையாக) அறவிடலாம். இதற்கு மேலதிகமாக எந்த வித கட்டணமும் அறவிடக்கூடாது. சந்தையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் பாதுகாக்கப்படும் துவிச்சக்கர வண்டி ஒவ்வொன்றுக்கும் ரூபா 5.00உம் மோட்டார் சைக்கிள் ஒவ்வொன்றிற்கும் ரூபா 10.00உம் அறவிடலாம். அதற்கு மேலதிகமாக எந்தவித கட்டணமும் அறவிடக்கூடாது.
- இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் கடையினது கழிவுகளை தாங்களே அகற்ற வேண்டும். அத்துடன் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் கொல்களத்தையே பயன்படுத்துதல் வேண்டும்.
- இறைச்சி வகைகளுக்கான கட்டுப்பாட்டு விலையானது சபையினால் தீர்மானிக்கப்படும்.
- இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு பெறும் குத்தகைதாரர்கள் மாதமொன்றிற்கு ரூபா 500.00 இஷன கடைவாடகையாக சபைக்குச் செலுத்துதல் வேண்டும்.
- சந்தை வளவின் உட்புறமாக உள்ள கடைகளுக்கு எந்தவிதமான வரியும் அறவிடக் கூடாது.
- ஏற்கனவே ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு தவறுநர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ இதில் பங்குபற்ற இயலாது.
- சந்தைகள் நடைபெறும் இடங்கள் தேவை ஏற்படின் மாற்றப்படும்.
- மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**கு.மிதிலைநாதன்**
**செயலாளர்,**
**பிரதேச சபை, புதுக்குடியிருப்பு.**
**01.12.2014**

**செல்லா சினிமா யாழ்ப்பாணம்**

விஜய், சமந்தா
நடிப்பில்
# கத்தி
(தினசரி 4 காட்சிகள்)
10.30, 2.30, 6.30, 9.30



எமது செல்லா சினி திரையரங்கில் உங்களது விளம்பரங்களை காட்சிப்படுத்த அழையுங்கள்
077 326 6949

**தவறிவிட்டது**

அரவிந்தன் துஷ்யந்தன் 78, கனகரத்தினம் வீதி, அரியாலை (951442682V) இலக்க தேசிய அடையாள அட்டையும் ஆவணங்களும் கைலாசபிள்ளையார் கோயிலுக்கும் மனோகரா‌ச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொண்டு உதவவும். (54533) (4.6.3)
தொடர்பு: 077 125 8072, 077 316 1251

யாழில் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில்
டென்மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி அன்னையாரின்
அருள் ஒளி தர்சன மாலையும்
கார்த்திகை பௌர்ணமி விசேட பூஜையும்





பூத்தவளே, புவனம் பதினான் கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே கறைக்கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னை அன்றி மற்று ஓர் தெய்வம் வந்திப்பதே?

இராஜேஸ்வரி அம்மனை அவதாரமெடுத்து டென்மார்க் பிரண்டாபதியில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ அபிராமி அன்னையின் கார்த்திகை மாதத்திற்குரிய அருள்ஒளி தர்சன மாலை விசேட பூஜை இடம்பெற ஸ்ரீ அபிராமி அம்பாளின் திருவருளும் ஸ்ரீ அபிராமி உபாசகியின் ஆசிகளும் கைகூடியுள்ளன.

நடமாடும் தெய்வமாகவும், அன்பான தாயாகவும், நல்வழிகாட்டும் குருவாகவும் விழங்கும் அபிராமி உபாசகித் தாயாரின் திருவடி பூஜையில் கலந்துகொள்ளும் பக்தர்கள் அனைவருக்கும் நல்எண்ணமும், உள்ளத்தில் சாந்தியும், வாழ்க்கையில் நம்பிக்கையும், நோய் நொடியற்ற சுபீட்சமான வாழ்வும், தெய்வத்தின் அருட்கடாட்சமும் நிறைவாக கிட்டும்.
அம்மாவிடம் அருள்வாக்கு கேட்க விரும்பும் பக்தர்கள், அன்றைய தினம் நேரடியாகக் கேட்டுக் கொள்ளலாம்.

இடம்
நல்லூர் இளங்கலைஞர் மண்டபம்
காலம் : 06.12.2014
சனிக்கிழமை
பகல் 10.30 மணி

**திருவருள் நிகழ்வுகள்:**
- மங்கள வாத்தியக் கச்சேரிகள்
- தெய்வீக பஜனை நிகழ்வுகள்
- அவதார நிகழ்வுகளின் ஒளித்திரைக் காட்சி
- அன்னையாரின் திருவடிகளுக்குப் பாத பூஜை
- அன்னையாரின் திருக்கரங்களால் பூஜிக்கப்பெற்ற தேசிக்காய்.
- காவல் பொருட்கள், திருவருட் பிரசாதம் ஆகியன வழங்கப்படும்
- அன்னதான நிகழ்வும் இடம்பெறும்

அன்னையாரின் ஆலயத்தில் பூஜையில் வைத்துப் பூஜித்து தருவிக்கப்பட்ட காவல் தேசிக்காய், திருவுருவப் படம், அம்மையாரின் திருவுருவம் பொறிக்கப்பட்ட பென்ரன்கள், திருப்புக் கோர்வைகள், அம்பாளுக்கு அபிஷேகம் செய்யப்பட்ட யாகநீர் போன்ற அருட் பொருட்களை மண்டபத்தில் பெற்று அம்பாளின் திருவருளை பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

ஆலயத் தொடர்புக்கு:
Tel: 0045 97180192, 0045 40413431
Fax: 0045 97184192

யாழ் தொடர்புக்கு:
077 982 5004

www.abiramiamman.dk

www.nisaart.com

இடம் : நல்லூர் இளங்கலைஞர் மண்டபம் காலம் : 06.12.2014 சனிக்கிழமை பகல் 10.30



**ICT Classes for School Students**

*6th December 2014 to 2nd January 2015*

- *Introduction to ICT*
- *Keyboarding*
- *MS Word*
- *MS Excel*
- *MS Powerpoint*
- *Internet & Techniques*

*New Gateway Tech Branches at*
- *Jaffna,*
- *Nelliady,*
- *Chavakachcheri,*
- *Kilinochchi*

Limited Space Registration Required



NGT NEW GATEWAY TECH **GATEWAY**
No. 39, College Road, Neeraviady, Jaffna. 021 221 7771

#1, New Market Building, Chavakacheri. 021 227 0323 (#17957)(4.3.6)
#55, Point Pedro Road, Nelliady. 021 226 2395
Karadippokku Junction, A9 Road, Kilinochchi. 021 228 0065

# செய்திகள்

# ஜனாதிபதி தேர்தலால் மு.காவுக்குள் பிளவு?

கொழும்பு, டிசெ.2
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளருக்கு ஒத்துழைப்பு வழங்குவது என்பது தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
கட்சியின் உயர்மட்டச் சபையின் கூட்டத்தில் வைத்து பெருமளவிலான உறுப்பினர்கள் தலைவர் ரவூப் ஹக்கீம் அரசிலிருந்து வெளியேற வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.
அரசு தமது மக்களுக்கு வழங்கியிருந்த வாக்குறுதிகளால் எதையுமே இன்று வரையில் நிறைவேற்றவில்லை. தம்மைப் போன்றே தமது மக்களும் கூட அரசின் மீது நம்பிக்கையிழந்திருக்கின்றனர் என்று முஸ்லிம் காங்கிரஸின் உயர்மட்ட உறுப்பினரொருவர் கூறியுள்ளார்.
பொது வேட்பாளராகப் போட்டியிடும் மைத்திரிபால சிறிசேனவுக்கே முஸ்லிம் காங்கிரஸ் தனது ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றே கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம், நியமன உறுப்பினரான மொஹமட் அஸ்லாம் மற்றும் கட்சியின் பொது செயலாளரான ஹசன் அலி உட்படப் பெருமளவு உறுப்பினர்களின் கருத்தாகவுள்ளது. அதேவேளை பயன்பாடுகள் அபிவிருத்தி அமைச்சர் பஷீர் சேகு தாவுத் மற்றும் திகாமடுல்ல மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் மொஹமட் காசீர் பைஸல் ஆகியோர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கே ஆதரவு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.
பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஒத்துழைப்பு வழங்குவதென தீர்மானம் எடுக்கப்படின் அமைச்சர் சேகு தாவுத் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொள்ளக்கூடும் என்றும் கூறப்படுகின்றது.

(ந-22)

# ஜனாதிபதித் தேர்தல் நீதியாக அமையாது

## இராணுவ முன்னாள் தளபதி சரத் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.2
ஜனவரி மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் நீதியான தாகவும், சுதந்திர மானதாகவும் அமையாது என்று கூறியுள்ள இராணுவ முன்னாள் தளபதி சரத் பொன்சேகா, தேர்தலைக் கண்காணிக்கும் வெளிநாட்டு அமைப்புக்கள் வாக்குகள் நேர்மையான முறையில் எண்ணப் படுவதை உறுதி செய்ய வேண் டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.
நாடு கடந்த சில ஆண்டுகளில் கண்டுள்ள வீழ்ச்சி குறித்து விரக்தி வெளியிட்டுள்ள அவர், இந்த நிலையைத் தொடர அனுமதிக்க முடியாது. வேறு வழியில்லை என்றும் கூறியுள்ளார்.
சர்வதேச சஞ்சிகை ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
பிரிட்டன் உட்பட உலகநாடுகள், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக் கூறுவதை உறுதி செய்யுமாறு ஜனாதிபதிக்கு மேலும் அழுத்தங்கள் கொடுக்கும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.
"நான் சிறையில் அடைக்கப்பட்டேன். மாதத்துக்கு ஒரு முறை அரை மணி நேரம் எனது மனைவி என்னைப் பார்க்க அனுமதிக்கப்பட்டார். அழுத்தங்களால் நான் அடிபணிவேன் என்று அவர்கள் நினைத்தார்கள். எனது நிலம், வீடு, ஓய்வூதியம் என அனைத்தையும் பறித்தார்கள்"– என்று அவர் கூறியுள்ளார்.
ஜனாதிபதிக்கும், அரசுக்கும் நாடு குறித்து எந்த நிகழ்ச்சி நிரலும் இல்லை என்று சுட்டிக் காட்டியுள்ள சரத் பொன்சேகா, இலங்கை தனது அடையாளத்தை மீளப் பெறுவதற்கான இறுதி வாய்ப்பு இது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ந)

# விலை போவோர் இனிமேல் இல்லை – மஹிந்த

கொழும்பு, நவ.2
டொலர்களுக்கு விலை போகக்கூடியவர்கள் இனியும் என் அமைச்சரவையில் இல்லை என்று கூறியுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முதுகெலும்பு அற்ற சிலரை தலைவர்களாக்கும் தேவை, சில வெளிநாட்டுச் சக்திகளுக்கு ஏற்பட்டுள்ளது. அவர்கள் அடிக்கும் தாளத்துக்கேற்ப ஆடுபவர்களை நியமிக்க வேண்டும் என்பதே அந்த சக்திகளின் நோக்கம் – என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி "எமது மக்கள் அவ்வாறானவர்களுக்கு இடமளிப்பதில்லை"– என்று தெரிவித்துள்ளார்.

(ந)

# கைவிடப்பட்ட பழைய பொருள் மஹிந்த தலைமையிலான சு.க.

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.2
மஹிந்த தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சி பயன்படுத்தப்பட்டு கைமாறிய பழைய பொருள் என்று கூறியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.
பயன்படுத்தப்பட்ட பழைய பொருளான மஹிந்த ராஜபக்ஷவின் சுதந்திரக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டுமா? அசல் ஐக்கிய தேசியக் கட்சி எம்மிடம் உள்ளது. எமக்கு வாக்களியுங்கள் – என்று அவர் தெரிவித்துள்ளார்.
பொலநறுவையில் நேற்றுமுன்தினம் நடந்த பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் முதலாவது பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
"கைமாறிய பழைய பொருள்களுக்கு வாக்களிப்பதால் பயனில்லை. நாங்கள் மஹிந்தவைப் போன்றவர்கள் அல்ல. மைத்திரியைப் பயன்படுத்தி விட்டு தூக்கி எறிந்துவிடமாட்டோம். மைத்திரிபால சிறிசேன சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பாதுகாப்பார், பல கட்சி அரசியலை பாதுகாக்க நாங்களும் அர்ப்பணிப்புடன் இருக்கின்றோம்"– என்றும் அவர் அங்கு தெரிவித்துள்ளார்.

(ந)

THIYAHIE CHARITABLE TRUST

# தியாகி அறக்கொடை நிறுவுனர்

## உயர்திரு. வாமதேவா தியாகேந்திரன் அவர்களின்

# 63ஆவது அகவையில்

## "ஒரு நாளில் ஒரு கோடி கோடியில் ஒருவன்"



தனிநபர் நலனை விடவும் சமூக நலனை முதன்மைப் படுத்திச் செயற்படுவோரே உண்மையில் பிறவிப் பயனை அடைகின்றார்கள். அந்த வகையில் தியாகி அறக்கொடை நிறுவனத்தை அமைத்து தனது சொந்த நிதிப்பங்களிப்புடன் அறப்பணிச் செயற்பாடுகளைத் தொய்வில்லாது தொடரும் திரு.வாமதேவா தியாகேந்திரன் அவர்கள் புலம்பெயர்ந்தோருக்கெல்லாம் புகழ் தேடித் தரும் புரவலர். இலங்கையில் மட்டுமின்றி வேறு பல நாடுகளிலும் தம் அறக்கொடைப்பணியை இன, மத, மொழி வேறுபாடின்றி முன்னெடுக்கும் இவர் காலத்தை வென்ற கர்ணன்.

தமது 63ஆம் அகவை நாளின்று (02-12-2014) பரந்துபட்ட சமூகநலத் திட்டங்களுக்கென ஒரே நாளில் ஒருகோடி ரூபாவினை வழங்கவுள்ள இவருடைய கொடையுள்ளம் கோடி மனிதரில் ஒருவர் இவர் எனக் கோடிட்டுக் காட்டுகின்றது.

இன்று (2-12-2014) மட்டும் அவரின் அறப்பணிக் கொடுப்பனவுகள்:

1) நோயாளர்களின் நலன் கருதி வவுனியா பொது வைத்தியசாலைக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வழங்குவதற்கான நீர் சுத்திகரிப்பு நிலையம் (Drinking Water Filtration System) ஒன்றினை அமைத் துக் கொடுத்தலும் பராமரித்தலும் -முப்பத்தி ஐந்து லட்சம் ரூபாய்கள் (3500000)
2) யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கு நுழைவாயில் அமைத்துக் கொடுத்தல் ஆறு லட்சத்து ஐம்பதினாயிரம் (650000)
3) புனித பத்திரிசியார் கல்லூரிக்கு (St. Patrick's College) டென்னிஸ் மைதானம் அமைத்துக் கொடுத்தல் ஆறுலட்சம் ரூபா (600000)
4) அண்மையில் மீள்குடியமர்த்தப்பட்ட எழிலூர் என்ற கிராமத்திலுள்ள சிறார்களின் கல்வி முன்னேற்றத்திற்கான முன்பள்ளி ஒன்றினை அமைத்துக் கொடுத்தல். ஆறு லட்சம் ரூபா (600000)
5) மதவாச்சியில் சுயதொழில் முயற்சியாளர் ஒருவருக்கு இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் (250000) வழங்கப்பட்டது.
6) பூம்புகார் கிராமத்தில் வசிக்கும் வறுமை நிலையில் உள்ள மாணவர்களுக்கு 100 சோடி காலணிகள் வழங்குதல்.
7) மாற்றுவலுவுடைய குழந்தைகளுக்கான சத்துணவும் அத்தியாவசியப் பொருள்களும் வழங்கப்படவுள்ளன.
8) ஊர்காவற்துறையில் 11 மூத்த கலைஞர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்-தலா 10000 வீதம் ஒரு லட்சத்தி பத்தாயிரம் வழங்கப் படவுள்ளது.
9) மலையகத்தைச் சேரந்த 70 பயனாளிகளுக்கான மாதாந்த உதவிதிட்டம்.
10) செம்மணி பொதுமயானத்தின் மேலதிக பராமரிப்புச் செலவிற்காக 40000ரூபா வழங்கப்படவுள்ளது.
11) முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஆங்கில மொழி வகுப்பிற்காக ஒரு லட்சம் (100000ரூபா) வழங்கப்படவுள்ளது.
12) ஐந்தாம் ஆண்டு புலமைபரிசில் மாணவர்கள் மூன்று பேருக்கு தலா 5000வீதம் வழங்கப்படவுள்ளது.
13) கோண்டாவில் ராமகிருஸ்ணா பாடசாலைக்கு அச்சுப்பிரதி இயந்திரம் (Photocopy Machine) ஒருலட்சத்து இருபத்தி ஐந்தாயிரம் (125000ரூபா) வழங்கப்படவுள்ளது.
14) வேம்படி மகிளிர் உயர் கல்லூரியின் இருமாடிக் கட்டிடத்திற்கான மின் இணைப்பு வசதிகளின் பொருட்டு இரண்டு லட்சம் (200000ரூபா) வழங்கப்படவிருக்கின்றது.
15) எமது சிறுவர் இல்ல புனரமைப்பிற்கான முதற்கட்டச் செலவின்பொருட்டு முப்பது லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது (3000000ரூபா)
16) நானாவித உதவிகள் ஏழு லட்சம்.

CONGRATULATIONS

தியாகி அறக்கொடை நிறுவனத்தினூடாக பல வருடங்களாக மாதாந்தம் 15லட்சம் ரூபாய் பின்வரும் சமூக நலச் செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்படுகின்றன.

**1. கல்வி ஊக்குவிப்புச் செயற்திட்டம்**

- **பாடசாலை மாணவர்களுக்கான உதவி**

மிகவும் வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு அவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக மாதாந்தம் உதவி வழங்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம், வண்ணார்பண்ணை இளையதம்பி இந்து வித்தியாலயம், ஒஸ்மானியா கல்லூரி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த ஒருதொகுதி மாணவர்களுக்குப் பாதணிகள் வழங்கப்பட்டுள்ளன.

- **பல்கலைக்கழக மாணவர்களுக்கான உதவி**

பல்கலைக்கழகங்களில் கல்விகற்கும் வசதி குறைந்த மாணவர்களுக்கு அவர்களின் கல்வித் தேவைக்காக மாதாந்தம் தலா 750/= வழங்கப்படுகின்றது.

யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் கற்றல்வள நிலையம் ஐந்து லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச்செய்து கொடுக்கப்பட்டது.

- **முன்பள்ளி ஆசிரியர்களுக்கான உதவி**

பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த மிகவும் வசதி குறைந்த முன்பள்ளிப் பாடசாலைகளில் சேவை புரியும் ஆசிரியர்களுக்கு மாதாந்த ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படுகின்றது.

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு பிரதேச செய்லகத்தினால் கொண்டாடப்படும் சிறுவர் தின விழாவிற்கு அன்பளிப்பு பொருள்கள் எம்மால் வழங்கப்பட்டு வருகின்றன.

**2. மருத்துவ உதவிச் செயற்திட்டம்**

- **புற்று நோயாளருக்கான உதவி**

புற்று நோயினால் பாதிக்கப்பட்ட மிகவும் வறிய நிலையில் உள்ள நோயாளர்களுக்கு மருத்துவச் செலவிற்காக மாதாந்தம் தலா 500/- வழங்கப்படுகின்றது.

புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு யாழ் போதனா வைத்தியசாலையின் ஊடாகவும் மாதாந்தம் 25,000/- நிதியுதவி வழங்கப்படுகின்றது.

- **முதியவர்களுக்கான மருத்துவ உதவி**

பிரதேச செயலகங்களின் ஊடாக மாவட்ட அலுவலகர் சமூகநலத்துறை திணைக்களத்தினால் வைத்திய உதவி போதியளவு பெறமுடியாத வறுமைக்குட்பட்ட முதியோர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் இலவச மருத்துவ சேவை எம்மால் வழங்கப்படுகின்றது. அத்துடன் இவர்களுக்கு இலைக்கஞ்சியும், போக்குவரத்து வாகன வசதிகளும் வழங்கப்படுகின்றது.

- **ஏனைய மருத்துவ உதவிகள்**

மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு செல்லும் மிகவும் வசதி குறைந்த நோயாளர்களுக்கு போக்குவரத்துச் செலவுக்காகவும், மருத்துவச் செலவுக்காகவும் நிதியுதவி வழங்கப்படுகின்றது அத்துடன் யாழ் மாநகரசபைக்குட்பட்ட பொருளாதாரவசதி குறைந்த கர்ப்பிணித் தாய்மார்களுக்கான மாதாந்த உதவித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டு வருகின்றது.

**3. பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கா வாழ்வாதார உதவிச் செயற்திட்டம்**

கணவனை இழந்த அல்லது கணவனால் கைவிடப்பட்ட மிகவும் வறிய நிலையில் இருக்கும் குடும்பங்கள் பொருளாதார முயற்சியில் வருமானத்தை யீட்டத் தொடங்கும் வரை அவர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கேற்ப மாதாந்தம் சிறிய உதவித் தொகை வழங்கப்படுகின்றது.

பொருளாதார முயற்சியில் ஈடுபட்டுள்ள மாதர் சங்கங்கள், மற்றும் தொண்டு நிறுவனங்களின் உள்ளூர் உற்பத்திகளை சந்தைப்படுத்த வசதி செய்து கொடுக்கப்படுகின்றது.

**4. ஆதரவற்ற முதியவர்களுக்கான உதவிச் செயற்திட்டம்**

ஆதரவற்று வறுமைக் கோட்டின் கீழ் வாழும் முதியோர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனாக தலா 500/- வழங்கப்படுகின்றது.

யாழ்மாவட்டத்தைச் சேர்ந்த 132 முதியவர்களுக்கும், பிலியந்தலையைச் சேர்ந்த 187 முதியவரகளுக்கும், நுவரெலியாவைச் சேர்ந்த 66 முதியவர்களுக்கும் மாதாந்த உதவிகள் வழங்கப்படுகின்றன.

**5. சிறுவர்கள் தொடர்பான செயற்திட்டம்**

எம்மால் நடத்தப்பட்டுவரும் சிறுவர் இல்லத்தில் பெற்றோரை இழந்து பாடசாலை செல்லும் 16 பெண் பிள்ளைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள். அவர்களுக்கான தங்குமிடம், உணவு, பாடசாலை செலவு கள் போன்ற சகலதும் எமது நிறுவன தலைவரினா லேயே வழங்கப்படுகின்றது.

**6. மகளிர் மீள் எழுச்சித்திட்டம்**

பொருளாதார ரீதியில் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ள பெண்களுக்கு மாதாந்தம் 500/- ரூபா உதவித்தொகையாக வழங்கப்பட்டு அவர்கள் பொருளாதார முயற்சிகளில் ஈடுபடுவதற்கான சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

**7. சூழல் பாதுகாப்புத்திட்டம்**

இத்திட்டத்தின் ஊடாக செம்மணி இந்து மயானம் தெரிவு செய்யப்பட்டு, இங்கு 200 நிழல் தரும் மரங்கள் நாட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் மாதந் தோறும் இவ் மயானத்தில் உள்ள புற்செடிகள் எம்மால் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

இத்திட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் மாதாந்தம் 15லட்சம் ரூபாய் எமது ஸ்தாபகரினால் ஒதுக்கப்படுகின்றது.
மேற்குறிப்பிட்ட உதவித்திட்டங்களை செயற்படுத்து வதற்கு ஏதுவாக உள்ள நிதிவளங்கள்.

- **எமது ஸ்தாபகர் திரு. வாமதேவா தியாகேந்திரன் அவர்களின் மாதாந்த நன்கொடை**
- **ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையத்தில் இருந்து கிடைக்கும் வருமானம்**
- **ரிசிரி விருந்தினர் விடுதி, சொர்ணாம்பிகை மண்டபம் ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம்**

எமது உதவித்திட்டங்களுக்கான நிதியை பெறும் வழியாக ஆரம்பிக்கப்பட்ட வியாபார முயற்சிகளின் மூலம் கிட்டத்தட்ட 80 பேர் வரையிலான இளைஞர்கள், யுவதிகள் வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளமை இங்கே குறிப்பிடப்பட வேண்டிய அம்சமாகும்.

**கடையேழு வள்ளல்கள் வழியில்
தடையின்றி வாரிவழங்கும்
கோடியில் ஒருவரான தியாகிக்கு
ஈடில்லா புகழ் கிட்ட
கோடி வாழ்த்துக்கள்!**




**தனிமனிதராக வியத்தகு அறப்பணிகளைப் புரியும் திரு.வாமதேவா தியாகேந்திரன் அவர்களை மேலும் பல்லாண்டுகாலம் வாழ்ந்து இன்னும் பல அறப்பணிகளைப் புரிவதற்கு இறைவனை வேண்டுகின்றோம்.**

**எ.பிரபாகரன்**

**தென்பகுதி இணைப்பாளர் தியாகி அறக்கொடை நிறுவனம் - ellalanp@gmail.com**

# உலகச் செய்திகள்



## உலக சாதனை படைத்தது நாணயத்தில் கட்டிய பிரமிட்

லித்வேனியா நாட்டு இளைஞர் ஒருவர் 10 லட்சம் லிட்டாஸ் நாணயங்களை வைத்து பிரமிட் அமைத்து உலக சாதனை படைத்துள்ளார்.

லித்வேனியாவில் அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் யூரோ பயன்படுத்தப்பட உள்ளதால், அந்த நாட்டின் நாணயமான லிட்டாஸ் இனிமேல் பயன்படுத்தப்படமாட்டாது.

இந்நிலையில் 26 வயது வாலிபர் டாமஸ் ஜோகுபாவ்ஸ் கிஸ், தமது நாட்டின் பணம் உலக அளவில் நினைவில் இருக்க வேண்டும் என்ற நோக்கில் லிட்டாஸ் நாணயங்களைக் கொண்டு பெரிய பிரமிட்டை உருவாக்க எண்ணினார். இதற்காக ஒரு மில்லியன் நாணயங்களைச் சேகரித்து ஒருவாரம் செலவழித்து ஒரு மீற்றர் உயரமுள்ள பிரமிட்டை உருவாக்கி சாதனை படைத்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், இதற்கு முன்னதாக 6 லட்சம் நாணயங்களை கொண்டு பிரமிட் உருவாக்கப்பட்டமை தான் உலக சாதனையாக இருந்தது.

மேலும், அதனை நாங்கள் எப்படியும் முறியடித்து விடுவோம் என்று உறுதிபூண்டு இந்த முயற்சியை எடுத்து 10 லட்சம் நாணயங்களை வைத்து உருவாக்கினோம் என்று தெரிவித்துள்ளார். (வ)

## கண்கவர் இயற்கை அதிசயமாக காட்சி அளிக்கும் டான்சியா



வானவில்லைப்போன்ற பலவண்ணங்களில் கண்ணைக் கவரும் நிலப்பரப்பாக விளங்குகிறது சீனாவிலுள்ள டான்சியா நிலப் பரப்பு.

சீனாவின் தென் கிழக்கு, தென் மேற்கு மற்றும் வட மேற்கு பகுதிகளில் காணப்படும் டான்சியா என்றழைக்கப்படும் நிலப்பரப்பு வானவில்லைப் போல பல வண்ணங்களில் காணப்படுகிறது.

யுனெஸ்கோவின் பாரம்பரிய பட்டியலில் முக்கிய இடமாக இந்த டான்சியா நிலப்பரப்பு அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலப்பரப்பில் அமைந்துள்ள வண்டல் மண் படுகையில் ஏற்படும் உள்புற பெயர்வு, மழை மற்றும் மண் அரிப்பு போன்ற காரணங்களால், பல வண்ணங்களில் காணப்படுகிறது.

கண்கவர் இயற்கை அதிசயமாக விளங்கும் இந்த நிலப்பரப்பில் சிவப்புப் பாறைகள், வியத்தகு தூண்கள், பள்ளத்தாக்குகள் மற்றும் நீர் வீழ்ச்சிகள் போன்றவை காணப்படுகின்றன. மேலும், இந்தக் கரடுமுரடான இயற்கை நிலப்பரப்பு, பரந்த துணை வெப்பமண்டல காடுகளையும், தாவரங்கள் மற்றும் விலங்கினங்களையும் பாது காத்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (வ)



## கேரளாவில் குரங்கு காய்ச்சல்

கேரளாவில் பறவைக் காய்ச்சல் பீதி அடங்குவதற்குள் குரங்கு காய்ச்சல் பரவுகிறது. அதைக் கட்டுப்படுத்த சுகாதாரத்துறை தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

கேரளாவில் கடந்தவாரம் பரவிய பறவைக் காய்ச்சல் மக்கள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தியது. இந்த நோய் காரணமாக லட்சக்கணக்கான வாத்துகளும் ஆயிரக்கணக்கான கோழிகளும் கொல்லப்பட்டன. கேரள சுகாதாரத்துறை தீவிர நடவடிக்கை காரணமாக இதுவரை மனிதர்களுக்கு இந்த நோய் பரவவில்லை.

இந்நிலையில் இந்தப் பீதி அடங்குவதற்குள் கேரளாவில் குரங்கு காய்ச்சல் பரவத் தொடங்கியுள்ளது. மலப்புறம் மாவட்டம் நிலம்பூர் கரளாயி மற்றும் மாஞ்சிரி ஆதிவாசி கிராமங்களில் குரங்கு காய்ச்சல் பரவ தொடங்கியுள்ளது. அதையடுத்து சுகாதாரத் துறை அதிகாரிகள் தடுப்பு நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கியுள்ளனர். இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தலைவலி, உடல் வலி, மூக்கு மற்றும் வாயில் இருந்து ரத்தம் வடிதல் போன்ற அறிகுறிகள் தென்படும். உடனடியாக சிகிச்சை மேற்கொள்ளாவிட்டால் இறப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. (ரி)

# ஈழத் தமிழருக்கு சம உரிமை

## வழங்க வேண்டும் என்கிறார் மத்திய அமைச்சர் வெங்கைய நாயுடு



சென்னை, டிசெ. 2

இலங்கையைப் பகைத்துக் கொள்ளக்கூடாது என்று தெரிவித்துள்ள இந்திய மத்திய அமைச்சர் வெங்கைய நாயுடு, ஈழத் தமிழர்களுக்குச் சம உரிமை வழங்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

வடமாநிலத்தில் நடைபெற்ற பாரதிய ஜனதாக் கட்சிக்கு, புதிய உறுப்பினர்களை இணைத்துக் கொள்ளும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு அரசமைப்பு பொறிமுறை ஒன்றின் மூலமாக தமிழர்களுக்கு சம உரிமையையும், சமமான வாய்ப்புகளையும் வழங்கவேண்டும்.

இலங்கை தொடர்பான இந்தியாவின் கொள்கையைக் குறை கூறுபவர்கள், இலங்கையையோ அல்லது சீனா போன்ற ஏனைய அயல் நாடுகளையோ நாம் பகைத்துக் கொள்ளக் கூடாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

பிரதமர் நரேந்திர மோடியின் முயற்சியால் தான் தமிழ்நாட்டு மீனவர்கள் நிபந்தனையின்றி விடுவிக்கப்பட்டனர். இது இரு நாடுகளுக்கும் இடையிலான நில்லையான உறவுகளுக்கு உதவியாக இருக்கும், என்றும் அவர் தெரிவித்துள்ளார். (வ-5)

## தமக்கான கனவு வீட்டை தங்கள் கைகளாலே கட்டி முடித்த தம்பதி



கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவில் லோறா பாக்கர் மற்றும் தோமஸ் ருவென் என்ற தம்பதியினர், தங்களின் பசுமையான கனவு வீட்டை தங்கள் கைகளாலேயே கட்டி முடித்துள்ளனர்.

பிரிட்டிஷ் கொலம்பியாவில் சிட்னி என்ற இடத்தைச் சேர்ந்த இந்தத் தம்பதியர்களுக்குத் தங்கள் கனவு வீட்டை கட்டி முடிக்க 5 வருடங்கள் எடுத்துள்ளன.

6,000 சதுர அடி நிலத்தில் அமைந்த 1950-காலப்பகுதி வீட்டை வாங்கிய போது அதனைப் புதுப்பிக்க நினைத்தனர். பின்னர் அந்த யோசனையைக் கைவிட்டு புதிய வீடொன்றைக் கட்ட நினைத்தனர். 57-வயது ருவென் மற்றும் 55 வயது பாக்கர், 6 மாதங் கள் திட்டமிட்டு பசுமையான ஒரு வீட்டை தங்கள் கைகளால் கட்டத் தீர்மானித்தனர். இந்த வீட்டைக் கட்டி முடிக்க 5 வருடங்கள் எடுத்துள்ளன.

மேலும், தங்கள் நிலத்திலேயே வீட்டுத்தோட்டம் ஒன்றையும் உண்டாக்கி தங்கள் தமக்குத் தேவையானவற்றை உற்பத்தி செய்கின்றனர். (வ)



## எபோலா இறப்பு ஏழாயிரத்தை நெருங்குகிறது

### உலக சுகாதார நிறுவனம் தகவல்

எபோலா நோயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 7 ஆயிரத்தை நெருங்கியுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேற்கு ஆபிரிக்க நாடுகளான கினியா, சியாராலியோன், லைபீரியா ஆகிய மூன்று நாடுகளும் இந்த நோயால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.

அந்த நாடுகளில் சுகாதார வசதிகள், மருத்துவப் பணியாளர்கள், மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றின் குறைபாடுகளாலேயே இந்த நோயை விரைவாகக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. மேலும் எபோலா நோய் தாக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 7 ஆயிரத்தை நெருங்கிவிட்டது.

இந்த நோய்க்கு இதுவரை 6,928 பேர் உயிரிழந்துள்ளதாக உலக சுகாதார நிறுவனம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. (வ)

## தாய்க்காக அமைக்கப்பட்ட ஏழை மனிதனின் தாஜ்மஹால்



தாஜ்மஹால்



பீபீகா மக்பரரா

மும்பை, டிசெ.2

மஹாராஷ்ட்ரா மாநிலம், ஔரங்காபாத்தில் அமைக்கப்பட்ட தாஜ்மஹால் போன்று, மன்னர் ஆஜம்ஷா, தனது தாய்க்குக் கட்டிய நினைவுச் சின்னம் 'ஏழை மனிதனின் தாஜ்' என்று அழைக்கப்படுகிறது.

மொகலாயப் பேரரசர் ஔரங்கசீப்பின் மகன்தான் ஆஜம் ஷா. 1651-1661 வரை மன்னராக இருந்த காலத்தில் அவரது தாத்தா ஷாஜஹான் மும்தாஜுக்குக் கட்டிய தாஜ்மஹாலைப் பார்த்து மிகவும் அசந்துபோய் அதேபோல் தனது தாய்க்கும் கட்ட ஆசைப்பட்டார். அந்தக் கல்லறையே பீபீ கா மக்பாரா ஆகும். இதற்கு, 'லேடி கல்லறை' என்று அர்த்தம்.

மக்பாரா அமைக்கப்பட்ட காலத்தில் அதற்கான செலவு 7 மில்லியன் இந்திய ரூபாவாகும். ஆனால் தாஜ்மஹால் கட்ட 32 மில்லியன் இந்திய ரூபா தான் செலவாகியது.

அதனால்தான் இந்த மக்பராவை 'ஏழை மனிதனின் தாஜ்' என்று அடக்கமாகக் குறிப்பிடுகிறார்கள். தாஜ்மஹாலுக்கு இணையானதெனச் சொல்லமுடியாவிட்டாலும் கூட இந்த நினைவுச் சின்னத்தின் உள்ளே இருக்கும் அழகிய வடிவங்கள் பார்வையாளர்களை மிகவும் கவர்கிறது. அங்கு அமைந்துள்ள தோட்டம், மொகலாயர்களை நினைவூட்டும் விதமாக உள்ளது. (ரி)

# உலகச் செய்திகள்

## பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் மீதான வழக்கை விசாரிக்கலாம்

### அந்த நாட்டு உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

டாக்கா, டிசெ.2

பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் காலிதா ஷியா மீதான ஊழல் வழக்கை சிறப்பு நீதிமன்றம் விசாரிக்கலாம் என்று அந்த நாட்டு உச்ச நீதிமன்றம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை தீர்ப்பளித்தது.



இதுதொடர்பாக அவர் தாக்கல் செய்த மனுவை உச்ச நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு அமர்வு நிராகரித்தது.

முன்னதாக, சிறப்பு விசாரணை நீதிமன்றம் இந்த வழக்கை விசாரிக்கக் கூடாது என்ற அவரது கோரிக்கையை, உயர்நீதிமன்றம் நிராகரித்திருந்தது. அதை எதிர்த்து காலிதா ஷியா உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார்.

தற்போது உச்ச நீதிமன்றமும் இந்த மனுவை நிராகரித்ததை அடுத்து, டாக்கா நகர சிறப்பு நீதிமன்றத்தில் ஊழல் வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெறும்.

காலிதா ஷியாவின் கணவர் முன்னாள் ஜனாதிபதி ஷியாவுர் ரகுமான் பெயரிலான இரு தொண்டு நிறுவனங்கள், பெயரளவில்தான் இயங்கி வந்தன. ஷியா அறக்கட்டளையிலிருந்து சுமார் ரூ. 2.4 கோடியை அவர் கையாடல் செய்தார் என்ற குற்றச்சாட்டு அவர் மீது சுமத்தப் பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ஷியாவுர் ரகுமான் பெயரில் இயங்கும் அநாதைக் குழந்தைகள் பராமரிப்புக்கான அறக்கட்டளையின் கணக்கிலிருந்து, ரூ.1.66 கோடியைக் கையாடல் செய்ததாக வேறொரு குற்றச்சாட்டும் காலிதா ஷியா மீது சுமத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான வழக்கில் அவரது மூத்த மகன் தாரிக் ரகுமான் மீதும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

2001–2006 ஆண்டுகளில் காலிதா ஷியா பிரதமராக இருந்தபோது, இந்த முறைகேடுகள் நடைபெற்றுள்ளன. காலிதா ஷியா மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் நிரூபணமானால், அவருக்கு அதிகபட்சமாக, ஆயுள்சிறைத்தண்டனை கிடைக்க வாய்ப்புள்ளது. (வ)



## இஸ்லாமியருடன் பாப்பரசர் பிரார்த்தனை

துருக்கியின் பிரபல மசூதி ஒன்றில் இஸ்லாமியர்களுடன் பாப்பரசர் பிரான்சிஸ் பிரார்த்தனை செய்துள்ளார்.

துருக்கிக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்ட கத்தோலிக்க மதத் தலைவர் பாப்பரசர் பிரான்சிஸ், தனது சுற்றுப்பயணத்தின் இரண்டாவது நாளான கடந்த சனிக்கிழமை இஸ்தான்புல் நகரில் இருக்கும் மிகப்பெரிய ப்ளூ மசூதிக்குச் சென்றுள்ளார்.

மசூதியின் வெளியே தனது காலணிகளைக் கழற்றிவிட்டு சென்ற அவர், இஸ்தான்புலின் இஸ்லாமிய தலைவர் முப்தி ரஹ்மி யாரன் அருகில் நின்று தலையைக் குனிந்து சில நிமிடங்கள் மௌனமாக பிரார்த்தனை செய்துள்ளார்.

அதனை அடுத்து அருங்காட்சியகத்துக்குச் சென்ற அவரை வழியில் நின்ற பாடசாலைக் குழந்தைகள் துருக்கிய மற்றும் வாடிகன் கொடிகளை அசைத்து வரவேற்றுள்ளனர்.

அதேபோல் 2006 ஆம் ஆண்டு பாப்பரசர் பெனடிக்ட் மசூதியொன்றுக்குச் சென்றதைப் பல கத்தோலிக்க கிறிஸ்தவர்களும், சில இஸ்லாமியர்களும் விமர்சித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)



## பிரிட்டனில் 13,000 அடிமைகள்

லண்டன், டிசெ.2

பிரிட்டனில் 13 ஆயிரம் பேர் வரை அடிமை நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் வெளியாகியுள்ளன. இந்தத்தொகை முன்னரை விடவும் நான்கு மடங்கு அதிகமாகும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நவீன அடிமைத்தனத்தால் பாதிக்கப்பட்டவர்களில் விபசாரத்துக்குள் தள்ளப்பட்ட பெண்கள், வெளியில் செல்ல முடியாமல் அடைத்து வைக்கப் பட்ட வீட்டுப் பணியாளர்கள், விளைநிலங்கள், தொழிற்சாலைகள், மீன்பிடிப் படகுகள் போன்றவற்றில் வேலை செய்பவர்கள் ஆகியோரும் அடங்குவார்கள்.

2013 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட புள்ளிவிவரங்களின் அடிப்படையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (வ)

## பனிக்கட்டிக்குள் புதையுண்ட சிறுவர்கள் உயிருடன் மீட்பு

### சுமார் 7 மணி நேரப் போராட்டத்தின் பின்



அமெரிக்காவில் நியூயோர்க் மாகாணத்தில் பெய்து வரும் பனிப்பொழிவு காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நியூயோர்க் நகரில் ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பு பகுதியில் கொட்டிக் கிடக்கும் பனிக்கட்டிகள்ள அகற்றும் பணியில் தொழிலாளி ஒருவர் ஈடுபட்டிருந்தார்.

அந்த அடுக்கு மாடி குடியிருப்பில் கொட்டிக் கிடக்கும் பனிக்கட்டிகளை ஓரமாகத்தள்ளி ஒதுக்கினார். அப்போது அங்கு எலிஜா மார்டினெஷ் (வயது 11), ஜாசன் ரிவேரா (வயது 9) என்ற 2 சிறுவர்கள் சுவற்றின் ஓரம் தூங்கிக் கொண்டிருந்ததை அவர் அறியவில்லை. எனவே, அந்தப் பனிக்கட்டிகளை சுவற்றின் ஓரம் தூங்கிக் கொண்டிருந்த சிறுவர்கள் மீது தள்ளி மூடிவிட்டார்.

இதற்கிடையே குறித்த இரு சிறுவர்களையும் காணாததால் பெற்றோர்கள் தேடியதுடன், பொலிஸாருக்கும் தகவல் கொடுக்கப்பட்டது. சம்பவஇடத்துக்குஉடனேவிரைந்து சென்ற பொலிஸார் தேடுதல் பணியில் ஈடுபட்டனர்.

அந்த நேரம் சிறுவர்கள் அணிந்திருந்த ஷுவின் லேஸ் வெளியே தெரிந்தது. இதனால் சந்தேகம் அடைந்து பனிக்கட்டியை அகற்றிப் பார்த்த போது அவர்கள் இருவரும் உள்ளே சிக்கி மூச்சுத்திணறியபடி கிடந்தனர். அதைத்தொடர்ந்து உயிருடன் மீட்கப்பட்டனர். (வ)

## கறுப்பின இளைஞரைச் சுட்டதால் அமெ.பொலிஸ் அதிகாரி ராஜிநாமா

வொஷிங்டன், டிசெ.2



அமெரிக்காவில் மிசோரி மாகாணம், பெர்குசனில் கறுப்பின இளைஞர் ஒருவரை கொலை செய்த பொலிஸ் அதிகாரி பலத்த சர்ச்சைகளின் மத்தியில் பதவி விலகியுள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி மைக்கேல் பிரவுன் என்ற கறுப்பின இளைஞரை, டேரன் வில்சன் என்ற வெள்ளை இன பொலிஸ் அதிகாரி சுட்டுக் கொலை செய்திருந்தார்.

இந்தச் சம்பவம் அமெரிக்காவில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியதுடன், தொடர் போராட்டங்களுக்கும் வழிவகுத்தது.

இந்த நிலையில் குறித்த கொலை வழக்கில் தொடர்புடைய பொலிஸ் அதிகாரி டேரன் வில்சன் மீது நீதிமன்றத்தில் குற்றவிசாரணை நடத்தத் தேவையில்லை என்று ஜுரிகள் குழு கடந்த 24 ஆம் திகதி தீர்ப்பு அளித்தது.

இது கறுப்பின இனத்தவர் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. சுட்டுக்கொல்லப்பட்ட பிரவுனின் குடும்பத்தினர், ஜுரிகளின் தீர்ப்பு அநீதியானது என்று கூறினர். அதையடுத்து சம்பவம் நடைபெற்ற பெர்குசனில் கலவரம் ஏற்பட்டது. கலவரக்காரர்களை விரட்டியடிக்கப் பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வெடிக்க வைத்தனர். (வ)

## வேற்றுகிரக வாசிகளிடம் இருந்து கிடைத்த ஒரு தகவல் 'வாவ்!'

அமெரிக்காவின் ஓஹியோ மாகாணத்தில் 1977 ஆம் ஆண்டு, ஒரு கோடைகால இரவில் ஆய்வகத்தில் ஜெர்ரி எஹ்மான் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார். அப்போது அவரது கணினியில், வழக்கத்துக்கு மாறாக ஏதோ ஒரு ரேடியோ சமிக்ஞை பதிவானது. அந்தச் சமிக்ஞை (தகவல்/சமிக்ஞை) 72 நொடிகளுக்குத் தொடர்ந்து கிடைத்தது. எதிர்பாராமல் நிகழ்ந்த இந்த நிகழ்வால் திகைப்படைந்த ஜெர்ரி உடனே அந்தச் சமிக்ஞையைச், செய்தியாக கணினியின் உதவியுடன் பரிமாற்ற தொடங்கியுள்ளார்.

அதாவது பூமியில் வாழும் உயிரினங்களால் அனுப்பப்படாத, எமது சூரிய குடும்பத்துக்கு வெளியிலிருந்து பெறப்பட்ட ஒரே தகவல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

அந்தச் சமிக்ஞை எங்கிருந்து, எவரால், என்ன காரணத்துக்காக அனுப்பப்பட்டது என்பது குறித்து எதுவுமே தெரியாத நிலையில் அதனை மொழிமாற்றம் செய்து வாசிக்க முயன்றுள்ளனர்.




மூன்று தினங்கள் தொடர்ந்து போராடி அந்த சமிக்ஞையை மொழி பெயர்த்த போது, அதன் மூலம் அறியப்பட்ட வார்த்தை 'வாவ்'.

இந்தத் தகவல் டௌ சகிட்டர், என்ற நட்சத்திரத்தின் சுற்றுப்புறத்திலிருந்து வந்ததாகப் பின்னர் கண்டறியப்பட்டது, மேலும் இந்த நட்சத்திரம் பூமியிலிருந்து 120 ஒளி ஆண்டுகள் தொலைவில் இருப்பதாகவும் கண்டு பிடிக்கப்பட்டது.


1977 இல் பெறப்பட்ட இந்தசமிக்ஞையைத் தவிர இன்றுவரை வேறு எந்தச் சமிக்ஞையும் பெறப்படவில்லை. ஒருவேளை வேறு எந்த சமிக்ஞையும் அனுப்பப்படவில்லையா அல்லது தகவல் அனுப்பப்பட்டு எம்மால் பெற முடியாமல் போனதா என்ற கேள்விக்கும் இன்றுவரை விடை இல்லை. (வ)

# பல்சுவை

## மாற்றமடைந்து வரும் இளைஞர் சமுதாயம்

தற்கால இளைஞர்களின் மனோபாவம் எதிர்ப்புத் தன்மையை அடிப்படையாகக் கொண்டிருப்பது எம்மில் பலருக்கு மிகுந்த ஆச்சரியத்தைத் தரலாம். எமது மனோபாவம், எம்மைவிட வயதால் கூடியவர் களால் அல்லது அறிவில் உயர்ந்தவர்களால் அல்லது அனுபவத்தில் முதிர்ச்சி பெற்றவர்களால் ஒரு விடயம் தரப்படும் போது அதை மறுப்பின்றி ஏற்றுக்கொள்ளுதல் வழக்கமாக இருந்தது. அது மட்டுமல்ல இப்போதும் இருக்கின்றது. ஆனால் தற்கால இளைஞர் களோ, எதிர்ப்புத் தன்மையை அதிகம் கொண்டவர் களாகக் காணப்படுகின்றார்கள்.

நாம் பிறந்ததிலிருந்து கணிசமான காலத்துக்கு நமது பெற்றோர், உற்றார், உறவினர்கள், ஆசிரியர்கள் மற்றும் பலர் நமது ஒட்டுமொத்தமான வாழ்க்கையைத் தீர்மானிக்கும் பொறுப்பைத் தாங்களாகவே ஏற்றுக்கொண்டார்கள். இன்னொரு வகையில் கூறுவதாயின் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டிய வகையில் சமுதாயக் கட்டமைப்புக்கள் அமைக்கப்பட்டிருந்தன. இதனால் இந்தக் கட்டமைப்புகளுக்குள்ளேயே எமது வாழ்க்கை உள்ளடக்கப்பட வேண்டியதாயிற்று. அத்துடன் இவர்கள் அனைவரும் அறிந்து கொண்ட தெரிந்து கொண்ட விடயங்கள் அனைத்தும் இவர்களைப் பொறுப்பாக ஏற்றுக் கொண்டவர் களது அறிதலாகவும் தெரிதலாகவும் இருந்தன. இன்னும் சிறிது காலம் நாம் பின்னோக்கிச் செல்வோமாயின் இவர்கள் அறிந்து கொண்ட, தெரிந்துகொண்ட விடயங்களின் அடித்தளமாக இவர்கள் சார்ந்த மதம், மொழி, கலை, கலாசாரம், பண்பாடு என்பன அமைந்திருந்தன. இவையனைத்தும் தனி மனித ஒழுக்கத்தை மையமாக வைத்து மனித சமுதாயத்தை நகர்த்துவதற்குப் பயன் படுத்தப்பட வேண்டியதாயிற்று. அத்துடன் மாற்றங் களுக்கு இடமளிக்க முடியாத வகையில் அல்லது இடமளிக்கக் கூடாத வகையில் பல தலைமுறைகளாக பின்பற்றுதல், வழிப்படுத்தல் என்ற அடிப்படையில் பயன்படுத்தப்படுவதாயிற்று. இவ்வாறான விடயங்கள் சமூக விதிமுறைகளாக நீண்ட காலமாகப் பின்பற்றப்படுவதற்கு மிகவும் சாதகமாக அமைந்தது. ஒரு சமூகத்துக்கும் இன்னொரு சமூகத்துக்கும், ஒரு இனத்துக்கும் இன்னொரு இனத்துக்கும், ஒரு நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்கும் இடையில் தடுக்கப்பட்ட அல்லது தவிர்க்கப்பட்ட அல்லது இயல்பாகவே மற்றைய சமூகத்தின் வாழ்வு முறைகளைப் புரிந்து கொள்ளவோ அல்லது அறிந்து கொள்ளவோ வசதிகளற்று இருந்தமையே இதற்குக் காரணம்.



(தொடரும்)



## எனது அப்பா

ஆளுக்கொரு தலைவன்
இருப்பினும்
எனது முதல் தலைவன் அப்பா
உலகம் போற்றும் தலைகள்
பல இருப்பினும்
யாரும் அறியாத தலைவன் –
அப்பா
அறுபதிலும் அவர் இளைஞன்
– என்னை
வழி நடத்திய அறிஞன்
என் வயிறு நிறைய
பசிக்காத வயிறுனக்கு
உனக்கு ஒரு ஜென்மம்
உண்டெனில்
எனக்கு மகனாக பிறக்க வரம்
தருவாய்....?
நீ பட்ட துன்பங்கள்
அனைத்தும் என்னாலே தான்
என நான் அறிந்ததால்
இந்தக் கவி உனக்கு!
உன்னை வாழ்த்தி முடிக்க
எனது கவிதை வரிகளுக்கு
தகுதியில்லை – என்றாலும்
கவிதை வரிகளை தவிர
என்னிடம்
வேறெதுவுமில்லை...

சிந்து சிவதாஸ்
சுதுமலை.



## நாளை

**கார்த்திகை-17**
**புதன்கிழமை**
**03.12.2014**

திதி:துவாதசி
மு.இ.08.29 வரை
நட்சத்திரம்: அச்சுவினி
பி.இ.12.27
சுபநேரம்:
04.45-06.15 வரை
இராகுகாலம்:
12.15-01.45 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### மற்றவர்களுக்குச் செய்யும் உதவி கடவுளுக்குச் செய்யும் சேவையாகும்

ஒவ்வொரு ஆண், பெண் குழந்தைகளையும் கடவுளாகப் பாவியுங்கள். நீங்கள் எவரையும் மேம்படுத்த முடியாது. நீங்கள் சேவை தான் செய்ய முடியும். பகவானுடைய ஆதரவற்ற குழந்தைகளுக்கு சேவை செய்யுங்கள். உங்களுக்கு பாக்கியமிருந்தால் அவர்களுக்கு சேவை செய்வதன் மூலம் ஆண்டவனுக்குச் சேவை செய்தவர்களாவீர்கள். அந்தக் குழந்தைகளுக்கு உதவியாயிருக்கின்ற அதிர்ஷ்டத்தை ஆண்டவன் உங்களுக்கு அளிப்பானானால் அதன்மூலம் நீங்கள் அவன் அருள் பெற்றவர்களாவீர்கள். ஆனால் இதன் காரணமாக உங்களைப் பற்றி அதிகம் நினைத்துக் கொள்ள வேண்டாம். மற்றவர்களுக்கு இந்த உதவி செய்யும் சந்தர்ப்பம் கிடைக்காமலிருக்க உங்களுக்கு அது கிடைத்தது. ஆண்டவனுடைய அருள் உங்கள் பாலிருப்பதற்கு இது அறிகுறியென்பதை உணருங்கள். இந்தச் சேவையை இறைவனின் வழிபாடெனப் பாவித்துச் செய்யுங்கள். என்னுடைய நன்மைக்காகவே நான் வழிபடுகிறேன். அதேபோல் நம்முடைய நன்மைக்காகவே நாம் ஏழை மக்களிடம் கடவுளை கண்டு வழிபடவேண்டும். தாங்கள் மூலம் சேவை செய்து பகவானை வழிபடுவதற்கு நமக்கு சந்தர்ப்பம் அளிப்பதற்காக ஏழைகளுக்கு நன்றி செலுத்த வேண்டும். இந்த ரூபங்களில் கடவுளுக்கு சேவை செய்வதற்கு இந்த வாழ்க்கையில் எமக்குச் சந்தர்ப்பம் கிடைத்தால் அது எல்லாவற்றிலும் உயர்ந்த உரிமையாகும். மற்றவர்கள்மேல் அதிகாரம் செய்யும் எண்ணத்தை விட்டு விடுங்கள். ஒரு செடிக்குச் செய்யக்கூடிய அளவு தான் நீங்கள் ஒருவருக்கு உபகாரம் செய்யலாம். அந்த உதவியை அவர்கள் பயன்படுத்தி அவர்கள் மேன்மை அடையட்டும். மனிதன் பூரணத்துவத்தையும் மோட்சத்தையும் அடைவதற்கு இதுதான் சிறந்தவழியாகும். ஆதரவற்றவர்களுக்கு சேவை செய்வதன் மூலம் கடவுளின் அருளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | 5 | 8 | | | | 1 | |
| | 4 | | 1 | | 2 | 8 | | |
| 9 | | 1 | 5 | 6 | | | 7 | 2 |
| | 3 | | | | 8 | 7 | | 1 |
| | | | | | | | | |
| 6 | | 2 | 3 | | | | 9 | |
| 7 | 1 | | | 8 | 9 | 2 | | 6 |
| | | 4 | 7 | | 6 | | 8 | |
| | 9 | | | | 5 | 3 | 4 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 4 | 5 | 6 | 8 | 1 | 2 | 7 | 9 |
| 1 | 7 | 9 | 4 | 2 | 3 | 5 | 8 | 6 |
| 8 | 2 | 6 | 7 | 5 | 9 | 3 | 4 | 1 |
| 5 | 6 | 2 | 3 | 7 | 8 | 9 | 1 | 4 |
| 7 | 9 | 8 | 1 | 4 | 2 | 6 | 3 | 5 |
| 4 | 3 | 1 | 9 | 6 | 5 | 7 | 2 | 8 |
| 9 | 5 | 7 | 8 | 3 | 4 | 1 | 6 | 2 |
| 6 | 1 | 4 | 2 | 9 | 7 | 8 | 5 | 3 |
| 2 | 8 | 3 | 5 | 1 | 6 | 4 | 9 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# சனி பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

## 02.11.2014 - 2017

27 நட்சத்திரங்கள், 12 ராசிகளுக்குமான பலன்களும் பரிகாரங்களும்



### கன்னி



***கன்னிராசி நேயர்களே!***

நடுத்தரமான உயரமும், இயற்கையான அழகும் பெற்றிருப்பார்கள். இவர்களுக்கு கோபம் வருவது அரிது. வந்தாலும் ஓரிரு பேச்சோடு நிறுத்திக் கொள்வார்கள். அழகான இடையும், அடிமேல் அடி வைத்து நடக்கும் இயல்பும் இவர்களுக்கே உரியது. எவ்வளவு அவசரம் இருந்தாலும் இவர்களிடத்தில் நிதானமும் இருக்கும். இவர்களுக்கு நீண்ட ஆயுள் உண்டு என்பது மட்டும் உறுதி.

கன்னி ராசிக்காரர்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பதையே விரும்புவார்கள். உலக விடயங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்வதில் அதிக ஆர்வம் இருக்கும். பேச்சிலும் செயலிலும் முடிந்த வரை பிறர் மனதை புண்படுத்த மாட்டார்கள். குறிப்பிட்ட வேலையை, குறிப்பிட்ட நேரத்தில் செய்து முடித்து விட வேண்டும் என நினைப்பார்கள். சூழ்நிலைக்கு தங்களை மாற்றி யமைத்துக் கொள்ளும் குணம் கொண்டவராதலால் இவர்கள்ளை யாரும் எளிதில் ஏமாற்றிவிட முடியாது. எவ்வளவு அவசரமான காரியமாக இருந்தாலும் மற்றவர்களின் அசௌகரியங்களை ஆராய்ந்தே செயற்படுவார்கள். நல்ல நடத்தையும், வசீகரத் தோற்றமும் படைத்த இவர்கள் அனைவரிடத்திலும் சகஜமாகப் பழகுவார்கள். எவ்வளவுதான் கற்றிருந்தாலும் அகம்பாவமின்றி தாம் கற்றதை பிறருக்கும் போதிப்பார்கள். உறவினர்களால் சில தொல்லைகளை எதிர்கொள்வார்களே தவிர, இவர்களுக்கு எதிரிகள் இருக்கமாட்டார்கள். மிருதுவான வார்த்தைகளால் நயமாகப் பேசி பிறரை வசியப்படுத்தும் பேச்சாற்றலும் அறிவாற்றலும் கொண்டவர்கள். தவறு செய்பவர்களைக் கூட தன் அன்பான பேச்சாற்றலால் திருத்திவிடும் இயல்புடையவர்களாக இருப்பார்கள். தன்னை தாழ்த்தி பிறரை உயர்த்தும் நற்குணமும் இருக்கும்.

கடந்த இரண்டரை வருட காலமாக சனி உமது ராசிக்கு 2இல் சஞ்சாரம் ஏழரைச் சனியில் கடைசி இரண்டரை வருடமும் நடந்தது. 02.11.2014 சனி பகவான் 3இல் வருவதால் ஏழரைச் சனி முற்றிலும் விலகி விட்டது. 3ஆம் வீட்டில் சனி சஞ்சரிக்கும் காலம் உங்களுக்குப் பொற்காலமாகும். 6க்குரிய சனி 3இல் வருவது சிறப்பாகும். எதிரிகள் விலகுவர். கடன் தீரும். வழக்கில் வெற்றி கிட்டும், உமது மகன் (அல்லது) மகள் திருமணம் நடக்கும். பிரிந்து வாழும் தம்பதியர் இணைந்து வாழ இடமுண்டு. 3இல் உள்ள சனிக்கு குரு பார்வையும் உள்ளது. பொது வாழ்வில் புகழ் சேரும்.

சனிபகவான் தனது 3,7, 10 பார்வையினால் உமது ராசிக்கு 5,9,12 ஆகிய வீடுகளைப் பார்வை செய்வார்.

சனி பகவானின் பார்வை உமது ராசிக்கு 5இல் பதிவதால் பூர்வீக சொத்தில் வில்லங்கம் தீரும். புத்திர பாக்கியம் கிட்டும். நில புலன் சேர்க்கை உண்டாகும். உமது கணவர் வெளிநாடு செல்ல இடமுண்டு. கறுத்த மனிதரால் சகாயம் கிட்டும். விலகிய சொந்த பந்தங்கள் கூடி வந்து குலாவுவ ர். சிலருக்கு பெண் குழந்தை (கிரக நிலை காரணமாக) பிறக்க இடமுண்டு.

சனி பகவான் பார்வை உமது ராசிக்கு 9ஆம் வீட்டில் பதிவதால் தந்தையின் மூலம் அனுகூலம் கிட்டும். ஏற்றுமதி, இறக்குமதி, மேன்பவர் தோட்டக் கலை, பண்ணைத் தொழில் போன்ற தொழில் பிரிவினர் மிக்க அனுகூலம் அடைவர். அறக்கட்டளைகள் அமைக்க ஆலய திருப்பணிகள் செய்ய இடமுண்டு. புதிய முதலீட்டுக்குத் தேவையான நிதி வசதி கிடைக்கும்.

சனி பகவானின் பார்வை உமது ராசிக்கு 12 ஆவது வீட்டில் பதிவதால் கடன் கணிசமாகத் தீரும். விரோதிகள் விலகுவர். இது அயன, சயன போக ஸ்தானம். 7ஆம் வீடான களத்திர ஸ்தானத்துக்கு 6ஆம் வீடாகும். எனவே கணவன் மனைவி உறவில் மட்டற்ற மகிழ்ச்சி கிட்டும். பிரிந்து வாழும் தம்பதியர் இணைந்து வாழ்வர். உமது படுக்கை அறையில் நவீன வசதிகள் பெருகும்.

13.07.2015 வரை குரு பகவான் உமது ராசிக்கு 11இல் இருப்பதால் 3இல் உள்ள சனியைப் பார்ப்பதால் செய் தொழிலில் லாபம் பெருகும். சிலர் காதல் மணம் புரிவர். 14.07.2015 இல் குரு பகவான் உமது ராசிக்கு 12இல் வருகிறார். புதிய வண்டி, வாகன வசதி பெருகும். செல்வந்தர்களின் நட்பு கிட்டும்.

சர்ப்ப கிரகங்களான ராகு ஜென்மராசியில் இருப்பதால் உடல் ஆரோக்கியத்தில் சிற்சில பிரச்சினைகளையும் உற்றார், உறவினர் வகையில் வீண் மனக் கசப்பையும் உண்டாக்கும். கேது தற்போது 7ஆம் இடத்தில் இருப்பதால் மன நிம்மதி குறைவுகள் உண்டாகும்.

**உடல்நிலை:** உடல் ஆரோக்கியம் அற்புதமாக அமையும். சுறுசுறுப்புடனும், புத்துணர்வுடனும் அன்றாட செயல்களில் ஈடுபட முடியும். கடந்தகால மருத்துவ செலவுகள் படிப்படியாக மறையும். குடும்பத்தில் உள்ளவர்களும் சுபிட்சமாக இருப்பார்கள். சுபசெய்திகள் கிடைக்கப்பெற்று மன மகிழ்ச்சி உண்டாகும்.

**உத்தியோகத்தர்கள்:** இது நாள் வரை தடைப்பட்டு வந்த ஊதிய உயர்வும் பதவி உயர்வும் கிடைக்கப் பெற்று மகிழ்ச்சி உண்டாகும். உடன் பணி புரிபவர்களின் பரிபூரண ஒத்துழைப்பு கிடைக்கும். வெளியூர், வெளிநாடு சென்று பணிபுரிய விரும்புபவரின் இலட்சியம் நிறைவேறும். புதிய வேலை தேடுபவர்களும் சிறப்பான வேலை வாய்ப்பை பெறுவார்கள்.

**மாணவர்கள்:** மாணவச் செல்வங்கள் கல்வியிலும், விளையாட்டுக்களிலும் பிரமாதமாக ஈடுபட்டு வெற்றிகளை தனதாக்கிக் கொள்வார்கள். நல்ல நண்பர்களின் சேர்க்கைகள் அனுகூலமான பலனை உண்டாக்கும். மேற்கல்விக்காக எடுக்கும் முயற்சிகளில் பிரபலங்களின் உதவிகள் கிடைக்கும்.

**அதிஷ்டக் குறிப்புகள்–** எண்– 27, 29, 32, 62, 71, 101, கிழமை – திங்கள், வெள்ளி, நிறம் – வெண்மை. திசை – வடகிழக்கு, கல் – முத்து, தெய்வம் – வெங்கடாசலபதி.




# புத்திசாலி

## பெண்களா நீங்கள்?

இந்த உலகில் ஒவ்வொருவருக்குமே தனக்கு துணையாக வருபவர் இப்படி இருக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்பு இருக்கும்.

அதில் பெண்களுக்குத் தான் எதிர்பார்ப்புக்கள் அதிகம் இருக்கும் என்று பலர் நினைக்கின்றனர். ஆனால் ஆண்களுக்கும் தனக்கு துணையாக வரும் பெண் இத்தகைய குணத்துடன் இருக்க வேண்டுமென்று ஆசைப்படுவார்கள். எதிர்பார்ப்புக்கள் இல்லாவிட்டால், வாழ்க்கையில் எந்த ஒரு சுவாரஸ்யமும் இருக்காது. மேலும் தன் துணையின் எதிர்பார்ப்பு புரிந்தும், அந்த எதிர்பார்ப்புக்கு ஏற்றவாறு நடக்காமல் இருந்தால், உண்மையில் அந்த உறவில் எந்த ஒரு சந்தோஷமும் சுவாரஸ்யமும் இருக்காது. சில பெண்கள் தங்களது துணையின் நண்பர்களுடன் சகஜமாக பேச மாட்டார்கள். ஆனால் அப்படி இருப்பது ஆண்களுக்குப் பிடிக்காது. நன்கு சந்தோஷமாக, அவர்களது நண்பர்களுடன் பேசி, துணைக்கு ஒரு நல்ல தோழியாக இருக்கும் பெண்களைத் தான் ஆண்களுக்குப் பிடிக்கும். தற்போதைய ஆண்கள் தனக்கு துணையாக வரும் பெண் எப்பொழுதும் தன்னைச் சார்ந்து இல்லாமல் இருக்க வேண்டும் என்று நினைப்பர். இப்படி இருப்பதால், பெண்கள் மிகவும் தைரியமானவர்களாகவும், எந்த கஷ்டத்தையும் தாங்கி எதிர்த்து வாழ்பவர்களாகவும் இருப்பார்கள் என்பதால்தான். ஆண்கள் தைரியமான மற்றும் தன்னம்பிக்கையுடன் செயற்படும் பெண்களை அதிகம் விரும்புவார்கள். எப்போதும் நச்சரித்துக் கொண்டே இருக்கும் பெண்களைக் கண்டால், ஆண்கள் ஓடிவிடுவார்கள். ஆகவே எந்த ஒரு விடயத்துக்கும் அவர்களை நச்சரிக்காமல் இருக்கும் பெண்களைத்தான் ஆண்கள் விரும்புவார்கள். சில ஆண்கள் தான் சொல்வது தான் சரி என்று இருப்பார்கள். அத்தகைய ஆண்களை புத்திசாலித்தன மான பெண்கள் எளிதில் மாற்றுவார்கள்.



# ஆண்களுக்கு

## மட்டுமா என்ன?


அச்சமில்லை அச்சமில்லை என்று பாரதி பாடிய பாடல் ஆண்களுக்கு மட்டுமா என்ன? பெண்களுக்கும்தான். ஒரு பெண்ணை ஆணானவன் தப்பான எண்ணத்துடன் பின்தொடரும் பொழுது அவனைக் கண்டு அஞ்சாமல் தைரியமாக அந்தச் சூழ்நிலையைச் சமாளிக்க பெண் தனது மனதைத் தயார்ப்படுத்த வேண்டும். பெண்களுக்கு மிகவும் சவாலான, ஆபத்தான சூழ்நிலைகள் ஏற்படும் பொழுது அதைச் சமாளிக்கும் தைரியத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். நம்முடைய சோர்வையோ, பயத்தையோ வெளிப்படுத் தாமல் இருப்பதே நமக்கு பெரிய பலமாகும். நம்முடைய சிறந்த ஆயுதம் நம்முள்ளே இருக்கும் ஆறாவது அறிவாகும். மிருகங்கள்கூட பிறக்கும் பொழுதே வாழ்வதற்குத் தேவையானவற்றை எதிர்த்துப் போராடிவெல்லும் ஆற்றலைப் பெற்றிருக்கின்றன. மனிதர்களாகிய நாம் ஒருவர்மேல் நம்பிக்கை வைப்பதற்கு முன் அவர்களைச் சரியாக மதிப்பிட்டோமா என்று பலமுறை யோசித்து நம் உள்ளுணர்வைப் பின்பற்றி நடப்பது நல்லது. தொலைபேசியில் பொது இடங்களில் பேசும்பொழுது சுற்றுப்புறத்தில் என்ன நடக்கிறது என்பதில் கவனமுடன் இருப்பது அவசியம்.

உதயன்

கலாநிதி.அருட்கவி

**சீ.விநாசித்தம்பிப்புலவர் (MA,PHD) அவர்களது**

# ஒன்பதாவது குருபூசைத்தினம்



கார்த்திகை ரேவதி ஏகாதசி

(02.12.2014 செவ்வாய்க்கிழமை)

**எண்ணங்கள் எல்லாம் இறைவன் திருவடி**
**வண்ணங்களாக்கி வழிபட வேண்டும்**
**ஏகாந்தத்தை இனிதெனக் கொண்டவர்**
**தேகாந்தத்தில் சிவநிலை காண்பர்.**

-அருட்கவி.சீ.விநாசித்தம்பிப்புலவர் (MA,PHD)

அளவெட்டி நாகவரத நாராயண தேவஸ்தான ஆலயத்தில் உள்ள அன்னாரது சமாதியில் இன்று (02.12.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இடம்பெறும் குருபூசையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன விருந்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்பர்களை அழைக்கின்றோம்.

(54501) (4.3)

**குடும்பத்தினர்.**

---

# நெஞ்சம் நெகிழ்ந்த நினைவஞ்சலிகள்

**பதினோராம் ஆண்டு** | **ஐந்தாம் ஆண்டு**



அமரர் தம்பிராஜா
சுதர்சன் (சுதா)
(ஆசிரியர் யா/புங்குடுதீவு மகாவித்தியாலயம்)
திதி: ஏகாதசி (02.12.2014)

ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
அவனியல் நாம் இருக்கும் வரை
ஆறாது உங்கள் துயரம்
அன்புத் தெய்வங்களின்
ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!



அமரர் தம்பிராஜா
சயந்தன்
(வீதி அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்)
திதி: ஏகாதசி (19.10.2014)

| | | |
|---|---|---|
| 09.10.1971 | தாயின் மடியில் | 15.02.1975 |
| 04.12.2003 | தரனின் தாளில் | 12.11.2009 |

முதலாம் வட்டாரம், நெடுந்தீவு. (54526)(12.3)

உங்கள் பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| | |
|---|---|
| மனம் மகிழ | மனம் நெகிழ |
| 06.09.1960 | 12.12.2013 |

திதி: ஏகாதசி 02.12.2014 (செவ்வாய்க்கிழமை)

**அமரர் நவரத்தினம் ஜெயராணி (ராணி)**



அன்பு அம்மாவே!
அன்பு மொழி பேசி எம்மை வளர்த்த
அன்புத் தெய்வமே!
நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்து
ஆண்டு ஒன்றாகிவிட்டது
ஆனாலும் உங்கள் நினைவுகள்
எம்முடனே இருக்கின்றன
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அம்மா என்று அழைக்க
நீங்கள் இப்பூவுலகில் இல்லை
உங்கள் ஆத்மா சாந்திபடைய
எல்லாம் வல்ல எம்பெருமானைப்
பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(கி/18026) (4.3.6) **கணவர், பிள்ளைகள்.**
**கச்சாய் வீதி, சாவகச்சேரி.**

---

# தொழில்நுட்பம்

## கணினியில் வாட்ஸ்-அப்




ஸ்மார்ட் போன் வைத்து இருப்பவர்கள் பெரும்பாலும் வாட்ஸ்– அப் இல்லாமல் இருக்க மாட்டார்கள். அதேசமயம் அவர்கள் கணினி பயன்பாட்டிலும் கூடவாட்ஸ்– அப்பை எதிர் பார்க்கலாம். கணினியில் வாட்ஸ்– அப் எப்படி பதிவிறக்கம் செய்யலாம் என்பதைப் பற்றி பார்க்கலாம்.

கணினியில் வாட்ஸ்– அப் பயன்படுத்த முதலில் (bluestacks) ப்ளூஸ் டாக்ஸ் வேண்டும். அதனால் இந்த ஆண்டிராய்ட் எமுலேட்டரை முதலில் பதிவிறக்கம்செய்துவைத்து கொள்ள வேண்டும்.

பதிவிறக்கம்செய்தப்ளூஸ் டாக்ஸைகணினியில் இன்ஸ்டால் செய்ய வேண்டும். ப்ளூஸ்டாக்ஸ் இன்ஸ்ரலேஷன் முடிந்தவுடன்ஸ்டார்ட்மெனுசென்று ஸ்டார்ட் ப்ளூஸ்டாக்ஸ் என்று டைப் செய்து கிளிக் செய்ய வேண்டும்.

புரோகிராம் லோட் ஆனதும் சர்ச் பாக்ஸ் சென்று வாட்ஸ்–அப் மெசஞ்சர் என்று டைப் செய்து கிளிக் செய்ய வேண்டும்.

வாட்ஸ்அப் அப்ளிகேஷன் பதிவிறக்கம்ஆனதும்அதை ரன் செய்யுங்கள்.

உங்களுடைய மொபைல் நம்பர் மற்றும் லொகேஷனை வாட்ஸ்– அப்பில் என்டர் செய்யுங்கள். உங்களது மொபைல் நம்பர் வெரிஃபை ஆனதும் உங்களது கணினியில் வாட்ஸ்– பயன்படுத்த ரெடியாகிவிடும்.

---

## கணினியை பயமுறுத்தும் எபோலா



உலக நாடுகளை அச்சுறுத்தி கொண்டிருக்கும் எபோலா வைரஸ், தற்போது கணினியையும் தாக்கி வருகின்றது.

அதாவது, எபோலா வைரஸ் பற்றிய போலியான தகவல்கள், ஈமெயில்கள் மூலம் உலகெங்கும் வலம் வருகின்றன.

அந்த தகவலில், எபோலா பற்றி உலக சுகாதார நிறுவனம் ஓர் அறிக்கையைத் தந்துள்ளது. இதை அவசியம் படியுங்கள், மற்றவர்களுக்கும் பரப்புங்கள் என்ற எச்சரிக்கைச் செய்தி தரப்பட்டுள்ளது. மேலும் அது குறித்த படிக்க 'லிங்க்' ஒன்றும் தரப்படுகிறது, இதனை கிளிக் செய்தால் உடனே மால்வேர் ஒன்று உங்கள் கணினியைப் பதித்து அஞ்சல் வழியாக இன்னொருவருக்கு அனுப்புகிறது.

அதில் உங்கள் கணினியின் பாஸ்வேர்ட், வங்கிக் கணக்கு எண், அதற்கான பாஸ்வேர்ட் எண், கிரெடிட் கார்ட் எண் என அனைத்துத் தனிநபர் தகவல்களும் செல்கின்றன.

எனவே இதுபோன்ற தகவல்கள் வந்தால் எச்சரிக்கையுடன் செயற்படுவது அவசியம்.

---




## புத்தம் புதிய வசதி

பிளிங்க் பொக்ஸ் (Blinkbox) எனும் ஒன்லைன் வீடியோ (Streaming) சேவையை வழங்கிவரும் Tesco நிறுவனம் தற்போது புதிய வசதி ஒன்றைப் பயனர்களுக்கு வழங்க முன்வந்துள்ளது. இதன்படி இணைய இணைப்பு இல்லாத நிலையிலும் (Offline) தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், திரைப்படங்களை பார்வையிடல், தரவிறக்கம் செய்தல் போன்ற வசதியைச் செய்து தரவுள்ளது.

இந்த வசதியை iOS மற்றும் Android சாதனங்களில் பயன்படுத்த முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கோத்தாவை மட்டுமே கொண்டுவந்தேன் நான்

## குடும்ப அரசியல் என்பதெல்லாம் பொய் ஜனாதிபதி மஹிந்த இப்படிக் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், டிசெ.2

பாதுகாப்பு அமைச்சின் செயலா ளர் கோத்தபாய ராஜபக்ஷவை மாத்திரமே நான் அரசியலுக்கு அறிமுகப்படுத்தினேன். பஸில் ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ ஆகியோர் பண்டார நாயக்கா குடும்பத் தினராலேயே அரசியலுக்கு அறிமுகம் செய்யப் பட்டவர்கள் – இவ்வாறு கூறியுள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

கொழும்பில் நிதி அதிகாரிகள் சங்கத்தின ருடன் நேற்றுமுன்தினம் நடத்திய சந்திப் பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"குடும்ப அரசியலை அறிமுகப்படுத்திய தாக பலரும் குற்றம் சுமத்துகின்றனர்.நான் பாதுகாப்பு அமைச்சின்செயலாளர் கோத்த பாய ராஜபக்ஷவை மாத்திரமே அரசி யலுக்கு அறிமுகப்படுத்தினேன். அமைச் சர் பஸில் ராஜபக்ஷ, 1977 ஆம் ஆண்டு அரசியலுக்குள் பிரவேசித்தார். அவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் சிறி மாவோ பண்டாரநாயக்கா மற்றும் சந்தி ரிகா பண்டார நாயக்கா ஆகியோருடன் இணைந்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். அவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழு விலும் இருந்துள் ளார்.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, சிறிமாவோ பண்டாராநாயக்கா அரசியலில் இருந்த காலத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிட்டிருந்தார். நான் அவர்களை அரசியலுக்கு கொண்டு வரவில்லை.அவர்களை பண்டார நாயக்கா குடும்பத்தினரே அரசியலுக்குக் கொண்டு வந்தனர். பாதுகாப்பு அமைச்சின் செயலா ளர் கோத்தபாய ராஜபக்ஷவை மாத்தி ரமே நான் கொண்டுவந்தேன்.இங்குபோரை முடிவுக்குகொண்டுவரு வதற்காகவே அவரைக் கொண்டு வந்தேன். அவருக்கு கொடுக்கப்பட்ட கடமையை அவர் சரியாகச் செய்து முடித்துள்ளார்" – என்று அவர் தெரிவித் துள்ளார். (ந–5)

## பாடசாலையின் வீதிக்கு வேகத்தடை அமைக்குக

பெற்றோர் கோரிக்கை



முல்லைத்தீவு,டிசெ.2

கற்சிலைமடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் முன்பாக உள்ள ஒட்டு சுட்டான் புதுக் குடியிருப்பு வீதியில் பாட சாலைக்கு முன்பாக இரு மருங் கிலும் வாகனங்கள் மெதுவாகப் பயணிப் பதற் கான வேகத் தடை போன்றவற்றை அமைக்க வேண்டும் என்று பெற்றோர் வலியுறுத்தியுள்ளனர்.

இதுதொடர்பில் அவர்கள் மேலும் தெரி வித்திருப்பதாவது:–

பாடசாலையின் உள்ள வீதிக்கு அருகா மையில் வர்த்தக நிலையம் ஒன்று உள்ளமையாலும், பாடசாலைக்கு உட் சென்று வெளிவரும் மாணவர்கள் வீதி யைக் கடக்கும்போது வேகமாக வரும் வாகனங்களால் விபத்துக்கள் ஏற்படும் நிலை காணப்படுகின்றது.

எனவே வேகத்தடைகளை ஏற்படுத்தி வீதிச் சமிக்ஞைகளையும் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண் டும் எனத் தெரிவித்துள்ளனர். (வ)

### கண்ணீர் அஞ்சலி



கரித்தாஸ் யாழ்ப்பாணம் கியூடெக் நிறுவனத்தின் ஊழியரான B.A. சார்ள்ஸ் அவர்களின் அன்புத் தாய்

திருமதி
**மேரி திரேசா பெஞ்சமின்**

அவர்களின் ஆன்மா சாந்தியடைய இதயம் நெகிழ்ந்து அஞ்சலிக்கின்றோம்.

(C/17961) (10.6)

**இயக்குநரும் பணியாளர்களும்,**
**கரித்தாஸ் யாழ்ப்பாணம்- கியூடெக் யாழ்ப்பாணம்.**

### கண்ணீர் அஞ்சலி



எமது ஆசிரிய நண்பன் தே. செந்தூரன் அவர்களின் அன்புத் தந்தை

**வைரமுத்து தேவராசா**

அவர்கள் 27.11.2014 இலண்டனில் இறைபத மடைந்ததையிட்டு அவரது குடும்பத்தின ருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரி விப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தி யடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரிய நண்பர்கள்-யாழ்ப்பாணம்.** (54555) (10.6)

### கண்ணீர் அஞ்சலி



எமது அழகப்பா யாழ். கிளையில் கல்வி முதுமாணி கற்கைநெறி இறுதி வருட மாணவன் ஆசிரியர் தே.செந்தூரன் அவர்களின் அருமைத் தந்தை

**வைரமுத்து தேவராசா**

அவர்கள் 27.11.2014 இறைபதமடைந்ததை யிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதா பங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தி யடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(54559) (10.6)

**நிர்வாகம், சக மாணவர்கள்**
**அழகப்பா பல்கலைக்கழகம்-யாழ். கிளை (JAAHED)**

### 31ஆம் நாள் நீங்கா நினைவலைகள்




**அமரர் நடராசா விமலாதேவி**

அன்னாரின் 31ஆம் நாள் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (02.12.2014) செவ்வாய்க்கிழமை காலை 8 மணி யளவில் கீரிமலை தீர்த்தக்கரையிலும், 04.12.2014 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் கிரியை களிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத் திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

**தனுசியன் வெதுப்பகம்,**
**கண்டிக்குளம் வீதி, தர்மபுரம்.**

**குடும்பத்தினர்.** (47948)(10.6)

### கண்ணீர் அஞ்சலி



எமது காரைநகர் பிரதேசசபையில் சாரதியாகக் கடமையாற்றும் அ.குணசீலன் அவர்களின் அன்புத் தந்தை

**முருகேசு அருளானந்தம்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தவிசாளர், உறுப்பினர்கள், செயலாளர், உத்தியோகத்தர், ஊழியர்கள்,
**பிரதேசசபை காரைநகர்.** (சி18052) (12.3.6)

### 21ஆம் ஆண்டின் நினைவலைகள்



**அமரர் சின்னத்தம்பி சந்திரசேகரம்**

(ஓய்வுபெற்ற P.W.D ஓவசியர் R.M.C, R.D.A)

தோற்றம் 24 . 07 . 1929

ஒடுக்கம் 25 . 11 . 1993

**இருபத்தோர் ஆண்டுகள் உமை இழந்து**
**இழந்ததோ பல வரங்கள் நாம் நொந்து**
**நொந்திடிலும் எழுந்திடுவோம் உமை நினைந்து**
**நினைந்து நாம் வாழ்ந்திடுவோம் பலர் வாழ.**

"அன்பகம்,"
இணுவில் மேற்கு, இணுவில்.

**குடும்பத்தினர்.**

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

**மயில்வாகனம் சிவப்பிரகாசம்**



கடந்த (02.11.2014) ஞாயிற்றுக்கிழமை அமரத்துவமடைந்த எமது குடும்பத்தலைவர் மயில்வாகனம் சிவப்பிரகாசம் அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (02.12.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மண்கும்பான் மேற்கு,
மண்கும்பான். (41577)(12.3)

**குடும்பத்தினர்.**

### ஒன்பதாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**சுப்பையா செல்லத்துரை**

திதி: கார்த்திகை பூர்வபக்க ஏகாதசி

மண்ணில் 10.07.1924

விண்ணில் 11.12.2005


உறவுகளுக்கும் உணர்வுகளுக்கும்
உரிமை கொடுத்து - வாழ்ந்தவரே!
உழவுத்தொழிலை உயிராய் மதித்து
உன்னத நிலைக்கு உயர்ந்தவரே!
உங்களின் பெயரையும் புகழையும்
எங்களுக்கோர் அணிகலனாய் அமைத்தவரே!
உத்தமராய் வாழ்ந்து எமைப்பிரிந்து ஒன்பது ஆண்டுகள் ஆயிடினும்
உங்கள் நினைவுகள் என்றும் எம் நெஞ்சங்களில்.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய். (54544)(12.3.6)

நீங்காத நினைவுகளுடன்:
**குடும்பத்தினர்.**

## செய்திகள்

# மட்டக்களப்பில் நேற்றுக் காலை எயிட்ஸ் விழிப்புணர்வுப் பேரணி



மட்டக்களப்பு, டிசெ.2
மட்டக்களப்பு சிறைச்சாலையின் நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில், எயிட்ஸ் தொடர்பான விழிப்புணர்வுப் பேரணியும் கருத்தரங்கும் மட்டக்களப்பு சிறைச்சாலையில் நேற்று திங்கட்கிழமை காலை நடைபெற்றது. இந்த நிகழ்வில் மட்டக்களப்பு சிறைச்சாலையின் அத்தியட்சகர் எச்.வி.எச். பிரியங்கர, சிறைச்சாலையின் பிரதான அதிகாரி ஆர்.மோகன்ராஜா, நலன்புரி உத்தியோகத்தர்களான வி.சுசிகரன், எம்.ஐ.சபீனா, எல்.ஜே.சுதாகரன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஜே.ஜெயப்பிரியா, பிரதிபா கோன்ஸ் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது சிறைச்சாலையில் இருந்து மட்டக்களப்பு போதனா மருத்துவமனை வரையில் எயிட்ஸ் தொடர்பான விழிப்புணர்வுச் சுலோகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கைதிகள் பேரணியாகச் சென்று மீண்டும் சிறைச்சாலையை சென்றடைந்தனர்.

அதனைத்தொடர்ந்து மட்டக்களப்பு போதனா மருத்துவமனையின் பாலுறவு நோய்த் தடுப்பு பிரிவு மருத்துவர்களால் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்தப்பட்டது. (வ)

## மரண அறிவித்தல்கள்

### முருகேசு அருளானந்தம்



காரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகவும் அறுகம்புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு அருளானந்தம் 30.11.2014 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பகவற்சிங் மற்றும் குணமணி தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மாவதியின் அன்புக் கணவரும், தர்சினி, மயூரன் (ஆஸ்திரேலியா), குணசீலன் (பிரதேசசபை ஊழியர்), யசோதா (மருதனார்மடம் பல்கலைக் கழகம்), கம்சிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், றமேஸின் மாமனாரும், நிதுஷன், கிரிஷ்னிகா ஆகியோரின் பாசமிகு பேரனும், சரஸ்வதி, தனபாக்கியம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2014) செவ்வாய்க் கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அறுகம்புலம்,
காரைநகர். (54538) (12.3)

தகவல்: குடும்பத்தினர்.
TP: 077 512 2978

### சிவஸ்ரீ குமாரசாமி குருக்கள் சௌபாக்கியகுமாரக் குருக்கள்



(நல்லூர் சட்டநாதர் கோயிலடி, ஸ்ரீ பாலகதிர்காமம் தேவஸ்தான ஆதீன கர்த்தரும், நல்லூர் பண்டாரக்குளம் பிள்ளையார் கோயில், இருபாலை வயல்வெளி ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி கோயிலின் பிரதம குருவும்)

இணுவிலைப் பிறப்பிடமாகவும், சட்டநாதர் கோயில் வீதி, யாழ்ப்பணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ குமாரசாமி குருக்கள் சௌபாக்கிய குமாரக் குருக்கள் 30.11.2014 ஞாயிற்றுக் கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் சசிதேவியின் அன்புக்கணவரும், சசிகுமாரக் குருக்கள் (லண்டன் கொவென்ரி சித்திவிநாயகர் ஆலய பிரதமகுரு), மதனகுமாரசர்மா ஆகியோரின் அன்புத்தந்தையும், ஸ்ரீ கமலேஸ்வரி, சண்முகபிரியா ஆகியோரின் அன்பு மாமனும், சௌஜன்னிய சர்மா, வைசுருதிக் ஆகியோரின் அன்புப் பேரனும், திருமதி மகேந்திரபூசணி அம்மா, சிவஸ்ரீசபாரத்தினகுமாரக் குருக்கள், இலட்சுமணசர்மா, திருமதி சொர்ணலட்சுமி அம்மா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.12.2014) புதன்கிழமை இல.110/13, சட்டநாதர் கோயிலடி, நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி குமாரக்குருக்கள் குடும்பத்தினர்.

யாழ்ப்பாணம். (54542) (12.3)

## நல்லொழுக்க தின நிகழ்வும் பரிசளிப்பும்

கரணவாய், டிசெ. 2
வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் சர்வதேச நல்லொழுக்க தின நிகழ்வும் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு வேலாயுதம் மகாவித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

நிறுவனத்தின் தலைவர் பா.இரகுநாதன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமாரும், சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ, பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன், ரகம நிறுவன திட்டப் பணிப்பாளர் ஜனாப் எம்.எப்.மரிக்கார் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய மாணவர்கள் வழங்கும் மது பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு நாடகமும், நெல்லியடி மத்திய கல்லூரி, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மாணவர்கள் பங்குபற்றும் மது, புகை, போதைப் பொருள் பாவனையற்ற நல்லொழுக்க சமூகத்தை உருவாக்குவதில் முதன்மை வகிப்பது பாடசாலைச் சூழலா? புறச் சூழலா? என்றதலைப்பில் விவாத அரங்கும் இடம்பெறவுள்ளன. (வ-108)

◆ ◆ ◆

உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறும். நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய கணக்காளர் பா.குகனேஸ்வரி கலந்து கொள்வார். (ரி)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ.2
வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் பணியாளர்களின் சம்பள விடயம் தொடர்பான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கூட்டுறவாளர் மண்டபத்தில் சமாசத் தலைவர் நா.கணேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு சங்கங்கள், கொத்தணிகள், சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் தலைவர், உபதலைவர், செயலாளர், பொதுமுகாமையாளர், கணக்காளர், கல்வி உத்தியோகத்தர் ஆகியோரை தவறாது சமுகமளிக்குமாறு சமாசத் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ரி)

## சுகாதாரக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ. 2
நீர்வேலி அ.த.க. பாடசாலையில் சுகாதாரக் கருத்தரங்கும் காலணி வழங்கும் நிகழ்வும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு பிரதான மண்டபத்தில் அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளன.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக றொட்டேரியன் இ. கிருபாகரனும், சிறப்பு விருந்தினர்களாக சுகாதார பரிசோதகர் ப.சதீஸ்குமாரும், ஓய்வுபெற்ற விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி ந.சிவசீலனும், ஓய்வுபெற்ற உப அதிபர் திருமதி உ.யோகானந்தாவும் கலந்துகொள்வர். (வ)

## கௌரவிப்பு

வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவருக்கான கௌரவிப்பு இன்று செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறும்.

பாடசாலை அதிபர் வை.விஜயகுமாரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி பிரதிப் பணிப்பாளர் என்.சர்வேஸ்வரன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். (வ-122)

◆ ◆ ◆

பிரதீபா பிரபா விருது பெற்ற ஆசிரியர்கள் மற்றும் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ் இன்றைய தினம் வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்குட்பட்ட ஒலிமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

கௌரவிப்பு நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக நெடுங்கேணி கோட்டக்கல்வி பணிப்பாளர் எஸ்.ரங்கநாதன், சிறப்பு விருந்தினராக வவுனியா வலயக் கல்வி திணைக்கள ஆரம்பப் பிரிவு சேவைக் கால ஆசிரிய ஆலோசகர் திருமதி சிவகுமார் சத்தியலோயினி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (வ-122)

## மாற்றுவலுவுடையோர் தின நிகழ்வு நாளை

யாழ்.ஜெய்ப்பூர் வலு விழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் நடத்தும் சர்வதேச மாற்றுவலுவுடையோர் தின நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவன மண்டபத்தில் ஜெய்ப்பூர் நிறுவனத் தலைவர் மருத்துவர் ஜெ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரனும், சிறப்பு விருந்தினராக ஜெய்ப்பூர் நிறுவன பயனாளி செ.சிவப்பிரகாசமும் கலந்து கொள்வர். (வ-ரி)

## ஒளி விழா

அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தின் ஒளிவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வித்தியாலய அரங்கில் எஸ்.நியூட்டன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வுக்கு–பிரதம விருந்தினராக அல்லைப்பிட்டி பங்குத் தந்தை எம்.பத்திநாதரும் சிறப்பு விருந்தினராக அல்லைப்பிட்டி வண. போதகர் மாநவரட்ண ராஜாவும் கலந்து கொள்வர். (வ-ரி)

# 'வைபை' வலையமைப்பை நிறுவுகிறது ரெலிக்கொம்

யாழ்ப்பாணம், டிசெ.2

ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறு வனம் தனது வாடிக்கையாளர் மற்றும் பொது மக்களின் நலன் கருதி யாழ்ப்பாணத்திலுள்ள பொது மக்கள் கூடும் இடங்கள், அலுவலகங்கள் என்பவற்றில் (WIFI HOTSPOT) வைபை ஹொட்ஸ்பொட்டை (வைபை வலையமைப்பு என்பவற்றை) நிறுவ ஆரம்பித்துள்ளது.

மேற்படி (WIFI) வைபை வலை யமைப்பு வீச்சு உள்ள இடங் களில் ரெலிக்கொம்மின் புறோட்பான்ட் வசதியுள்ள எவரும் இணைய வசதியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன் அவ்வாறில்லாதவர்களின் வசதி கருதி முற்கட்டண அட்டைகளைப் பயன் படுத்தி இணைய இணைப்பைப் பெற முடியும். இதற்கென பிரத்தியேகமான முற்கட்டண அட்டைகள் விரைவில் பாவனையாளர்களுக்கு அறிமுகம் செய்யப்படவுள்ளன.

"வைபை வலையமைப்பினூடாக இணையத்தள பாவனை" தொடர்பான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் யாழ்.பொது நூலக கேட் போர் கூடத்தில் யாழ்ப்பாணம் ரெலிக்கொம் நிறுவனத்தால் நடத்தப்படவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் இதில் கலந்து கொண்டு பயனுள்ள தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## மரண அறிவித்தல்

### சின்னையா மகாலிங்கம்

நயினாதீவு, 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா மகாலிங்கம் 30.11.2014 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா- விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வீரகத்திப்பிள்ளை- தங்கம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற கமலாம்பிகையின் அன்புக்கணவரும், நிபரஞ்சனின் (கனடா) அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சிவகங்கை மற்றும் திலகவதி, காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் குற்றாலலிங்கம், இராசரெத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், உமாதேவியின் (கனடா), அன்பு மாமனாரும், திவ்வியன், திவ்வியா ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

இராசரெத்தினம்,
குற்றாலலிங்கம், நயினாதீவு-7 (54549) (4.6)

திருமதி முத்துக்குமாரு திலகவதி
36/20, பிரம்படி லேன், கொக்குவில்.

## மரண அறிவித்தல்



### ஆறுமுகம் திரவியநாயகம் (இராசு)

மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் திரவியநாயகம் நேற்று (01.12.2014) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம்-தங்கமணி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற கார்த்திகேசு-நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், கலியாணி (கனடா), புஸ்பகாந்தன் (சுவிஸ்), திருக்குமார், கரிதாஸ் (அம்மாள் வெல்டிங் வேக்ஸ் வங்களா றோட், மீசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், கேதீஸ்வரன், தீபா தர்சா, வாசுகிதேவி (நடன ஆசிரியை -சந்திரபுர ஸ்கந்தவரோத மகா வித்தியாலயம்-மட்டுவில்) ஆகியோரின் அன்பு மாமனும், விதுசன், சாருந், சந்தோஷ், நூசானி, கிசானி ஆகியோரின் அன்புப் பேரனும், நூபவசன், ஆதீஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2014) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. ஒரு மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

மீசாலை மேற்கு,
மீசாலை. (C/17962) (10.6)

குமார் வெல்டிங் வேக்ஸ் 077 255 5291
அப்பன் கம்மாலை 077 978 7926

## மரண அறிவித்தல்



### கந்தையா துரைராசா

(ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்,
பிரதேச சபை உறுப்பினர் - வலிகிழக்கு)

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா துரைராசா 30.11.2014 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (01.12.2014) திங்கட்கிழமை கைதடி வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் கைதடி தச்சன் பிட்டி இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

கைதடி வடக்கு. (54562) (10.6) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி
### மேரிதிரேசா (கிறேஸ்) பெஞ்சமின்



இல. 96, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரிதிரேசா பெஞ்சமின் 29.11.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஒப்பனைக் கலைஞர் சாமுவேல் பெஞ்சமினின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம்-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சாமுவேல்-ஞானப்பு தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசரெட்ணம், முத்துராசா, பீற்றர் மற்றும் நீற்றம்மா, சிசிலியா, மரியநாயகம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், இம்மானுவேல் (ஒருங்கிணைப்பாளர்-திருமறைக்கலாமன்றம்-பிரான்ஸ் கிளை), அன்ரனி (கொழும்பு), அலோசியஸ் (பிரான்ஸ்), மேரி மக்டலின் (கொலண்ட்), சாள்ஸ் (கரிதாஸ் கியூடெக்-யாழ்ப்பாணம்), டன்ஸ்ரன் (கனடா), சாம்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், மேரி ராணி (இந்தியா), ஸ்ரெலா (கொழும்பு), காந்தரூபி (பிரான்ஸ்), தங்கராஜா (கொலண்ட்), எழில்வானம்பாடி (ஆசிரியை-யா/புனித சாள்ஸ் ம.வி), செல்வராணி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், தீபன்-ஏஞ்சல் (கனடா), தீபா-சுரேன் (லண்டன்), சோபா-ஜெயந்தன் (கனடா), யூட் (லண்டன்), நதியா (ஆசிரியை-சர்வதேச பாடசாலை-கண்டி), கிறேசன் (மலேசியா), அகல்யா (பிரான்ஸ்), அகேந்திரா (பிரான்ஸ்), கொலின் -கிம் (கொலண்ட்), சாரா-சுகந்தன் (கொலண்ட்), ரொயல் (கனடா), நொய்மி (கனடா), ஜஸ்மி (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ரானியா, ஆரோன் (லண்டன்), பேபியன், ஜெட்சோ (கனடா), ஜோர்தான், கொலின் (நெதர்லாந்து), ஜெயசானா (நெதர்லாந்து) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 96, பழைய பூங்கா வீதியிலுள்ள இல்லத்திலிருந்து நாளை (03.12.2014) புதன்கிழமை பி.ப 3.00 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, யாழ் தூய மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும், தொடர்ந்து பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

96, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம். (54556) (10.6)

தகவல்: குடும்பத்தினர்.

செய்திகள்

# அதிகாரிகள் அசமந்தம் அவலமடையும் மக்கள்

## மழை வெள்ளத்தால் இடம்பெயர்ந்தோருக்கு உரிய வசதிகள் இல்லை என்கிறார் வினோ எம்.பி

வவுனியா, டிசெ. 2

கடும் மழை மற்றும் வெள்ளத்தால் பாதிப்படைந்த மக்களுக்கு போதுமான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்காது அதிகாரிகள் அசமந்தம் காட்டிவருவதாக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் இடம்பெயர்ந்துள்ள மக்களை அவர்கள் தங்கியுள்ள புதிய வேலர் சின்னக்குளம், மகிழங்குளம், விளக்குவைத்த குளம் ஆகிய நலன்புரி நிலையங்களில் நேரில் சென்று பார்வையிட்டு அவர்களின் அத்தியாவசிய உணவு கொள்வனவுக்காகச் சிறுதொகை நிதியை கையளித்த பின்னர் அங்குள்ள மக்களின் நிலைமை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கூறிகையில்,

வவுனியாவில் 5 நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் வவுனியா பிரதேச செயலர் பிரிவில் அமைக்கப்பட்டுள்ளதுடன் நலன்புரி நிலையங்களிலுள்ள மக்கள் மிகவும் இன்னல்களை அனுபவிக்கின்றனர்.

இந்த மக்கள் போரால் பாதிப்படைந்து மீள்குடியேறியவர்கள். வீட்டுத் திட்டம் இவர்களுக்குக் கிடைக்கவில்லை. இயற்கையும் இவர்களைத் தாக்குகின்றது. மழை காரணமாக இவர்கள் இடம்பெயர்ந்து பொதுக் கட்டடங்களில் போதிய வசதிகள் இன்றித் தங்கவைக்கப்பட்டுள்ளனர். பிரதேச செயலகத்தின் அதிகாரிகள் இடம்பெயர்ந்த மக்களுக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.



நலன்புரி நிலையங்களில் போதுமான வசதிகள் இன்மையால் இடம்பெயர்ந்த மக்கள் இரவிரவாக நுளம்புக் கடிக்கு மத்தியில் நித்திரையின்றியும் போதிய உணவின்றியும் உள்ளனர். காலையில் காலைக் கடனை முடிப்பதற்காக வீடுகளுக்குச் சென்ற சமயம் நலன்புரி நிலையங்களுக்குச் சென்ற வவுனியா உதவிப் பிரதேச செயலாளர் மக்களை அச்சுறுத்தும் தொனியில் பேசியுள்ளதுடன் மக்கள் உணவுக்காக இடம்பெயர்ந்துள்ளதாக தெரிவித்ததாகவும், அவர்கள் தற்போது நலன்புரி நிலையங்களில் இல்லை எனத் தெரிவித்ததாகவும் மக்கள் என்னிடம் முறையிட்டுள்ளனர்.

இவருடைய அறிக்கையின் காரணமாக தற்போதும் வவுனியாவில் மழை பெய்து வரும் நிலையில் நலன்புரி நிலையங்களை மூடுமாறு பிரதேச செயலர் பணித்துள்ளார். இந்த மக்கள் கடந்த மூன்று நாள்களாக முகாமில் தங்கியுள்ளபோதும் பிரதேச செயலர் அங்கு சென்று பார்க்கவில்லை.

அதிகாரிகள் மக்களின் இன்னல்களுக்கு ஆவன செய்வதை விடுத்து அவர்களை இழிவாக நடத்துவது வேதனையான விடயமாகும்.

இதேபோலவே, இடம்பெயர்ந்த மக்களுக்காகச் சிகிச்சை அளிக்க வந்த மருத்துவரும் அவர்களை அதட்டும் தொனியில் பேசியுள்ளார். அத்துடன் நடமாடும் சேவை இடம்பெற்ற தினத்தில் வருத்தம் ஏற்பட்டவர்கள் மாத்திரம் சிகிச்சை பெற வருமாறும் கூறியுள்ளார். எனவே மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இன்னலுறும் மக்களுக்கு மக்களின் வரிப் பணத்தில் ஊதியம் பெறும் அதிகாரிகள் சேவையாற்ற வேண்டும் என்பதனை மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

இடர் முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்படும் உதவிகளைக் கூட மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க இந்த அதிகாரிகள் பின்நிற்கிறார்கள். மனிதாபிமானத்துடன் இவர்கள் பாதிக்கப்பட்ட மக்களை அணுக வேண்டும் எனவும் வலியுறுத்துகிறேன் – என்றார். (த)

# மாகாண சபை உதவவில்லை

## மழையால் இடம்பெயர்ந்த மக்கள் சிரமம் வடமாகாண சபை உறுப்பினர் குற்றச்சாட்டு

வவுனியா, டிசெ. 2

கடந்த சில நாள்களாக வட பகுதியில் மழையால் பாதிக்கப்பட்டுப் பலர் தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள போதிலும் வடக்கு மாகாண சபை அவர்களுக்கு உதவ முன்வரவில்லை என வடக்கு மாகாண சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் எம். தியாகராசா குற்றம்சாட்டியுள்ளார்.

பல விரிவு 1

இது தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

மழையால் பாதிக்கப்பட்டு வவுனியாவில் தற்காலிக நலன்புரி நிலையங்களில் பலர் தங்கவைக் கப்பட்டுள்ளதாக வடமாகாண முதலமைச்சருக்குத் தொலை பேசியிலும் தொடர்பு கொண்டு தெரிவிக்க முயன்றும் அது பயனளிக்கவில்லை. இதனையடுத்துத் தொலைநகல் மூலம் உடனடியாகக் கடிதம் அனுப்பி யிருந்தேன்.

எனினும் எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. அவைத்தலைவருடன் தொடர்பு கொண்டு முதலமைச்சருடன் கதைக்க வேண்டும் எனக் கோரினேன். இதன் பின்னர் அவைத் தலைவர் முதலமைச்சருடன் தற்போது தொடர்பு கொள்ள முடியும் என தெரிவித்த பின்னர் அவருடன் தொடர்பு கொண்டு வவுனியாவில் மக்களின் நிலை தொடர்பில் விளக்கியிருந்தேன்.

எனினும் இதுவரை வடக்கு மாகாண சபை நிதியில் இருந்தோ முதலமைச்சரின் நிதியில் இருந்தோ பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வித உதவியும் செய்யப்படவில்லை. இவ்வாறு வடக்கு மாகாணசபை செயற்படுவதும் பிரதேச ரீதியாகச் செயற்படுவதும் வருத்தமளிக்கிறது – என்றார். (த-402)

# வடக்கில் நேற்று குறைந்தது மழை

## 9,707 குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 02

வடக்கில் நேற்று ஓரளவு மழை பெய்தது. இதனால் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களது எண்ணிக்கையும் குறைவடைந்தது.

மன்னார் மாவட்டத்திலேயே மழையால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது.

நேற்று மாலை 6 மணிக்கு, இடர் முகாமைத்துவ அமைச்சு வெளியிட்ட அறிக்கையில், வடக்கு மாகாணத்தில் 9 ஆயிரத்து 707 குடும்பங்களைச் சேர்ந்த 37 ஆயிரத்து 525 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

பருவப்பெயர்ச்சி மழை கடந்த ஒரு வார காலத்துக்கும் மேலாக வடக்கில் நீடிக்கின்றது. இதனால் வடக்கில் கிளிநொச்சி மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்கள் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்திலும், மன்னார் மாவட்டத்திலும் நேற்றையதினம் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. அத்துடன் யாழ். மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழை பெய்தாலும் பாதிப்புக்கள் எவையும் புதிதாகப் பதிவு செய்யப்படவில்லை. ஆனால் வவுனியா மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் 7 ஆயிரத்து 535 குடும்பங்களைச் சேர்ந்த 29 ஆயிரத்து 613 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் 174 குடும்பங்களைச் சேர்ந்த 549 பேர் பாதிப்பை எதிர் கொண்டுள்ளனர். மன்னார் மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை நேற்றுக் குறைவடைந்துள்ளது. 933 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 598 பேர் மன்னார் மாவட்டத்தில் பாதிக்கப்பட்டதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் பாதிப்பு அதிகரித்துள்ளது. ஆயிரத்து 65 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 767 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது. (த-5)

## குடிதண்ணீர் போத்தல்களால் சூழலை அழகாக்கும் திட்டம்

*யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்*

யாழ்ப்பாணம், டிசெ 2.

சேதமடையாத வெற்றுக் குடிதண்ணீர் மற்றும் பழரசப் பிளாஸ்ரிக் போத்தல்களை மூடியுடன் சேகரித்து அழகுபடுத்திக் காட்சிப்படுத்தும் விழிப்புணர்வுத் திட்டமொன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சூழல் மாசடைதலைத் தடுத்துச் சூழலை அழகாக்குதல், தேவையற்ற விதத்தில் தேங் கிக்கிடக்கும் வெற்றுப் போத்தல்களை அப்புறப்படுப்படுத்துதல், சமூக அக்கறை தொடர்பாகச் சிறுவர்கள் மற்றும் மாணவர்களுக்கு விசேட விழிப்புணர்வை ஏற்படுத்துதல், அதிகரித்த நுளம்புப் பெருக்கத்தைகட்டுப்படுத்துதல் ஆகியன. இந்தத் திட்டத்தின் பிரதான நோக்கமாகும். (த-ரி)

## மழையால் இடம்பெயர்ந்தோருக்கு நடமாடும் வைத்திய சேவைகள்

வவுனியாவில் தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கு நடமாடும் வைத்திய சேவைகளை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் பெய்து வரும் மழை காரணமாக இடம்பெயாந்து தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள தமக்கு போதுமான மருத்துவ வசதிகள் கிடைக்கவில்லை என மக்கள் அமைச்சரிடம் நேரடியாக முறையிட்டனர்.

வவுனியா புதிய வேலர்குளம், மகிழங்குளம் கிராமங்களில் இடம்பெயர்ந்து தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களை நேரில் சந்தித்து பார்வையிட்டபோது மக்கள் இவ்வாறு தெரிவித்திருந்தனர். (த-421)

# போர்க்குற்ற சாட்சியங்கள் ஐ.நாவிடம்

யாழ்ப்பாணம், டிசெ. 02

போர்க் குற்றங்கள் தொடர்பில் முக்கிய சாட்சியங்கள் அடங்கிய விரிவான அறிக்கை, ஐ.நா. விசாரணைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அரசமைப்பு மற்றும் மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய நிலையமே இதனைக் கையளித்துள்ளது.

"போர்க் குற்றங்களில் இலங்கை அரசுக்கும், இராணுவத்துக்கும் உள்ள பொறுப்புக் குறித்து ஆய்வு அறிக்கையில் விரிவாக சாட்சியங்களுடன் விபரிக்கப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டு போர் இறுதிக்கட்டத்தை எட்டியதிலிருந்து இந்த அமைப்பு போர்க் குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள், தொடர்பான குற்றவியல் ஆய்வுகளை மேற் கொண்டு ஆவணங்களைத் திரட்டி வந்துள்ளது. அத்துடன் தற்போதும் வடக்கு – கிழக்கில் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் பாலியல் ரீதியான வன்முறைகள் குறித்தும் தகவல்கள் திரட்டப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கை ஆயுதப்படைகளைச் சேர்ந்த சந்தேக நபர்களான சில தனிநபர்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆவணமே, ஐ.நா விசாரணைக் குழுவிடம் சாட்சியாகக் கையளிக்கப்பட்டுள்ளது" – என்று அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது. (ற-5)

# போருக்கு பின்னரே வடக்கில் எயிட்ஸ் பாதிப்பு மிக அதிகம்

இலங்கையில் வருடாந்தம் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. தென்பகுதிக்கு அடுத்த நிலையில் வடக்கு மாகாணமே காணப்படுகின்றது என்று யாழ். மருத்துவர்சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை யாழ்.மருத்துவர் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

போருக்குப் பின்னர் எச்.ஐ.வி வைரஸ் மற்றும் அதன் மூலமாக எயிட்ஸ்நோய்க்குஉள்ளாவோரின் எண்ணிக்கை வருடாந்தம் அதிகரித்து வருகின்றது. 2009 ஆம் ஆண்டு 137 பேர் எயிட்ஸ்நோயால் பாதிக்கப்பட்டனர். 2010 ஆம் ஆண்டு 121 ஆகக் குறைந்து 2011 ஆம் ஆண்டு 144 பேரும், 2012 ஆம் ஆண்டு 182 பேரும், 2013 ஆம் ஆண்டு 196 பேரும், 2014 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வரையான காலப் பகுதிவரை 168 பேரும் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வருட நிறைவில் அது மேலும் அதிகரிக்கும் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

பதிவாகிய புள்ளி விபரங்களின் அடிப்படையில் இலங்கையில் 25 வயதுக்கும் 49 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் மூலமாகவே இது பரவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களில் ஆண்கள் 472 பேராகவும், பெண்கள் 254 பேராகவும் காணப்பட்டுள்ளனர். விகிதாசாரத்தின்படி இது 76.7 வீதமாகவுள்ளது. அதற்கு அடுத்த நிலையில் 50 வயதுக்கு மேற்பட்ட நிலையில் 9.7 வீதமாகவும், 20 வயதுக்கும் 24 வயதுக்கும் இடப்பட்ட வயதுடையவர்களில் 6 வீதமானவர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

ஆனால் இந்த நோய் தொற்றியிருப்பினும் சுமார் 10 வருடங்களின்பின்னரே அதன் தாக்கம்அல்லது அறிகுறிகளைக் காட்டத் தொடங்கும். எனவே 22வயதுக்குட்பட்ட வயதிலேயே தொற்று ஏற்படினும் எவருக்குமே அது தெரியப் போவதில்லை என்று மருத்துவர் சங்கம் தெரிவித்துள்ளது. (த-4)

**தென்னங்கன்று விற்பனைக்கு**

எம்மிடம் குறைந்த காலத்தில் பயன்தரக் கூடிய நல்லின தென்னம் நாற்றுக்கள் விற்பனைக்குள்ளன.

(47343)(12.3.6) தொடர்பு: 077 659 2044

**காணி விற்பனைக்கு**

கல்வியங்காட்டுச் சந்தியில் இருந்து 100M தூரத்தில் பருத்தித்துறை வீதியில் அருளம்பலம் ஒழுங்கையில் ஒரு பரப்பு 15 குழி வெற்றுக்காணி விற்பனைக்குண்டு. (54548) (4.6.3)

தொடர்பு: 021 221 9396, 071 338 6008

# பிரதேச சபைக்கு எதிரான மனு மேல் நீதிமன்றினால் தள்ளுபடி

யாழ்ப்பாணம், டிசெ. 2

வலி.மேற்குப் பிரதேச சபையினருக்கு எதிராகத் தாக்கல் செய்த வழக்கு விசாரணையின் பின்னர் யாழ்.மேல் நீதிமன்றினால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

சுழிபுரத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர், தமது வீட்டுக்கு அருகில் உள்ளவர்கள் மதில், கொங்கிறீற் கட்டுவதற்கு வலி.மேற்குப் பிரதேச சபையினர் அனுமதி கொடுத்தமை தவறு என்றும், அந்தக் காணி தமது காணி என்றும் எனவே அவர்களுக்குப் பிரதேச சபை வழங்கிய அனுமதியை நீக்குவதற்கான உறுதி கேள் எழுத்தாணை ஒன்றையும், மதில், கொங்கிறீற் என்பனவற்றை இடித்து அகற்றுவதற்கு ஆணையிட்டு எழுத்தாணை ஒன்றையும் வழங்குமாறு கோரி சட்டத்தரணிகள் ஊடாக வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

பிரதேச சபை, சபைத் தலைவர், சபைச் செயலாளர் ஆகியோருக்கு எதிராகவே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

எனினும் எதிர் மனுதாரர்கள் சார்பாக நீதிமன்றில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணிசுகாஷ், சட்டமுறைப்படி சகல ஆவணங்களும்பரீட்சித்துப் பார்க்கப்பட்டே பிரதேச சபையினால் அனுமதி வழங்கப்பட்டது. எனவே அவற்றை நீக்கவேண்டிய தேவை இல்லை. சபை பக்கச் சார்பாகச் செயற்படவும் இல்லை என்று வாதாடியிருந்தார். இரு தரப்பினரது வாதங்களையும் பரிசீலித்த மேல்நீதிமன்று குறித்த வழக்கைத் தள்ளுபடி செய்தது. (த-4)

**சேவை நலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்**

Best Wishes



**அ. சந்திரகுமாரன்**

B.Sc (Hons) PGDE (Merit) SLTS 1

**சேவை விவரம்**

1. நு/பரிசுத்த திருத்துவக் கல்லூரி 05.08.1984 - 04.08.1989
2. யா/மல்லாகம் மகா வித்தியாலயம் 05.08.1989 - 31.01.1990
3. யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி 01.02.1990 - 01.12.2014

இத்தனை காலமும் எமது பாடசாலையில் சேவையாற்றி இன்று (02.12.2014) செவ்வாய்க்கிழமை தனது 60ஆவது வயதில் ஓய்வுபெறும் எமது கணிதபாட ஆசிரியர் அ. சந்திரகுமாரன் அவர்களை பாராட்டுவதோடு அவரது ஓய்வு காலம் சீரும் சிறப்புடனும் அமைய வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**அதிபர், ஆசிரியர்கள், ஊழியர் நலன்புரி கழகம்**
**யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.**

**எமது ஸ்தாபகர்**
**திரு.வாமதேவா தியாகேந்திரன் அவர்களின்**
**63ஆவது அகவையில..........**



எப்படியெல்லாம் வாழலாம் என்று வாழும் இன்றைய மானிட சமூகத்தில் இப்படித்தான் வாழ வேண்டும் என்று தனக்கென்று ஒரு கொள்கையை வகுத்துக் கொண்டு வாழும் மனிதர்கள் சிலர்!

தான் வாழ்ந்தால் போதும் என்று நினைக்கும் சமூகத்தில் தன்னை சூழ்ந்த சமூகமும் துன்பமின்றி வாழ வேண்டும் என்ற உயர்ந்த உள்ளம் எங்களில் எத்தனை பேருக்குத் தான் வரும் எல்லா வசதி வாய்ப்புக்கள் இருந்தாலும் மற்றவர்களுக்கு உதவவேண்டும் என்ற மனம் எல்லோர்க்கும் எளிதில் வருவதில்லை அந்த மனம் கோடியில் ஒருவனுக்குத்தான். அந்த கோடியினையே தனது உறவுகளுக்கே உதவும் மனமில்லாத உறவுகள் மத்தியில் முகமறியா உறவுகளுக்கு கருணை உள்ளம் கொண்ட ஒரு பிறவிதான் எங்கள் தியாகி அவர்கள்

**நம்ப முடியவில்லை இப்படியும் ஒரு மனிதரா!**

இத்தகைய ஓர் உன்னத மனிதரை இந்த பிறந்தநாளில் வாழ்த்தும் வாய்ப்பு TCT சமூகத்திற்கு கிடைத்ததையிட்டு பெரும் உவகையடைகின்றோம். அந்த மனிதன் வாழும் சூழலில் அவர் நிழலில் நாமும் வாழுகின்றோம் என்று நினைக்கையில் எமக்கும் ஓர் பெருமிதம் அவர் தான் தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகர் உயர்திரு. வாமதேவா தியாகேந்திரன் அவர்கள். தளராதா அறச்சிந்தனை விடாமுயற்சியாய் உயர்ந்திட்ட செல்வம் பாலெனப் பொங்கிட காராம் பசுவானவர் எங்கள் தியாகி எல்லோர்க்கும் தங்கள் பேருக்கு ஏற்றாற் போல் செயல் அமைவதில்லை. இவருக்கு மட்டும் பெயருக் கேற்றாற் போல குணமும் அமைந்தது தான் அதிசயம்.

வசதி வாய்பபுக்கேற்ப மிடுக்கோ கர்வமோ இல்லாத ஒரு சாதரணமான மனிதனாக தோன்றும் இவரா அவர் என வியக்கவைக்கும் எல்லோரிடமும் பாசத்துடனும் மிகுந்த அக்கறையுடனும் பழகுவார்

மெழுகாய் உருகி ஒளியாய் திகழும் இந்த தியாக தீப ஒளியால் முதியோர், இளையோர் மாணவர்கள் என இன மத மொழி பேதமின்றி நாடு கடந்த எட்டுத்திசையிலும் வாழ்த்தொலிகள் ஒலிக்க இந்த நன்னாளில் பல்லாண்டு காலம் வாழ்க வாழ்க என இந்த நாளில் வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்**
**தியாகி அறக்கொடை நிறுவனம்,**
**ரீ.சீ.ரீ சிறுவர் இல்லம்**
**ரீ.சீ.ரீ பல்பொருள் விற்பனை நிலையம்**
**ரீ.சீ.ரீ விருந்தினர் விடுதி**

Best Wishes

**63ஆவது அகவையில்.......**



Best Wishes

'வில்லி' என்று அன்பாக அழைக்கப்படும் உயர்திரு **வாமதேவா தியாகேந்திரன்** அவர்களின் **63ஆவது அகவையில்** அவரை வாழ்த்துவதில் மனநிறைவடைகின்றோம்.

சுமார் 30 வருடங்களுக்கு முன்பு புலம்பெயர்ந்து சுவிற்ஸர்லாந்தில் குடியேறி சுயமாக தொழில் முயற்சி ஒன்றை ஆரம்பித்து இன்று சுவிஸில் ஒரு முன்னோடி தொழில் ஸ்தாபனமாக வளர்ச்சியடைந்து எங்களை போன்ற புலம்பெயர்ந்து வாழ்பவர்களுக்கு கவர்ச்சிகரமான சம்பளத்துடன் தொழில்வாய்ப்பை வழங்கும் எமது அண்ணன் வில்லி அவர்கள் எங்களுக்கு மட்டுமல்லாமல் பல வெளிநாட்டவர்களுக்கும் தொழில்வாய்ப்பை வழங்குவது போற்றதக்க ஒன்றாகும்.

உழைப்பின் ஒரு பகுதியை அறக்கொடை பணிகளுக்கு பயன்படுத்தும் வில்லி அண்ணன் அவர்களை பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றோம்.

**பணியாளர்கள்**

**Pneuhaus Interleo (Switzerland)**

# செய்திகள்

## இந்தியா- ஆஸி டெஸ்ட் திகதிகள் அறிவிப்பு

இந்தியா, ஆஸ்திரேலியா அணிகள் மோதும் டெஸ்ட் தொடருக்கான திகதிகளை ஆஸ்திரேலியா கிரிக்கெட் அமைப்பு அறிவித்துள்ளது.

இரு அணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் 4ஆம் திகதி நடக்கவிருந்தது. ஆஸ்திரேலிய வீரர் பிலிப் ஹியூக்ஸ் மரணமடைந்ததைத் தொடர்ந்து முதல் போட்டி தள்ளி வைக்கப்பட்டது.

இந்நிலையில் முதல் டெஸ்ட் போட்டி வரும் 9ஆம் திகதி அடிலெய்ட்டில் நடக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முதல் டெஸ்ட்: டிசெம்பர் 9–13, அடிலெய்ட்.
இரண்டாவது டெஸ்ட்: டிசெம்பர் 17–21, பிரிஸ்பேன்.
மூன்றாவது டெஸ்ட்: டிசெம்பர் 26–30, மெல்போர்ன்.
நான்காவது டெஸ்ட்: ஜனவரி 6–10, சிட்னி. (த)

## கேரளத்தை வீழ்த்திய சென்னை அரையிறுதி வாய்ப்பு பிரகாசம்




இந்தியன் சுப்பர் லீக் உதைபந்து தொடரின் லீக் ஆட்டத்தில் கேரளத்தை 1–0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது சென்னை அணி. இதன் மூலம், சென்னை அணி அரையிறுதிக்கு முன்னேறும் வாய்ப்பைப் பிரகாசப்படுத்திக் கொண்டது.

இரு அணிகளுக்கும் இடையிலான இந்த ஆட்டம் கொச்சியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. சென்னை அணி முக்கியமான முன்கள வீரர்களான இலனோ, மெண்டோஸா ஆகியோர் இல்லாமல் களமிறங்கியது. ஆட்டம் தொடங்கிய 20 ஆவது நிமிடத்தில் கேரள அணியின் தலைவர் டேவிட் ஜேம்ஸ் தசைப் பிடிப்பு காரணமாக களத்தில் இருந்து வெளியேறினார். இரு அணிகளுக்கும் கோல் அடிக்க வாய்ப்பு கிடைத்தும், அதை சரியாகப் பயன்படுத்தவில்லை.

ஆட்டம் முடிய மூன்று நிமிடங்கள் இருந்தபோது, மாற்று வீரராகக் களமிறங்கிய பிரேஸிலைச் சேர்ந்த புருனோ பெலிசரி, மைதானத்தின் நடுப்பகுதியில் இருந்து தனி ஆளாக பந்தைக் கடத்திச் சென்றார். அவருக்கு துணையாக வலது புறம் மற்றொரு சென்னை வீரர் ஓடிக் கொண்டிருந்தார். இருப்பினும், பெனால்டி பகுதிக்குள் நுழைந்ததும், கேரள பின்கள வீரர்கள் இருவரை அற்புதமாக ஏமாற்றி, தூரத்தில் இருந்து நேர்த்தியாக கோல் அடித்தார் பெலிசரி. யாருழ் எதிர்பார்க்காத கோல் இது. எனவே, மைதானத்தில் இருந்த 61,000 ரசிகர்களும் வாயடைத்து நின்றனர். கடைசி கட்டத்தில் இதற்கு கேரள வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை. இதனால் சொந்த மண்ணில் வெற்றியைப் பறிகொடுத்தது கேரளம். இந்த வெற்றியின் மூலம் 22 புள்ளிகளுடன் சென்னை அணி முதலிடத்தில் உள்ளது. கொல்கத்தா 17 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்திலும், கோவா, கேரளம் 15 புள்ளிகளுடன் 3,4 ஆவது இடங்களில் உள்ளன. எனவே சென்னை அணி அரையிறுதிக்கு முன்னேறுவது கிட்டத்தட்ட உறுதியாகி உள்ளது. (த)

## மூத்த வீரர்களிடம் கற்றுக் கொள்ளுங்கள்

சங்கக்கார, ஜெயவர்த்தன போன்ற மூத்த வீரர்களிடம் இருந்து இளம் வீரர்கள் அதிகமாகக் கற்றுக்கொள்ளவேண்டும் என இலங்கை அணித் தலைவர் மத்தியூஸ் கூறியுள்ளார்.

இங்கிலாந்து அணி இலங்கைக்குச் சுற்றுப் பயணம் செய்து 7 ஒரு நாள் போட்டிகளில் விளையாட உள்ளது. இதன் முதல் இரு போட்டிகளில் இலங்கை அணி வெற்றி பெற்றுள்ளது.

2ஆவது ஒருநாள் போட்டியில் வெற்றி பெற்ற பிறகு இலங்கை அணித் தலைவர் மத்தியூஸ் அளித்த பேட்டியில், இந்தியத் தொடரின் போது நாங்கள் முழுவதும் நம்பிக்கை இழந்தவர்களாக இருந்தோம்.

தற்போது கிடைத்திருக்கும் வெற்றியின் மூலம் இழந்த நம்பிக்கை மீண்டும் கிடைத்துள்ளது. முக்கியமாகக் களத்தடுப்பில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பந்து வீச்சும் சிறப்பாக அமைந்தது. டில்ஷான் நல்ல தொடக்கம் கொடுத்தார். இதன் காரணமாக இலக்குகள் விழாமல் பார்த்து கொள்ள முடிந்தது. அனுபவ வீரர்களான ஜெயவர்த்தன, சங்கக்கார நல்ல ஒரு இன்னிங்ஸை விளையாடினர். அணியில் இருக்கும் இளம் வீரர்கள் இவர்களிடம் இருந்து அதிக மாகக் கற்றுக்கொள்ள வேண்டும். இன்னும் 5 போட்டிகள் இருக்கின்றன. இதில் அதிகமான கவனத்துடன் செயல்பட வேண்டும் என்று கூறியுள்ளார். (த)

## தொடர்ச்சிகள்

### நேரமும்,

சட்டவிரோத ஆள்கடத்தலுக்கு எதிராகக் கூட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். பயங்கரவாதத்துக்கும் கடற்கொள்ளைக்கும் தொடர்பிருப்பது தெரிய வந்துள்ளது.

குறிப்பாக, இலங்கையில் இடம் பெற்ற போரின்போது தமிழீழ விடுதலைப் புலிகள் பல கப்பல்களை கடத்தியுள்ளனர். அரசியல் நோக்கங்களை அடைவதற்குப் பயங்கரவாதத்தைப் பயன்படுத்தும் பொருட்டு உலகின் எந்த நாடும் பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதியுதவியையோ அல்லது பயிற்சியையோ வழங்கக் கூடாது.

மனித உரிமைகள் தொடர்பாக இலங்கை ஐ.நாவில் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை தன்னை நியாயப்படுத்த வேண்டியுள்ளது. இதற்கர்க நேரத்தையும், பணத்தையும் அதிகமாகச் செலவிட வேண்டியுள்ளது .– என்றார்., (த–5)

### கொலைகார

ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும், ம்க்களைப் பற்றிச் சிந்திக்கும் அரசை நிலை நிறுத்தும் போராட்டமே இது.

நாட்டைச் சீரழிக்கும் ஊழல், வெள்ளை வான் இல்லாத ஆட்சியை உருவாக்கும் போராட்டம் இது. அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகளும் எம்முடன் இணைந்துள்ளன. பொது மக்களும் இணைந்துள்ளனர்.

கடந்த காலங்களில் இதுபோன்ற மனிதர்களைக் கொலை செய்யும், ஊழல் ஆட்சி நடத்தும் கொடூரமான அரசு நாட்டில் இருக்கவில்லை. 9 வருடங்கள் பொறுத்தேன். இனிமேலும் பொறுத்திருக்க முடியாது.

இந்தப் போராட்டத்துக்கு தலைமைத்துவம் கொடுக்க மைத்திரி முன்வந்தார். மைத்திரிபால சிறிசேன ஊழல், மோசடி செய்பவர் அல்லர். தெளிவான அரசியல் கொள்கை, நல்ல நோக்கம் மற்றும் அரசியல் ஞானம் உடையவர். எனவே, இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துப் புதிய ஆட்சியை உருவாக்க அவர் வழிவகுப்பார் என நான் உறுதியளிக்கின்றேன்.

நான் ஆட்சியில் இருந்த காலத்தில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஏன் நீக்கவில்லை என மஹிந்த ராஜபக்ஷ கேட்கின்றார். நான் ஆட்சிக்கு வந்து 2 மாதத்திலேயே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்து, புதிய அரசமைப்பு ஒன்றை உருவர்க்குவதற்காக எனது உயிரைப் பணயம் வைத்து முயன்றேன். ஆனால் எமது அரசிடம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதிகாரம் இல்லாததால், அதைச் செய்ய முடியாமல் போனது. 1999ஆம் ஆண்டு எமது அரசு முன்னிலையில் இருந்தது. பொருளாதார வளர்ச்சி 6 வீதமாக இருந்தது. ஆனால், எம்மிடம் மூன்றிலிரண்டு பெரும்பான்மை அதிகாரம் இருக்கவில்லை.

அதனால்தான் இப்போது மீண்டும் அந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளேன். 9 வருடங்கள் பொறுத்துவிட்டேன். எனக்கு வயதும் ஏறிக்கொண்டே செல்கிறது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்கு என்னைவிட நல்லவர் ஒருவரைத் தேடித் தருகிறேன் என்று கூறி மைத்திரிபால சிறிசேனவை கொண்டு வந்துள்ளேன்.

இன்னும் சில ஆண்டுகளில் எமது பிள்ளைகளுக்கு இந்த நாடு இல்லாமல் போய்விடும். நாட்டை மீட்டெடுக்க வேண்டும். அதற்காக எமது போராட்டத்தில் அனைவரும் இணைந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

நான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட்டு ஒருபோதும் போகமாட்டேன். அதனால் நீங்கள் அனைவரும் உங்களது ஆதரவைத் தாருங்கள். ஐக்கிய இலங்கையை உருவாக்கவும், அதிகாரம் மிக்க ஆட்சியை வீழ்த்தவும் சரியான தருணம் இது.

பக்கத்து வீட்டின் முன்னே புலி வந்து வீட்டுக்காரரரைத் தாக்க முற்படும்போது நாம் பார்த்துக் கொண்டிருந்தால், புலி அவரை சாப்பிட்டுவிடும். எனவே, அவரைக் காப்பாற்ற நாமும் அவருடன் சேர்ந்து போராடவேண்டும். அதற்காக ஒன்றிணைவோம். உருவாகப்போகும் புதிய அரசு ஐக்கிய தேசியக் கட்சியினதோ அல்லது வேறு எந்தக் கட்சியினது அரசோ அல்ல. இது அனைவரினதும் ஆட்சி. அனைவரும் ஒத்துழையுங்கள் என்றார். (உ–சி)

### ஐ.ம.சு.மு.

மனுத் தாக் கல் எதிர்வரும் 8 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. அதற்கு முதல் நாள் நண்பகல் 12 மணி வரையில் கட்டுப் பணம் செலுத்த முடியும்.

இந்நிலையில் நேற்றுக்காலை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சார்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம ஜயந்த, தேர்தல்கள் செயலகத்தில் கட்டுப் பணம் செலுத்தினார். அதன் போது, அமைச்சர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா, பசில் ராஜபக்ஷ, ஏ.எச்.எம்.பௌசி ஆகியோரும் அங்கு பிரசன்னமாகியிருந்தனர். (ற–5)


### அக்கறையற்று

இந்தச் சந்திப்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், மாவை. சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், "நாம் வடக்கு – கிழக்கின் தற்போதைய நிலவரங்கள் தொடர்பில் தெரிவித்தோம். இந்தியாவுக்குச் சென்று பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்த பின்னர், இங்குள்ள நிலைமைகள் எவ்வாறு இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டினோம்." – என்று கூறினார்.

"இராணுவப்பிரசன்னத்தில் எந்த மாறுதலும் இல்லை என்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்தினோம். அத்துடன் இலங்கையின் பெரும் பகுதி சீனாவிற்கு தாரை வார்க்கப்பட்டுள்ளது. அதே போன்று தமிழ் மக்கள் வாழும், இந்தியாவுக்கு அருகிலுள்ள வடக்கின் கரையோரமும் விரைவில் சீனாவுக்கு தாரை வார்க்கப்படும் அபாயம் உள்ளதைத் தெரிவித்தோம். இந்தியா தலையிட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினோம்."– என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

"எமது நிலைப்பாடுகளைக் கேட்டறிந்த பின்னர், தமிழ் மக்கள் விடயத்தில் பிரதமர் மோடி தலைமையிலான அரசு அக்கறையாக இருப்பதாக டோவல் குறிப்பிட்டார். அத்துடன் இங்கு ஏற்பட்டுள்ள முன்னேற்றத் தடத்தினை பார்வையிட்டதாகவும் அவர் தெரிவித்தார். தொடர்ந்தும் அவதானிப்போம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். (ற–5)



# அப்போட்டை யாரும் பழி சொல்லக் கூடாது



பிலிப் ஹியுக்ஸ் மறைவுக்கு காரணமான சீன் அப்போட்டுக்கு எங்களது ஆதரவு எப்போதும் உண்டு என ஆஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார்.

சிட்னியில் நடந்த உள்ளூர்ப் போட்டியில் சீன் அப்போட் வீசிய பவுன்சர் பந்து தலையில் தாக்கியதில், காயமடைந்த ஆஸ்திரேலிய வீரர் பிலிப் ஹியுக்ஸ் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

இது கிரிக்கெட் வீரர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. மேலும் தனிப்பட்ட முறையில் சீன் அப்போட் மனதளவில் பெரிதும் பாதிக்கப்பட்டார்.

இதைத் தொடர்ந்து இவருக்கு மனநல ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இதனையடுத்து ஹியுக்ஸ் இறந்ததற்காக, அப்போட்டை யாரும் பழி சொல்லக்கூடாது. இது எதிர்பாராமல் நடந்த சம்பவம் தான் என்று அவருக்கு ஆதரவாக ஆஸ்திரேலிய அணித் தலைவர் கிளார்க் பேசியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், அபோட்டுக்கு நான் உட்பட ஆஸ்திரேலிய அணியினர் அனைவரும் ஆதரவாக இருப்போம். வியக்கத்தக்க பந்து வீச்சாளரான இவருக்கு, பிரகாசமான எதிர்காலம் உள்ளது.

இவர் மீண்டும் விளையாட வரும்போது, துடுப்பெடுத்தாடும் முதல் வீரராக நான் இருப்பேன். ஹியுக்ஸ் இறப்புக்கு இரங்கல் தெரிவித்து, எங்களுக்கு ஆதரவு தந்த ஆஸ்திரேலிய மக்களுக்கு நன்றி. இவரின் திறமையைக் கண்டறிந்த பயிற்சியாளர்களுக்கு நன்றி.

ஹியுக்ஸ் குடும்பத்தினர் மிகப் பெரிய வலியை உணர்ந்திருப்பர். உலகில் உள்ள பலரின் பிரார்த்தனை மூலம், இதிலிருந்து இவர்கள் மீண்டு வருவர் என நம்புகிறேன் என்று கூறியுள்ளார். (த)

## நெருக்கடியில் குக்

அலஸ்டயர் குக் அணித் தலைவர் பதவியிலிருந்து விலகவேண்டும் என இங்கிலாந்து அணியின் முன்னாள் அணித் தலைவர் பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து 7 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகின்றது.

அந்த வகையில் இவ்விரு அணிகளுக்கும் இடையிலான முதல் இரண்டு ஒருநாள் போட்டிகளும் முடிவுற்ற நிலையில், இரு போட்டியிலும் இங்கிலாந்து அணி தோல்வியைத் தழுவிக் கொண்டது.

இந்நிலையில் இது தொடர்பாக தனது டுவிட்டர் பக்கத்தில் கருத்து வெளியிட்டுள்ள பீற்றர்சன், இங்கிலாந்து அணித் தலைவர் குக் பதவியிலிருந்து விலக வேண்டும் என்றும், இங்கிலாந்து வீரர்கள் அனைவரும் போட்டியில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் கூறியுள்ளார். (த)

## மயிரிழையில் உயிர் தப்பினார் பெக்காம்



இங்கிலாந்து உதைபந்தாட்ட அணியின் முன்னாள் தலைவர் டேவிட் பெக்காம் கார் விபத்தில் சிக்கியுள்ளார். 39 வயதான பெக்காம், அணிக்காக விளையாடும் காலத்தில் பிரபலமான உதைபந்தாட்ட வீரராக திகழ்ந்தார். இவரது மூத்த மகன் புரூக்ளின். இவர் லண்டனில் உள்ள ஆர்சனல் மைதானத்தில் உதைபந்தாட்டப் பயிற்சியில் ஈடுபட்டிருந்தார். பயிற்சி முடிந்ததும் பெக்காம் காரில் தனது மகனை அழைத்து வந்து கொண்டிருந்தார். அப்போது, அவர் கார் மீது இன்னொரு கார் வேகமாக வந்து மோதியது.

இதில் பெக்கமின் தோள் பட்டையில் காயம் ஏற்பட்டது. இது குறித்து தகவல் அறிந்த அவரது ரசிகர்கள் இந்த விபத்து துரதிருஷ்டவசமானது என்று சமூக இணையத்தளத்தில் கருத்து தெரிவித்துள்ளனர். (த)

## மெஸ்ஸின் தலையில் தாக்கிய ரசிகர்


பார்சிலோனா அணியின் வெற்றியைக் கொண்டாடியபோது நட்சத்திர வீரர் லியோனல் மெஸ்ஸியைச் சுற்றி இருந்த ரசிகர்களில் ஒருவர் தண்ணீர் போத்தலால் தாக்கினார்.

இதில் அவரது தலையில் இருந்து ரத்தம் கசிந்தது. பின்னர் தனது தலையைத் தடவிக் கொண்டே வெற்றிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டார்.

ஸ்பெயினில் உள்ள அணிகளுக்கு இடையிலான லா லிகா தொடரின் லீக் ஆட்டம் நேற்று முன் தினம் நடைபெற்றது. இதில் வலென்ஸியா– பார்சிலோனா அணிகள் மோதின.

பரபரப்பான ஆட்டத்தில் கடைசி நேரத்தில் (90 +3:14) பார்சிலோனா அணியின் செர்ஜியோ பஸ்கியூட்ஸ் ஒரு கோல் அடித்தார். இதனால் பார்சிலோனா அணி 1–0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியை வீரர்கள் தரையில் படுத்துக் குழுவாகக் கொண்டாடினர். அப்போது ரசிகர்கள் பக்கம் இருந்து ஒரு தண்ணீர்ப் போத்தல் வந்து மெஸ்ஸியின் தலையைத் தாக்கியது. அந்தத் தாக்குதலை தாங்க முடியாத மெஸ்ஸி வலியால் தலையைத் தடவிக் கொண்டே தனது அணியின் வெற்றியைக் கொண்டாடினார். (த)



# செய்திகள்

## வங்கப் புலிகளிடம் பணிந்தது சிம்பாப்வே




பங்களாதேஷ் மற்றும்சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக்கொண்ட ஒருநாள் தொடரின் ஐந்தாவது போட்டிமிர்பூரில் நேற்றையதினம் இடம்பெற்றது.

இந்த இரு அணிகளுக்கிடையிலான முதல் நான்கு போட்டிகளையும் பங்களாதேஷ் அணி வெற்றிகொண்டுதொடரைக்கைப் பற்றியுள்ள நிலையில் தொடரை வெள்ளையடித்து கைப்பற்ற வேண்டுமாயின்இந்தப்போட்டியிலும் வெற்றிபெறும் நோக்கில் பங்களாதேசும் வெள்ளையடிப்பிலிருந்து தப்பிக்க போட்டியை வென்றாக வேண்டும் என்ற கட்டாயத்தில்சிம்பாப்வேயும்களமிறங்கின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வேஅணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதன்படி ஆரம்ப வீரர்களாக களமிறங்கியவர்களில் றசா 9 ஓட்டங்களுடன் வெளியேறி தடுமாற்றத்தை தொடக்கி வைத்தார். ஆனாலும் அடுத்து வந்த சிபென்டா மசகட்சாவுடன் இணைந்து 79 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர சிம்பாப்வே சற்று வலுவான நிலைக்குச் சென்றது. அணியின் ஓட்டம் 95 ஆக இருந்தபோது 2வது இலக்காக மசகட்சா 52 ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்து வந்த வீரர்கள் எவருமே நிலைக்கத் தவறி வந்த வேகத்தில்துரிதமாக வெளியேறினர். பன்ஜன்கரா 0, நயும்பு 3, சரறா 0 என அடுத்தடுத்த பந்துகளில் வெளியேறி ரையுல் இஸ் லாமின் பந்தில் ஹற்றிக் ஆகினர். சோகங்கள் தொடர சிம்பாப்வே அணி 30 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும்இழந்து 128 ஓட்டங்களைமட்டுமே பெற்றது.

> போட்டியின் ஆட்டநாயகனாக முதல் போட்டியிலேயே ஹற்றிக் சாதனை புரிந்த ரையுல் இஸ்லாமும் தொடராட்ட நாயகனாக ரஹீமும் தெரிவானார்கள்

பந்து வீச்சில் பங்களாதேஷ் சார்பாக ரையுல் இஸ்லாம் 4 இலக்குகளையும், சகிப் அல் ஹசைன் 3 இலக்குகளையும், கொசைன் 2 இலக்கு ளையும் மோர்ரசா 1இலக்கையும்கைப்பற்றினர்.

129 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனும் இலகுவான இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணிக்கு அதன் முன்வரிசை வீரர்களான ரமீம் 10, ஹக்கியூ 8, சஹிப் அல்ஹசன் 0, றஹிம் 11 என சொற்ப ஓட்டங்களுடன் வெளியேறி ஏமாற்றம் கொடுத்தாலும் மத்திய வரிசை வீரரான முகமதுல்லாவின் சிறப்பான ஆட்டத்தினால் பங்களாதேஷ் அணி 24.3 பந்துப்பரி மாற்றங்களில் 5 இலக்கை இழந்து வெற்றியீட்டியது. அதிகபட்சமாக முகமதுல்லா 51 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார்.

பந்துவீச்சில் சிம்பாப்வே சார்பாக சரறா 3 இலக்குகளையும் பன்ஜன்கரா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.



ஆட்டநாயகனாக முதல் போட்டியிலேயே ஹற்றிக் சாதனை புரிந்த ரையுல்இஸ்லாமும் தொடராட்ட நாயகனாக ரஹீமும்தெரிவானார்கள்.

5 போட்டிகளைக் கொண்ட தொடரில் பங்ளாதேஷ் அணி5:0என்றஅடிப்படையில் தொடரைக் கைப்பற்றியுள்ளது. (சூ-ரி)

## டோனியை விலக சொல்லமாட்டேன்

டோனியை நான் ஏன் விலகச் சொல்ல வேண்டும் என்று ஐ.சி.சி தலைவர் ஶ்ரீனிவாசன்கேள்வி எழுப்பியுள்ளார். இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் துணைத் தலைவர் பதவி வகித்து வரும் டோனியை நான் ஏன் பதவி விலகச் சொல்ல வேண்டும் என்று அந்த நிறுவனத்தின் தலைவர் ஶ்ரீனிவாசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஐ.பி.எல் சூதாட்டம் குறித்த முத்கல் குழு அறிக்கை மீதான விசாரணையின் போது உச்ச நீதிமன்றம்ஶ்ரீனிவாசன், டோனி ஆகியோரது முரண்பட்ட இரட்டை நலன்கள்' குறித்துக் கேள்வி எழுப்பியது. மேலும், இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனம் சார்பாக முடிவுகளை எடுப்பவர் யார்? நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்தும், ஶ்ரீனிவாசன் குடும்பத்தினருக்கு இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்தில் உள்ள பங்கு மூலதனம் பற்றிய விவரங்கள் அனைத்தையும் உச்ச நீதிமன்றம் கேட்டது.

இதனையடுத்து இந்த விவகாரம் குறித்து வாயைத் திறந்துள்ள ஶ்ரீனிவாசன், நீதிமன்றத்தில்விசாரணை நடைபெற்று வருவதால், நான் கருத்துகள் எதையும் தெரிவிக்கக் கூடாது என்றார்.

டோனியை பொறுப்பிலிருந்து விலகக் கோருவீர்களா என்ற கேள்விக்கு நான் எதற்கு அவரை விலகச் சொல்ல வேண்டும்? என்றார். இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்தில் டோனியின் பங்கு என்ன என்று கேட்ட போதும்,நான் எதற்கு உங்களிடம்கூறவேண்டும்?என்றார். (கு)


**பணியாளர்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பிரபல நிறுவனத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

★சாரதி (Heavy Vehicle)

★விற்பனைப் பிரதிநிதி

அனுபவம் உள்ளவர்கள்

நாளை (03.12.2014) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சுயவிவரக்கோவையுடன் நேரில் வருகை தரவும்.

**கடை வாடகைக்கு**

யாழ். நகரில் பஸ்தரிப்பு நிலையத்துக்கு முன்பாக 330 சதுர அடியில் கடை வாடகைக்கு உண்டு.

தொடர்புகொள்ள: 077 613 1503 (54556) (10.6)

**காணவில்லை**

யாழ்.கச்சேரி கிழக்கு ஒழுங்கை, காட்டுக் கந்தோர் பகுதியிலிருந்து றொட்லைலர் வால் இல்லாத கறுப்பு நிற நாயைக் காணவில்லை. கண்டவர்கள் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(54552) (12.6) தொடர்பு: 077 672 2055

**JAFFNA ELECTRICALS**

NO.94 (6) Stanly Road, Jaffna.

021 222 2353

தரம் 6 முதல் O/L ற்கு | யாழ் நகரின் NO : 1

**எடிசன் அக்கடமி**

INTENT + EFFORT + GRACE = SUCCESS

யாழ்ப்பாணம் | கலட்டி | நல்லூர் | கொக்குவில் | சுன்னாகம்

புதிய கல்வி ஆண்டு 2015

**தரம் 6** மற்றும்

தரம் 6 முதல் O/L வரையான English Medium / தமிழ் மொழி மூலமான வகுப்புக்கள்

ஆரம்பம்

06.12.2014, சனிக்கிழமை

யாழ் எடிசன் காலை 8.00 மணி

கலட்டி எடிசன் மு.ப. 11.00 மணி

நல்லூர் எடிசன் பி.ப. 12.30 மணி

கொக்குவில் எடிசன் பி.ப. 2.30 மணி

சுன்னாகம் எடிசன் பி.ப. 4.30 மணி

எங்களின் சாதனைகள்

Contact 077 77 37 928 075 04 14 979

6 தடவை International Olympiad சாதனை

பெற்றோர்களே உங்கள் குழந்தைகளை எங்களிடம் ஒப்படையுங்கள்! அவர்களையும் சாதனையாளர் ஆக்குங்கள் !!

27 ஆவது வருட கல்விச் சேவையில்

புதிய **நாவலர்** கல்வி நிலையம்

ஆனைப்பந்தி, யாழ்நகர்.

கல்வியாண்டு-2015

தரம் 1 முதல் O/L வரை

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

05.12.2014 வெள்ளி 3.00 மணி

(சி/17959) (4.6.3) புதிய அனுமதிகளை இன்றுமுதல் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**SPOKEN ENGLISH**

WITH DIPLOMA CERTIFICATE

இளைஞர் யுவதிகள், மாணவர்கள், தொழில் புரிவோருக்கான 3 மாத வார, வார இறுதிநாள் SPOKEN ENGLISH பயிற்சிநெறி ஆரம்பம்.

ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் கூட எமது இப்பயிற்சியில் இணைந்து பயிற்சிபெற முடியும்.

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 06.12.2014 சனிக்கிழமை

1.காலை - 10.00-12.00 2.மாலை - 03.00-05.00

இப்பிரிவில் இணைவோருக்கு மட்டும் அனுமதி, பாடப்புத்தகங்கள் சான்றிதழ் மட்டும் இலவசம்

SAAMSON Experts in English Training

279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.

021 320 3313 077 621 4567


## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை காசிநாதர் (காசி, குஞ்சன்)

போக்கறுப்பு, முள்ளியான் நித்தியவெட்டையைப் பிறப்பிடமாகவும், யோகபுரம் மத்தி குஞ்சுகுளத்தை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை காசிநாதர் நேற்று (01.12.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளை காலஞ்சென்ற சோதி தம்பதியரின் அன்பு மகனும், வல்லிபுரம், செல்வராணி, ரூபராணி, சுந்தரராணி, மகேஸ்வரி, பரமேஸ்வரி சாந்தகுமாரி காலஞ்சென்ற புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரரும், இராஜகுமாரியின் அன்புக் கணவரும், கஜேந்திரன் (இலங்கை வங்கி-மல்லாவி), கஜேந்தினி, கவீந்திரன் (இலங்கை வங்கி-மாங்குளம்), கமலினி (3ஆம் வருட கலைபீட மாணவி, யாழ். பல்கலைக்கழகம்), லோஜினி, கிசாஜினி நிசா ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரிசாந்தினி, ராம்குமார் காலஞ்சென்ற விஜயகாந்தன் ஆகியோரின் அன்பு மாமனும் டிலாஜினி, திவானா, தனுசன், திசீபன், அக்சஜன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2014) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்துக்காக அனிஞ்சியன்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

யோகபுரம் மத்தி, குஞ்சுகுளம், 077 018 5576, 077 830 7265 (54563) (10.6)

தகவல்: குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.